சித்தாந்தச் செல்வர்

# க. வெள்ளைவாரணனார்




பதிப்பாசிரியர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி

முனைவர் ச. சிவகாமி



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழறிஞர் வரிசை - 10

# சித்தாந்தச் செல்வர்

# க.வெள்ளைவாரணனார்

பதிப்பாசிரியர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி

முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை

மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA

திங்கள் (தொடர்) ஆய்வுக் கருத்தரங்கம் - தமிழறிஞர் வரிசை - 10
சித்தாந்தச் செல்வர் க. வெள்ளைவாரணனார் (30-01-2004)


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Cittānta-c-Celvar Ka. Veḷḷaivāraṇaṉār** |
| Editors | : | Dr. S. Krishnamoorthy<br>Director<br>IITS, Taramani, Chennai - 600 113.<br><br>Dr. S. Sivakami<br>Associate Professor<br>IITS, Taramani, Chennai - 600 113. |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Taramani, Chennai - 600 113.<br>Ph: 22542992 |
| Publication No | : | 535 |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Date of Publication | : | 2005 |
| Paper Used | : | 18.6 kg TNPL Map litho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | viii +80 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 25/- (Rupees Twenty five Only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road,<br>Chennai - 600 004. |
| Subject | : | Biography & Criticism on<br>K. Vellaivarananar |


---

கட்டுரையாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் **சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

# அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒல்லும்வகையெல்லாம் தமிழை வளர்ப்பதில் அயராது பாடுபட்டுவருகிறது. வாரக்கருத்தரங்கு, திங்கள் கருத்தரங்கு, ஆண்டுக்கருத்தரங்கு, அறக்கட்டளைக் கருத்தரங்கு போன்ற பல்வேறு கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்தி அக்கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாக வெளியிட்டுத் தமிழுக்கு வளம் சேர்த்து வருகிறது. தமிழாய்வுக்கு உடனடித் தேவை என்ன என்பதை உணர்ந்து அதைச் செயல்படுத்திவருவதே இதற்குக் காரணமாகும்.

இந்நிறுவனம் தொடக்கக் காலத்திலிருந்து பல்வேறு பொருண்மை களில் கருத்தரங்குகளை நடத்திவருவதைத் தமிழுலகம் நன்கு அறியும். தமிழுக்கென்று அமைந்த மரபையும் பாரம்பரியத்தையும் எடுத்துக்காட்டும் வகையில் தமிழ் இலக்கியக் கொள்கை என்ற தொடர்கருத்தரங்கை இந்நிறுவனம் நடத்திவந்தது. தமிழர் கலைச் செல்வங்கள் என்ற தலைப்பில் தொடர் கருத்தரங்காகத் தமிழ் மரபினை உணர்த்தும் வகையிலும் கருத்தரங்குகளை நடத்திவந்தது. இவையன்றியும் பல்வேறு இலக்கியப் பொருண்மைகளில் கருத்தரங்கை நடத்திவந்தபெருமை இந்நிறுவனத்திற்கு உண்டு. இந்நிறுவனம் தன் அளவிலும் பிற நிறுவனங்களோடு சேர்ந்தும் இத்தகைய கருத்தரங்குகளை நடத்தித் தமிழாய்வுக்குச் சிறப்புச் சேர்த்து வந்துள்ளது. இக்கருத்தரங்குகளைத் தொடர்ந்து தமிழறிஞர்களை மையப்படுத்திய நிலையில் தொடர்கருத்தரங்கு ஒன்றைத் தொடங்க எண்ணியது. இவ்வகையில் **'தமிழறிஞர் வரிசை'** என்ற பெயரில் தொடர் கருத்தரங்கை நடத்துவதன்மூலம் அறிஞர் பலரின் அரிய தமிழ்த் தொண்டுகளை எல்லாம் இவ்வுலகிற்கு எடுத்துக்காட்ட முடியும் என்ற நிலையில் இக்கருத்தரங்கை நடத்த முடிவு செய்யப்பட்டது.

வரலாறு எழுதப்படாத தமிழறிஞர்களுக்கு ஒரு வரலாற்றை உருவாக்குவதன் மூலம் அத்தமிழறிஞர்களைப் பற்றிய செய்திகள் ஆவணப் படுத்தப்படும். அவ்வாறு ஆவணப்படுத்தப்படுவதால் இத்தமிழறிஞர்கள் இம்மண்ணில் பிறந்த பயனும், இம்மண்ணிற்கும், மொழிக்கும், இனத்திற்கும் ஆற்றிய அரும்பெரும் பணிகளும் பின்வருவோரால் போற்றப்படும் நிலை உருவாகும். இதனால் இத்தமிழறிஞர் வரிசைக்கருத்தரங்கை வாழ்க்கை வரலாற்றுக் கருத்தரங்காக அமைக்காமல்

ஆய்வுக்கருத்தரங்கமாக அமைத்துக்கொள்ள முடிவு எடுக்கப்பட்டது. அவ்வகையில் தமிழுக்கு உழைத்து மறைந்த அறிஞர்கள் பலநூறுபேர் நம்முன் வந்தனர். அவர்கள் அனைவரைப் பற்றியும் இத்தொடர் கருத்தரங்கம் அமையவேண்டும் என்பது எங்கள் அவா. எனவே அனைவரையும் பட்டியலிட்டுப் பகுதி பகுதியாக இத்தொடர் கருத்தரங்கை நடத்த முடிவு செய்யப்பட்டது. அதில் முதல் கட்டமாகப் பதினாறு அறிஞர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இத்தமிழறிஞர்களின் முதல் பட்டியலைக் கொண்டு தமிழறிஞர் களைப் பற்றிய கருத்தரங்கு நடைபெறும் நாள், கட்டுரை வழங்க வேண்டிய நாள் பற்றிய குறிப்புகளுடன் முதல் அட்டவணை தயார் செய்யப்பட்டது.

இப்பதினாறு தமிழ் அறிஞர்களைப் பற்றியும் கட்டுரைகள் வழங்கத் தமிழகத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் பணி புரியும் ஆசிரியர்கள் அழைக்கப்பட்டனர்.

ஒரு திங்களுக்கு ஒரு தமிழறிஞர் என ஒருவரைப் பற்றிய கருத்தரங்கில் 5 அல்லது 6 பேர் ஆய்வு செய்யவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் கட்டுரைகள் கோரப்பட்டன. ஒருவரைப் பற்றிப் பலர் ஆய்வுசெய்து கட்டுரை வழங்குவதால் அவ்வறிஞருடைய பன்முக ஆளுமையை வெளிக்கொணர முடியும். அத்தமிழறிஞர்களின் வாழ்க்கை வரலாறு முதலில் அமையவேண்டும்; பதிப்பு, மொழிபெயர்ப்பு, திறனாய்வு போன்ற நிலைகளில் அவ்வறிஞர் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து இடம்பெறவேண்டும் என்ற நோக்கில் கட்டுரைகள் பெறப்பட்டன. இக்கருத்தரங்கில் மிகுந்த விருப்பத்துடன் ஆய்வாளர்கள் கட்டுரை வழங்க முன்வந்தமை உண்மையிலேயே எங்களுக்கு வியப்பு அளித்தது. முறையாகத் திட்டமிடப்பட்டுச் செயல்படத் தொடங்கிய **இத்திங்கள் தொடர் ஆய்வுக்கருத்தரங்கு - தமிழறிஞர் வரிசை** புதுப்பொலிவுடன் எண்ணிய வண்ணம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இம்முதல் பட்டியலைத் தொடர்ந்து இரண்டாவது பட்டியல், மூன்றாவது பட்டியல் எனத் தமிழறிஞர் வரிசை ஆண்டுக் கணக்கில் நடைபெறும் தொடர் கருத்தரங்காக உருவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய, நாளைய தலைமுறையினர்க்கும் தமிழ் உலகிற்கும் ஒரு சிறந்த ஆவணமாக அமைய இருக்கும் இத்தமிழறிஞர் வரிசைக் கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாகத் தொடர்ந்து வெளியிடுவதில் இந்நிறுவனம் பெருமை கொள்கிறது. எப்போதும் ஒரு பணியைத்

திட்டமிட்டு எதிர்கால நோக்கில் செயல்படுத்தினால் அத்திட்டம் வெற்றியடைவது உறுதி என்பதற்குச் சான்றாக இத்தமிழறிஞர் வரிசைத் தொடர் கருத்தரங்கு அமையலாம்.

தமிழறிஞர் வரிசையின் பத்தாம் கருத்தரங்காகச் சித்தாந்தச் செல்வர் க.வெள்ளைவாரணனார் அவர்கள் பற்றிய கருத்தரங்கு அமைகிறது. இக்கருத்தரங்கில் ஐவர் கட்டுரை வழங்கியுள்ளனர். இக்கட்டுரைகள் க.வெள்ளைவாரணனார் அவர்களின் வாழ்வியலையும், அவர்தம் இலக்கியப்பணியையும், இலக்கணப் பணியையும், சமுதாயப்பணியையும், இசைத்தமிழ்ப் பணியையும் தமிழ் உலகிற்குக் கொண்டுசெல்லும் வகையில் அமைந்துள்ளன. பெருமைமிகு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகவும், மொழிப்புல முதன்மையராகவும் விளங்கிய திரு. வெள்ளைவாரணனார் அவர்கள் 14-1-1917ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் திருநாகேஸ்வரத்தில் பிறந்தார். இவர் சித்தாந்தச் செம்மல், தமிழ்ப்பெரும் புலவர், திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர், சங்க நூல் பெரும் புலமைச் சான்றோர், திருமுறை உரைமணி, செந்தமிழ்ச் சான்றோர், கலைமாமணி, சிவக்கவிமணி, தமிழ்ப் பேரவைச்செம்மல் ஆகிய பட்டங்களையும் விருதுகளையும் சிறப்புகளையும் பெற்ற பெருமைக்குரியவர்.

தமிழையும், தமிழ் இசையையும் ஒருங்கே கற்றுத் தேர்ந்தவர். ஆழ்ந்த தமிழ்ப்பற்று மிக்க பேராசிரியராக விளங்கிய இவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1930ஆம் ஆண்டு வித்துவான் வகுப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சிபெற்று அப்பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையிலேயே ஆராய்ச்சியாளராகவும் பின்னர்ப் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் பணியாற்றிய சிறப்பினைப் பெற்றவர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலும் விரிவுரையாளராகப் பணியாற்றி இருக்கிறார். சித்தாந்தச் செல்வர் க.வெள்ளைவாரணனார் என்று கூறியவுடனேயே கீழ்க்காணும் நூல்கள் நினைவுக்கு வரும்.

1. பன்னிருதிருமுறை வரலாறு
2. சைவசித்தாந்தச் சாத்திர வரலாறு
3. இலக்கிய வரலாறு (தொல்காப்பியம்)

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வாளராகப் பணியாற்றிய காலத்தில் கம்பராமாயணச் செம்பதிப்பு வெளியீட்டில் பணியாற்றிய பெருமை இவருக்கு உண்டு.

கம்பராமாயணத்தின் பல படலங்களுக்கு உரை எழுதித் தமிழுக்கு வளம் சேர்த்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழத்தில் பணியாற்றிய பிறகு

தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் இலக்கியத்துறைப் பேராசிரியராகவும், ஆட்சிக்குழு உறுப்பினராகவும் விளங்கினார். துணைவேந்தர் பொறுப்புக்குழு நிலையிலும் இவர் பணி தொடர்ந்தது. அமைதியும், ஆழ்ந்த தமிழ்ப் பற்றும், பரந்த தமிழ்ப்புலமையும் கொண்டு தமிழ்க்கடல் என வாழ்ந்த பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் அவர்கள் சிறந்த படைப்பாளராகவும் விளங்கினார்.

தமிழகத்தில் இந்தி திணிக்கப்பட்டபோது அப்போது நடைபெற்ற போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் தன் எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையிலும் 'காக்கைவிடுதூது' என்ற பெயரில் ஒரு நூலைப் படைத்தளித்தார்.

இத்தகு பன்முகச் சிறப்புகளையெல்லாம் ஒருங்கே காணும் வகையில் இவருடைய நூல் இன்று வெளிவருகிறது. இந்நூல் தமிழ் உலகிற்குப் பெருமை சேர்த்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் கூடுதல் வரவாக அமையும் என்பதில் ஐயமில்லை. தமிழறிஞர் வாழ்க்கை வரலாற்றை ஆவணப்படுத்தும் இத்தகு அரிய முயற்சியில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தன்னை முழுமையாக ஈடுபடுத்தித் தமிழறிஞர் வரிசைக் கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்தி நூல்களை வெளிக்கொணர்வதில் பெருமையடைகிறது.

இத்தொடர் கருத்தரங்கிற்கு ஒருங்கிணைப்பாளராக இருந்து கருத்தரங்கு சிறப்புற நடைபெற முழு ஒத்துழைப்பு நல்கிய இலக்கியம் மற்றும் சுவடிப்புல இணைப்பேராசிரியர் முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளிஅச்சுக்கோப்புச் செய்த திருமதி இரா. வெண்ணிலாவிற்கும், அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் பாராட்டுகள்.

சென்னை
23-02-05

இயக்குநர்

# கட்டுரையாளர்

**முனைவர் இளமதி சானகிராமன்**
இணைப் பேராசிரியர், தமிழியற் புலம்
புதுவைப் பல்கலைக்கழகம்
பாண்டிச்சேரி

**முனைவர் வ. குருநாதன்**
இணைப் பேராசிரியர், இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

**முனைவர் ஜெ. சந்திரசேகரன்**
பேராசிரியர், தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்

**முனைவர் அரிமளம் சு. பத்மநாபன்**
இசைப் பேராசிரியர்
இலாசுப்பேட்டை, பாண்டிச்சேரி

**முனைவர் க. பூரணச் சந்திரன்**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

# உள்ளே

வாழ்வியல்

— ஜெ. சந்திரசேகரன் 1

இலக்கியப் பணி

— க. பூரணச்சந்திரன் 17

இலக்கணப் பணி

— வ. குருநாதன் 29

சமயப் பணி

— இளமதி சானகிராமன் 45

இசைத்தமிழ்ப் பணி

— அரிமளம் சு. பத்மநாபன் 64

# வாழ்வியல்

ஜெ. சந்திரசேகரன்

## புகழொடு தோன்றிய புலமையாளர்

தஞ்சை மாவட்டம் திருநாகேச்சரத்தில் 1917ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 14-ஆம் நாள் வெள்ளைவாரணனார் பிறந்தார். கந்தசாமி முதலியார் அமிர்தம் அம்மையார் ஆகியோர் இவர் பெற்றோர் ஆவர். இவர் செங்குந்தர் மரபினைச் சார்ந்தவர். வெள்ளைவாரணனாரின் தமக்கையார் சொர்ணம் ஆவார். அண்ணன்மார் பொன்னம்பலம், நடேசன் ஆவர். இவருடைய பெரிய தந்தையார் பிறந்த நாளில் இவர் பிறந்ததால் பெரிய தந்தையாரின் பெயரையே இவர் தந்தையார் இவருக்கு வைத்தார்.

திருநாகேச்சரத் தொடக்கப் பள்ளியில் வெள்ளைவாரணனார் மூன்றாம் வகுப்புவரை கல்வி கற்றார். வெள்ளைவாரணனாருக்குத் தமிழ் இலக்கியத்தில் குறிப்பாகச் சைவ சமய இலக்கியத்தில் ஈடுபாடு வரக்காரணம் இவர் முன்னோரின் தமிழ்ப்பற்றும் சைவப்பற்றுமே. இவர் தந்தையார் கந்தசாமியார் தமிழிலக்கியப் புலமைமிக்கவர். பாட்டனார் மெய்கண்டார் தமிழ் இலக்கியங்களுள் சைவ இலக்கிய ஈடுபாடு மிக உடையவர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கல்வி பயின்ற வெள்ளைவாரணனார் தமிழையும் தமிழிசையையும் விரும்பிக் கற்றார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆங்கில மொழிக்கே சிறப்பிடம் இருந்தது. தமிழில் வித்துவான் தேர்வு எழுத வேண்டுமென்றாலும் வடமொழியையும் கற்க வேண்டிய கட்டாயம் இருந்தது. தமிழில் எவ்வளவு புலமை பெற்றிருந்தாலும் வடமொழித் தேர்வையும் எழுதி வெற்றி பெற வேண்டிய கட்டாயம் இருந்தது. அந்நிலையில் இவர் தமிழையும் தமிழிசையையும் கற்க விரும்பிய சூழலில் தமிழ்ப்பற்று மிக்கவராக விளங்கினார்.

1928ஆம் ஆண்டு வெள்ளைவாரணனார் வாழ்க்கையில் திருப்பத்தை ஏற்படுத்திய பெருமைபெற்றது. அவ்வாண்டு அருள்மிகு நாகநாதசுவாமிகள் ஆலயத்தைத் தரிசிக்க வந்த அரிமழம் அ. அரு. அண்ணாமலைச்செட்டியார், கந்தசாமி முதலியார் இல்லத்தில் தங்கினார். இறைவழிபாடு, தமிழார்வம், நல்லொழுக்கம்

போன்றவற்றை அவ்வில்லத்தில் உள்ள வெள்ளைவாரணனாரிடம் கண்ட அண்ணாமலைச் செட்டியார் மகிழ்ந்து திருப்பெருந்துறையிலுள்ள தேவாரப் பாடசாலையில் அவரைச் சேர்த்தார். அங்குக் காஞ்சிபுரம் பூசை நமச்சிவாய முதலியாரிடம் கற்கும் பெரும்பேற்றினைப் பெற்றார். இவருக்குத் தமிழிலக்கியப் புலமையையும் இசைப் பயிற்சியையும் திருப்பெருந்துறையே தோற்றுவித்தது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பயில பெருவிருப்பம் கொண்டார் வெள்ளைவாரணனார்; அதன் அடிப்படையில் 1930-ஆம் ஆண்டு வித்துவான் வகுப்பில் சேர்ந்து கல்வி பயின்றார். வெள்ளைவாரணனார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றபோது தமிழ்த்துறைத் தலைவர்களாக விளங்கிய பேராசிரியர்கள் அறிஞர் கா. சுப்பிரமணியப் பிள்ளை (1930), விபுலானந்தர் (1931-1933), நாவலர் சோமசுந்தர பாரதியார் (1933-1938) ஆவர். நாவலர் சோமசுந்தர பாரதியாரின் உள்ளங்கவர்ந்த மாணவராக விளங்கிய பெருமை வெள்ளைவாரணனாருக்கு உண்டு.

### புலமைக்கு வித்திட்ட புலமையாளர்கள்

க. வெள்ளைவாரணனாருக்குத் தமிழ் ஆர்வமும், இசை ஆர்வமும், நூல் எழுதும் ஆர்வமும் வலுப்பெற்ற இடம் அண்ணாமலைப் பல்கலைக்கழகமே என்றால் அது மிகையில்லை. அவர்தம் புலமைக்கு வித்திட்ட புலமையாளர்களின் வழிகாட்டுதலே அதற்குக் காரணமாக அமைந்தது.

பொன்னோதுவா மூர்த்திகள், சர்க்கரை இராமசாமிப் புலவர், ஆர். கந்தசாமியார், தி.பொ. பழநியப்பப்பிள்ளை, ரா. ராகவையங்கார், ந.மு. வேங்கடசாமிநாட்டார், ரா.பி. சேதுப்பிள்ளை போன்றோரே இவர் புலமைக்கு வித்திட்ட புலமையாளர்கள் ஆவர். அன்னாரின் தமிழ் ஆர்வமும், தமிழ் கற்பிக்கும் முறையும், நூல் நயம் காணும் நுண்மாண் நோக்கமும் வெள்ளைவாரணனாரைப் பிற்காலத்தில் சிறந்த புலமையாளராக்கின.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் வகுப்பில் சேர்ந்த வெள்ளைவாரணனார் ஐந்தாண்டுகள் முறையாகக் கல்வி பயின்று 1935ஆம் ஆண்டில் வித்துவான் தேர்வில் முதல் வகுப்பில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேயே ஆய்வு மாணவராகச் சேர்ந்தார். 1935-1937 ஆகிய இரண்டு ஆண்டுகளில் தொல்காப்பியம் நன்னூல்

எழுத்ததிகாரம் என்ற ஒப்பீட்டு நூலை எழுதி முடித்தார். இந்நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆய்விதழில் (The Journal of Annamalai University) 1941 முதல் தொடர்ந்து வெளியிடப்பெற்று 1962இல் நூலாக வெளிவந்தது.

## கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி

கரந்தைத் தமிழ்ச்சங்க வெள்ளி விழா 1938ஆம் ஆண்டு நடைபெற்றது. அப்போது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக விளங்கியவர் த.வே. உமாமகேசுவரனார் ஆவார். ச. சோமசுந்தர பாரதியார் வெள்ளைவாரணனாரைக் கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழாவிற்குத் தொண்டாற்ற அனுப்பி வைத்தார். வெள்ளைவாரணனாரின் தொண்டு வெள்ளி விழாவிற்குத் தலைமை தாங்க வந்திருந்த திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமியாரை ஈர்த்தது.

கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்லூரியில் 30-06-1938 அன்று வெள்ளைவாரணனார் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். சோமசுந்தர பாரதியாரின் பரிந்துரையே இதற்குக் காரணமாயிற்று. 1943வரையில் கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்லூரியில் பணியாற்றினார்.

## இல்லற இன்பம்

செங்கல்பட்டு மாவட்டம் மாணாம்பதி என்ற ஊரைச் சேர்ந்த ம.அ. கனகசபை முதலியாரின் இரண்டாம் மகள் பொற்றடங்கண்ணியை 1939ஆம் ஆண்டு சனவரித் திங்களில் வாழ்க்கைத் துணைநலமாக ஏற்றார்.

1952ஆம் ஆண்டு பொற்றடங்கண்ணிக்குப் பெண் குழந்தை பிறந்தது. தம் செல்வ மகளுக்கு மங்கையர்க்கரசி எனும் பெயர் சூட்டி வெள்ளைவாரணனார் மகிழ்ந்தார்.

1972ஆம் ஆண்டு அன்புமகள் மங்கையர்க்கரசியைச் சென்னை சொ. முருகேசனாரின் மகன் திருநாவுக்கரசுக்குத் திருமணம் செய்வித்தார். மருமகன் திருநாவுக்கரசு மருத்துவராகப் பட்டம் பெற்றவர். சிறந்த மருத்துவராகத் திகழ்கிறார்.

## பல்கலைக்கழகங்களும் பணிச்சிறப்பும்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் 1943ஆம் ஆண்டு விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.

1962ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேயே இணைப் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

1977ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவரானார். இந்திய மொழிப்புல முதன்மையராகவும் பதவி உயர்வு பெற்று 1979 வரை பணியாற்றினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்பு 1979ஆம் ஆண்டு முதல் 1982ஆம் ஆண்டு வரையில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சிறப்பு நிலைப் பேராசிரியராக அமர்த்தப்பட்டார். தொல்காப்பியப் பொருளதிகார உரைவளப் பதிப்புகளை எழுதிப் பெருமைபெற்றார்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் 1981ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. வ.அய். சுப்பிரமணியன் முதல் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற இவர் க. வெள்ளைவாரணனாரின் புலமையை நன்கு அறிந்திருந்தார். தமிழ்ப் பல்க்லைக்கழகத் துணைவேந்தரின் அழைப்பின் பேரில் 1982ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியத் துறையில் சிறப்புநிலைப் பேராசிரியராகப் பணியாற்றினார். துறைத் தலைவராகவும் நிகர்நிலைத் துணைவேந்தராகவும் பணியாற்றும் வாய்ப்பினையும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பெற்றார். தமிழையே மூச்சாகவும் பேச்சாகவும் கொண்டு தொண்டாற்றிய வெள்ளைவாரணனார் 13-6-88இல் இயற்கை எய்தினார்.

## பட்டமும் விருதும்

இவர்தம் தமிழ்ப்பணியைப் பாராட்டித் தமிழகம் இவருக்கு அளித்த பட்டங்களும் விருதுகளும் பல.

'சித்தாந்தச் செம்மல்' எனும் பட்டத்தை 1944ஆம் ஆண்டு தூத்துக்குடிச் சைவ சித்தாந்தச் சபை வழங்கியது.

'தமிழ்ப் பெரும் புலவர்' என்ற பட்டத்தை 1970ஆம் ஆண்டு திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனம் வழங்கிச் சிறப்பித்தது.

'திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர்' என்ற பட்டத்தைத் தருமபுர ஆதீனம் 1971ஆம் ஆண்டு வழங்கியது.

'சங்க நூல் பெரும்புலமைச் சான்றோர்' என்ற பட்டத்தைத் தமிழக ஓதுவார் சங்கம் 30-1-1983ஆம் ஆண்டு அளித்தது.

'திருமுறை உரைமணி' என்ற பட்டத்தைக் காஞ்சிபுரம் ஸ்ரீசங்கரமடம் 1984ஆம் ஆண்டு அருளியது.

'செந்தமிழ்ச் சான்றோர்' என்ற பட்டத்தை 1984ஆம் ஆண்டு கரந்தைத் தமிழ்ச்சங்கம் அளித்தது.

'கலைமாமணி' விருதைத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 1985ஆம் ஆண்டு (26-1-85) வழங்கியது.

'சிவக்கவிமணி' என்ற பட்டத்தைச் சென்னை சிவநேயர் பேரவை 1988ஆம் ஆண்டு (15-5-88) அளித்தது.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் 7-4-73இல் இவர் இயற்றிய 'பன்னிரு திருமுறை வரலாறு' இரண்டாம் பகுதிக்கு முதல் பரிசு வழங்கி கௌரவித்தது.

'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற பட்டத்தை மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் 1989ஆம் ஆண்டு (5-7-89) அளித்தது. இது மறைவுக்குப் பின் இவருக்குக் கிடைத்த பட்டம்.

## அணிந்துரை

விபுலானந்த சுவாமிகள் யாழ்நூலை இயற்றிப் பெருமை பெற்றவர். அந்நூலுக்கு 1947ஆம் ஆண்டு சிறப்புப்பாயிரம் இயற்றிப் பெருமை சேர்த்தவர் க. வெள்ளைவாரணனார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய சு. சாமி ஐயா 'மங்கையர்க்கரசி வெண்பா' எனும் நூலை உரை எழுதிப் பதிப்பித்தார். இந்நூலுக்கும் அணிந்துரை எழுதிச் சிறப்புச் சேர்த்தார்.

## படைப்புகள்

**'சங்ககாலத் தமிழ் மக்கள்'** எனும் நூல் இவரால் எழுதப்பட்டது. சென்னை 'நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி' எனும் தனியார் நிறுவனம் இந்நூலை 1948ஆம் ஆண்டு வெளியிட்டது.

**'குறிஞ்சிப்பாட்டாராய்ச்சி'** என்னும் இவர் எழுதிய நூலைத் திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது. இது சொற்பொழிவு நூலாகும்.

**'தேவார அருள்முறைத் திரட்டு'** எனும் உரைநூலை வாழ்மங்கலம் அ. மலைப்பெருமாள் முதலியார் மணி விழா மலர் வெளியீடாக 1963ஆம் ஆண்டு வெளியிட்டார்.

**'சேக்கிழார் நூல்நயம்'** என்னும் பெரியபுராணச் சொற்பொழிவு நூல் 1970ஆம் ஆண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பெற்றது.

**'அற்புதத் திருவந்தாதியுரை'** எனும் நூல் ஒரத்தூர் குஞ்சிதபாதம் பிள்ளை அவர்களின் மணிவிழாவில் வெளியிடப்

பெற்றது. 'திருமந்திர அருள் முறைத் திரட்டு' என்னும் நூல் 1973ஆம் ஆண்டு தில்லைத் தமிழ்மன்றத்தின் வழி வெளியிடப் பெற்றது. 'திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார்' - விளக்கவுரை என்ற நூலைக் காசியில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகாசமாசத்தின் 76ஆம் ஆண்டு விழாவில் ஸ்ரீகாசி மடம் வெளியிட்டுச் சிறப்பித்தது.

## அண்ணாமலைப் பல்கலைக்கழக வழித் தமிழ்ப்பணி

அரபத்த நாவலர் இயற்றிய நாட்டிய நூல் பரதசங்கரகம். இந்நூலை 1954ஆம் ஆண்டு வெள்ளைவாரணனாரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது.

'தமிழ் இலக்கிய வரலாறு - தொல்காப்பியம்' என்ற நூலை 1957ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது.

'தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம்' எனும் நூலும் அண்ணாமலைப் பல்கலைக்கழக வழியே வெளிவந்தது.

'பன்னிரு திருமுறை வரலாறு' முதற்பகுதியும் இரண்டாம் பகுதியும் இவரால் எழுதப்பெற்ற நூல்களுள் இவருக்குப் பெருமைதேடித் தந்த நூல்களாகும். இந்நூல்களும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாலேயே வெளியிடப்பெற்றன.

'சிவஞான முனிவர்' எனும் பொருளில் 1976ஆம் ஆண்டு இவர் நிகழ்த்திய சொர்ணாம்பாள் நினைவுச் சொற்பொழிவு அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீட்டு நூலாக வெளிவந்தது.

கம்பராமாயணத்தைச் செம்பதிப்பாக அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது. அப்பதிப்புப் பணியில் பணியாற்றிய சான்றோர்களில் ஒருவராகத் திகழ்ந்த பெருமை க. வெள்ளைவாரணனாருக்கு உண்டு. இவர் பல படலங்களுக்கு உரை எழுதிப் பெருமை சேர்த்தார். அவையாவன,

| | | |
|---|---|---|
| ஆரண்ய காண்டம் | - | அயோமுகிப் படலம் |
| கிட்கிந்தாக் காண்டம் | - | வாலிவதைப் படலம் |
| | | கிட்கிந்தைப் படலம் |
| யுத்த காண்டம் | - | இரணியன் வதைப் படலம் |
| | | இலங்கை காண் படலம் |
| | | மகுடபங்கப் படலம் |
| | | அணி வகுப்புப் படலம் |

அங்கதன் தூதுப் படலம்
மாயாசனகப் படலம்
அதிகாயன் வதைப் படலம்
பிரமாத்திரப் படலம்
நிகும்பலை யாகப் படலம்
மூலபல வதைப் படலம்
இராவணன் தேரேறு படலம்
இராமன் தேரேறு படலம்
மீட்சிப் படலம் முதல் 200
செய்யுட்கள்

## மதுரைக் காமராசர் பல்கலைக்கழக வெளியீடு

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் சிறப்புநிலைப் பேராசிரியராகப் பணியாற்றியபோது, இவர் எழுதிய தொல்காப்பியம் பொருளதிகாரம் உரைவளத்தை அப்பல்கலைக்கழகம் வெளியிட்டது.

## செயற்கரிய செயல்கள்

செயற்கரிய செய்வார் பெரியர் எனும் இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர் க. வெள்ளைவாரணனார். தமிழகத்தில் இந்திமொழி கட்டாயப் பாடமாக்கப்பட்டபோது அதனை எதிர்த்துப் போராட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட சிறப்பும் இவருக்கு உண்டு. தம் எதிர்ப்பினை அதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் 'காக்கை விடு தூது' எனும் பெயரில் நூலாக எழுதி அரசுக்கு அனுப்பி வைத்தார். இந்நூலைப் பாந்தளூர் வெண்கோழியார் எனும் புனைபெயரில் 1987ஆம் ஆண்டு வெளியிட்டுத் தமிழகத்தில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தினார். தமிழ்ப்பொழில், விடுதலை, திராவிடநாடு ஆகிய இதழ்களுக்கு இந்நூலை வெளியிட்ட பெருமை ஏற்பட்டது. தில்லை நடராசப் பெருமான் திருக்கோயிலில் திருமுறைகளை நடராசப் பெருமான் சன்னதியிலேயே ஓதவேண்டும் என்று முழக்கமிட்டு நிறைவேற்றியவர் டாக்டர் வ.சுப. மாணிக்கனார் ஆவார். அவரோடு உடன் இருந்து போராடித் திருமுறைகளை அம்பலத்தில் ஓதவைத்த பெருமை இவருக்கும் உண்டு. தில்லைப் பெருங்கோயில் வரலாற்றை நூலாகத் தில்லைத் தமிழ்மன்றத்தில் வெளியிட்ட சிறப்பும் இவருக்கு உண்டு.

## தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணி

சங்க இலக்கியப் பொருளடைவு, சைவ சித்தாந்த சாத்திர வரலாறு ஆகியன தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய போது இவர் வெளியிட்ட நூல்களாகும்.

'தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு' எனும் பொருளில் 6-7-87இல் இப்பல்கலைக்கழகத்தில் நாவலர் சோமசுந்தர பாரதியார் நினைவுச் சொற்பொழிவினை ஆற்றிப் பெருமை பெற்றவர் வெள்ளைவாரணனார்.

## வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்

தான் பெற்ற இன்பத்தை இவ்வையகமும் பெற வேண்டும் எனும் நோக்கில் இவ்வுலகில் வாழ்ந்த பெருமையர் க. வெள்ளைவாரணனார். இவர் மறைவுக்குப் பின் இவர் பயன்படுத்திய நூல்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு இவர் குடும்பத்தினர் ஒப்படைத்தனர்.

---

* தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் இவர் பயன்படுத்திய 695 நூல்கள் கோப்பு எண். வி. 94723 முதல் வி 95428 வரை இடம் பெற்றிருப்பதை இன்றும் காணலாம்.

# பின்னிணைப்பு

## க. வெள்ளைவாரணனாரின் கட்டுரைகள்

| எண். | கட்டுரைத் தலைப்பு | இதழ் | வெளியிட்டோர் | ஆண்டு |
|---|---|---|---|---|
| (அ) சமயம் | | | | |
| 1. | தேவார ஆசிரியர்கள் மேற்கொண்டொழுகிய சமயக் கொள்கை | கரந்தை வெள்ளிவிழா நினைவு மலர் | கரந்தைத் தமிழ்ச் சங்கம். தஞ்சாவூர். | 1938 |
| 2. | கருவூர்த்தேவர் | கல்விக்கழகக் கட்டுரை வெள்ளி விழா நினைவு மலர் | கல்விக் கழகம், புதுச்சேரி | 1951 |
| 3. | இளைஞர் மாநாட்டுத் தலைமையுரை | சைவசித்தாந்த மகாசபை பொன்விழா (சித்தாந்தம்) | சைவசித்தாந்த மகாசமாசம், சென்னை. | 1955 |
| 4. | நகரத்தாரும் திருமுறைப் பணியும் | ஸ்ரீகாசி நாட்டுக் கோட்டை நகரத்தார் சத்திரம், நூற்றாண்டு விழா மலர் | ஸ்ரீகாசி நாட்டுக் கோட்டை நகரச் சத்திரம், நிர்வாகக் குழு | 1963 |
| 5. | சைவசித்தாந்த வளர்ச்சி | திரிபுவன வீரேச்சுரம் மகாகும்பாபிஷேக மலர் | தருமையாதீனம், மாயூரம். | 1963 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | திருநாவுக்கரசு தேவர் | திருவாமூர் மகாகும்பாபிஷேக மலர் | விழாக்குழுவினர் திருவாமூர். | 1963 |
| 7. | திருமுறை வழிபாடு | முரசு, தனுஷ்கோடி மணி விழா மலர் | விழாக்குழுவினர் | 1967 |
| 8. | திருவிடை மருதூர் மும்மணிக்கோவை | திருவிடை மருதூர் மகாகும்பாபிஷேக மலர் | திருவாவடுதுறை ஆதீனம் | 1970 |
| 9 | திருவையாறும் சுந்தரமூர்த்திகளும் | மகாகும்பாபிஷேக மலர் | பஞ்சநதீஸ்வரர் தேவஸ்தானம் திருவையாறு. | 1971 |
| 10. | அறந்தரு நாவுக்கரசு | வெள்ளிவிழா மலர் | மணிவாசகர் மன்றம், அரியலூர் | 1972 |
| 11. | சிதம்பரம் சிவகாமியம்மன் திருக்கோயில், சுடலையமர்ந்தார் கோயில், தில்லையில் திருப்பாற் கடல் தீர்த்தமும் திருப்பெருந்துறைத் தீர்த்தமும் | சிதம்பரம் சிவகாமியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக மலர் | திருப்பணிக்குழு | 1979 |
| 12. | வெண்குன்று | கும்பாபிஷேக மலர் | சுவாமிநாதஸ்வாமி தேவஸ்தானம் சுவாமிமலை. | ஆ.இ. |
| 13. | சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 68ஆம் ஆண்டின் நிறைவு விழா தலைமைப் பேருரை | சித்தாந்தம் | சைவசித்தாந்த மகாசமாஜம் | 1973 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | திருமுறைகளும் சிவஞான போதமும் | ஆய்வுக் கோவை | இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், மூன்றாவது கருத்தரங்கம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம். | 1971 |
| 15. | மணிவாசகரும் மூவர் தமிழும் | திருமுறைக் கருத்தரங்கம் | ஸ்ரீமகாலிங்கப் பெருமான் திருக்கோவில், திருவிடைமருதூர் | 1973 |
| 16. | சைவநெறி | தமிழ் மலர் | தமிழ்ச் சங்கம், காரைக்குடி | 1974 |
| 17. | திருவருட்பயன் | வெள்ளிவிழா மலர் | சிதம்பரம் ஸ்ரீஇராமகிருஷ்ண உயர்நிலைப் பள்ளி, சிதம்பரம். | 1975 |
| 18. | தேவார, திருவாசகங்களில் திருவண்ணாமலை. | அண்ணாமலையார் திருக்கோயில் கும்பாபிஷேக மலர் | திருப்பணிக் குழுவினர் | 1976 |
| 19. | இளங்கோவடிகள் காலத்துச் சமய நிலை | பல்கலைக்கழக ஆண்டிதழ் | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | ஆ. இ. |
| 20. | இறைவன் தரும் இனிமை | தமிழ்ப் பொழில் | கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர் | ஆ. இ. |
| 21. | ஈங்கோய்மலை எழுபது | செந்தமிழ்ச் செல்வி | சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. | ஆ. இ. |
| 22. | திருநின்ற செம்மை | சித்தாந்தம் | சைவசித்தாந்த மகாசமாசம், சென்னை. | ஆ. இ. |

| | | | | |
|---|---|---|---|---|
| 23. | அறுகயிறூசல் | சித்தாந்தம் | சைவசித்தாந்த மகாசமாசம், சென்னை. | ஆ. இ. |
| 24. | ஐந்தவத்தை | தமிழ்த்துறைக் கருத்தரங்கு | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | 1971 |
| 25. | சிலம்பில் சைவம் | தமிழ்த்துறைக் கருத்தரங்கு | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | 1973 |
| 26. | மணிமேகலையில் சைவம் | தமிழ்த்துறைக் கருத்தரங்கு | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | 1975 |
| 27. | திருக்குறளில் சைவமும் வைணவமும் | தமிழ்த்துறைக் கருத்தரங்கு | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | 1975 |
| | (ஆ) இலக்கியம் | | | |
| 28. | பாசறை | வெள்ளிவிழாமலர் | யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கம் | 1950 |
| 29. | பகுத்தூண் தொகுத்த ஆண்மை | செந்தமிழ்ச் செல்வி | சை.சி. நூற். கழகம், சென்னை. | ஆ. இ. |
| 30. | கல்வி | மங்கலங்கிழார் நினைவு மலர் | மங்கலங்கிழார் மன்றம், குருவராயப் பேட்டை. | 1962. |
| 31. | தமிழர் கல்வி நிலை | சென்னைப் பல்கலைக்கழக புதுமுக வகுப்புத் தமிழ் உரைநடை பகுதி - 2 | சென்னைப் பல்கலைக்கழகம் | 1966 |
| 32. | திருவள்ளுவர் நெறியில் திருமுறை ஆசிரியர்கள் | செங்கம் திருவள்ளுவர் கழகச் சிறப்பு மாநாட்டு மலர் | திருவள்ளுவர் கழகம், செங்கம். | 1967 |

| | | | | |
|---|---|---|---|---|
| 33. | உலகப் பொதுச் சமய நூல் | திருக்கழுக்குன்றம் சங்கு தீர்த்த புஷ்கரமேளா இலட்சதீப மலர் | விழாக்குழுவினர் திருக்கழுக்குன்றம் | 1968 |
| 34. | குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் | வெள்ளி விழா மலர் | தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜனசங்கம் | 1970 |
| 35. | அறிவுக்கருவி | முப்பால் மலர் | திருவள்ளுவர் கழகம். | 1970 |
| 36. | திருக்குறள் கூறும் அறத்தின் அடிப்படை | திருவள்ளுவர் ஈராயிரமாண்டு சிறப்பு மலர் | தமிழ்நாடு தெய்வீகப் பேரவை, சென்னை. | 1970 |
| 37. | தலைசிறந்த உரையாசிரியர் | பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் திருவுருவச் சிலை திறப்பு. | விழாக்குழுவினர் | 1970 |
| 38. | திருக்குறளும் கீழ்க்கணக்கு நூல்களும் | கட்டுரைப் பொழில் | கரந்தைத் தமிழ்ச்சங்கம் | 1973 |
| 39. | பண்புடைமை | சிதம்பரம் ஆர். கனகசபைப் பிள்ளை மணிவிழா மலர் | மணிவிழாக்குழு | 1973 |
| 40. | குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி | சிதம்பரம் பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள் | சை.சி. நூற். கழகம் | 1973 |
| 41. | வானூர் மதியம் | தமிழ்ப் பொழில் | கரந்தைத் தமிழ்ச்சங்கம் | ஆ. இ. |

(இ) இலக்கணம்

| | | | | |
|---|---|---|---|---|
| 42. | தொல்காப்பியம் | மறைமலையடிகள் நினைவு மலர் | நாகைத் தமிழ்ச் சங்கம் | 1969 |
| 43. | இறையனார் களவியலுரை | தமிழ்த்துறைக் கருத்தரங்கு | அண்ணாமலைப் பல்கலைக்கழம் | 1970 |
| 44. | தொல்காப்பியம் கூறும் மொழியமைப்பு | தொல்காப்பியம் மொழியியல் | மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | 1972 |
| 45. | சார்பெழுத்துக் கொள்கை | இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் | மொ.துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம். | 1974 |
| 46. | அசையும் சீரும் | தமிழ்த்துறைக் கருத்தரங்கு | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | 1972 |
| 47. | தொல்காப்பியத்தில் சில நூற்பாக்களின் பொருள் விளக்கம் | தமிழ்த்துறைக் கருத்தரங்கு | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | 1976 |
| 48. | உத்தி வகை | தமிழவேள் உமாமகேசுவரனார் நூற்றாண்டு கட்டுரைப் பூங்கா | தஞ்சாவூர் | 1984 |

(ஈ) இசை

| | | | | |
|---|---|---|---|---|
| 49. | ஆடற்கலை | கழகத்தின் 1008வது வெளியீட்டு விழா மலர் | தி.தெ.சை.சி. நூற் கழகம் சென்னை. | 1961 |

| | | | | |
|---|---|---|---|---|
| 50. | தேவாரத்திற் பயின்ற பண்களும் இசைக் கருவிகளும் | தமிழ் இசை 22ஆம் விழா மலர் | இராஜா அண்ணாமலை மன்றம். | 1964-65 |
| 51. | தேவாரம் ஓதும் முறையின் பழமை | பண்ணாராய்ச்சி வெள்ளி விழா | தமிழிசைச் சங்கம், சென்னை. | ஆ.இ. |
| 52. | யாழ்நூலின் அமைப்பும் சிறப்பும் | பண்ணாராய்ச்சி வெள்ளி விழா | தமிழிசைச் சங்கம், சென்னை. | ஆ. இ. |
| 53. | பண்ணார் தமிழ் | திருவானைக்கா திருக்கோயில் மகாகும்பாபிஷேக மலர் | திருப்பணிக் குழு | 1970 |
| 54. | குரல், மத்திமமே | செந்தமிழ்ச் செல்வி | தி.தெ.சை.சி. நூற் கழகம், சென்னை | ஆ. இ. |
| 55. | சங்க காலத் தமிழ் வாணிபம் | வெள்ளிவிழா மலர் | அண்ணாமலைப் பல்கலைக்கழக கூட்டுறவு பண்டகசாலை. | 1956 |
| 56. | சிதம்பர புராண ஆசிரியர் | வெள்ளிவிழா மலர் | ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி, மயிலம். | 1966 |
| 57. | யாழ்நூல் ஆசிரியர் அருள்மிகு விபுலானந்த அடிகளார் | மணிவிழாச் சிறப்பு மலர் | கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை. | 1973 |
| 58. | பாண்டித்துரைத் தேவர் | தமிழ்ப் பொழில் | கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை | ஆ. இ. |

| | | | | |
|---|---|---|---|---|
| 59. | தொல்காப்பியர் காலம் | இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர் | விழாக் குழுவினர் | ஆ. இ. |
| 60. | திருவாசகம் வளர்த்த பெரியார் அண்ணாமலை ஐயா. | வள்ளுவர் மன்றம் வெள்ளி விழா மலர் | மேலைச் சிவபுரி | 1956 |
| | (ஊ) ஒப்பீடு | | | |
| 61. | தொல்காப்பியமும் திருக்கோவையாரும் | தவத்திரு திருநாவுக்கரசு அவர்களின் 60வது ஆண்டு நிறைவு விழா மலர் | பாண்டிச்சேரி | 1977 |
| 62. | பதிற்றுப்பத்தும் பாடாண் திணையும் | முத்துக்கோவை தமிழகப் புலவர் குழு வெளியீட்டு விழா மலர் | திருச்சிராப்பள்ளி | 1981 |
| 63. | திருமுறைகளில் தில்லை | சைவ சித்தாந்தப் பெருமன்றம் முத்து விழா மலர் | சிதம்பரம் | 1986 |
| 64. | ஆளுடைய பிள்ளையார் மாலை (தனிப்பாடல் திருஞான சம்பந்தர் பற்றியது) | சுப்பையா பிள்ளை பவள விழா மலர் | சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் | 1973 |
| 65. | தொல்காப்பியத்தில் தத்துவ நெறிக்கொள்கைகள் | திருக்கோயில் | திருக்கோயில் | 1978 |

# இலக்கியப் பணி

க. பூரணச்சந்திரன்

'தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே - உண்டாலம்ம இவ்வுலகம்' என்பார் சங்கக்கவிஞர் கடலுள்மாய்ந்த இளம்பெருவழுதி. அதுபோலவே எவ்விதப் பெருமையையும் புகழையும் எதிர்பாராது, தங்களால் இயன்ற தமிழ்ப்பணி செய்த பெருந்தமிழ்ப் புலவர்கள் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்ததனாலேயே இன்று தமிழ் ஆராய்ச்சிப் பெருவுலகம் சிறப்புப்பெற்றிருக்கிறது. இவ்விதம் கைம்மாறு கருதாக் கடமை செய்த புலவர் பெருமக்களில் தலையாய ஒருவர் வெள்ளைவாரணனார்.

தம் வாழ்நாள் முழுவதும் தமிழ்ப்பணி ஒன்றையே மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர். தமிழ் - சைவம் இரண்டைத் தவிர வேறொன்றையும் சிந்தியாதவர். வெள்ளைக்கலையுடுத்து நீறு பூசிய எளிய தோற்றம் கொண்டவர். ஆழ்ந்த சமயப்பற்றாளர். எளியவர். பதவிக்கும் புகழுக்கும் காசுக்கும் தமிழ் கற்கும் இக்காலத்தினர்க்கும் முந்திய கற்புத்தலைமுறையினர்.

பேராசிரியர் வெள்ளைவாரணனார் பலநூல்களை உருவாக்கியிருக்கிறார். பல நூல்களைப் பதிப்பித்திருக்கிறார். பல நூல்களுக்கு உரை எழுதியிருக்கிறார். பேராசிரியர் எழுதிய நூல்களை இசைத்தமிழ் தொடர்பானவை, இலக்கியத் தொடர்பானவை, இலக்கணத் தொடர்பானவை, சைவசித்தாந்தந் தொடர்பானவை என நான்கு வகைகளுக்குள் அடக்கிவிடலாம். இவற்றுள் இலக்கியந் தொடர்பான அவரது இருநூல்கள் (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்ற நூல்கள்) பற்றியே இக்கட்டுரை அமைகிறது. இவற்றை ஆராய்வதே வெள்ளைவாரணனாரின் இலக்கியப் பணியையும் அவரது இலக்கிய நோக்கையும் மதிப்பிடப் போதியவையாகும்.

1. காக்கைவிடுதூது என்னும் ஒரே ஒரு படைப்பிலக்கிய நூல். 2. கம்பராமாயணச் செம்பதிப்பு கொண்டு வர உதவியமை.

3. திருமந்திரத்தின் சில பகுதிகள், காரைக்காலம்மையார் பாட்டுகள், கம்பராமாயணத்தின் சில படலங்கள் ஆகியவற்றிற்கு உரைவரைந்தமை. 4. சங்கத்தமிழ் இலக்கிய வரலாறு வரைந்தமை. 5. பன்னிரு திருமுறை வரலாறு எழுதியமை 6. திருவருட்பாச் சிந்தனை எழுதியமை 7. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் பணிபுரியும் போது தமிழ்ப் பொழிலில் பொழிற்றொண்டர் உரைகளை வரைந்தமை 8. தில்லைப் பெருங்கோயில் என்னும் நூல் எழுதியமை 9. அவ்வப்போது இலக்கியக் கட்டுரைகள் வழங்கியமை ஆகியவற்றை வெள்ளைவாரணனாரின் இலக்கியப்பணியாகக் கொள்ள இயலும். இப்பட்டியலில் அவரது இலக்கண, சமய, இசை-நாடகப் பணிகள் சேர்க்கப்படவில்லை.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் போது வெள்ளைவாரணனார், சதாசிவ பண்டாரத்தார், ஔவை சு.துரைசாமிப்பிள்ளை ஆகியோர் இணைபிரியா மூவராக விளங்கியவர்கள். ஒருவர் சொல்லும் கருத்திற்கு மற்றவர் ஆதாரம் தேடிச் செ(ா)ல்வது அவர்களுக்கிடையே மரபாக இருந்திருக்கிறது. மூவருமே ஒத்த கருத்தினர். ஆனால் வெவ்வேறு துறைகளில் முத்திரைப் பதித்தவர்கள். வெள்ளைவாரணனார் இலக்கியச் செல்வர் என்றால் இன்னொருவர் சித்தாந்தக் கலாநிதி, மற்றவர் வரலாற்றுப் பேராசிரியர். ஆகவே ஒருநூலின் இலக்கிய ஒப்புமைகளை ஆராய்ந்து, அதன் காலத்தை ஆராய்ந்து, அதன் சைவசித்தாந்த வேர்களைக் கண்டறிந்து வெளிப்படுத்துவது இம்மூவரின் வாழ்நாள் பணியாக இருந்தது.

வெள்ளைவாரணனாரின் இலக்கியப் பணி பெரும்பாலும் ஒரே தன்மையது. இதற்கு விதிவிலக்கு, காக்கைவிடுதூது என்னும் ஒரே ஒரு படைப்பிலக்கியம். வெண்கோழி என்னும் புனைபெயரைத் தமக்கு வைத்துக்கொண்டு, இராஜாஜிக்கு இந்தி எதிர்ப்பினைத் தெரிவிக்கும் வகையால் ஆக்கப்பட்ட தூது நூல் அது. அச்சமயத்தில் அவர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறையில் இருந்தபோது, கம்பராமாயணச் செம்பதிப்பு கொண்டுவர உதவினார். அப்போது தமிழ் இலக்கிய வரலாற்றின் முதற்பகுதியை வரையும் வாய்ப்பும் வெள்ளைவாரணனார், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, ஈ.எஸ். வரதராச ஐயர் ஆகிய மூவருக்கும்

அளிக்கப் பெற்றது. வெள்ளைவாரணனாருக்கெனச் சங்க இலக்கிய வரலாற்றைத் தந்தனர். அவர் அதனைச் செம்மையாகச் செய்து முடித்தார். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய போது சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் உருவாக்கித் தந்தார். என்றாலும், தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்ற பன்னிருதிருமுறை வரலாறும் திருவருட்பாச் சிந்தனையும் என்றும் அவரது பெயரைச் சொல்லுவனவாக அமைந்துள்ளன. ஆகவே இக்கட்டுரை பன்னிரு திருமுறை வரலாறு, திருவருட்பாச் சிந்தனை ஆகிய இரு நூல்களின் அடிப்படையிலே அமைகிறது. இலக்கியத்தில் அவரது ஈடுபாடு என்பது சமயம் சார்ந்த ஒன்றாகவே இருந்ததால், இவற்றை நோக்குவதே அவரது உண்மையான கருத்துகளைக் காண்பதாகவும் அமையும்.

ஆனால் வெள்ளைவாரணனார் வெளிப்படையாகக் கருத்துகளைப் பேசுபவர் அல்லர். வெளிப்படையான திறனாய்வு செய்பவரும் அல்லர். அவரது முடிவுகளைப் போகிற போக்கில் எங்கேனும் குறித்துச் செல்லும் அபிப்பிராயங்களிலிருந்தே கண்டறிய வேண்டும். அவரது ஆய்வுப் போக்கினை அவரது நூல்களைப் படிப்பதன் வாயிலாகவே கண்டறிய வேண்டும். இவற்றை வெளிப்படையாகச் சொல்லும் வழக்கம் அக்காலத்தில் கிடையாது. பெரும்பாலும் வெள்ளைவாரணனார் போன்றோர் கையாண்ட ஆய்வு முறையினைக் குறிப்பிட்ட சமய நோக்கிற்குள் அடங்கும் தர்க்கரீதியான முறை எனக் கூறலாம்.

சமயநோக்கிற்குள் அடங்கும் தர்க்க ரீதியான முறை என்று கூறக் காரணம், கால ஆராய்ச்சி, இலக்கண ஆய்வு, கல்வெட்டாய்வு போன்றவற்றில் தர்க்கமுறையை வெள்ளைவாரணனார் போன்றோர் சிறப்பாகக் கடைப்பிடித்திருப்பதைக் காணலாம். உதாரணமாக, மாணிக்கவாசகர் காலம் யாது என்னும் ஆய்வில் ஈடுபடும்போது, கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் மாணிக்கவாசகர் என்னும் கருத்தினை வெள்ளைவாரணனார் ஒப்புக்கொள்வதில்லை. மாணிக்கவாசகரை வழிபடும் மனப்பான்மை -சமய மனப்பான்மை இங்கு ஆய்வுக்குக் குறுக்கே நிற்பதில்லை. மறைமலையடிகள் கூறும் காரணங்கள் ஒவ்வொன்றையும் வெள்ளைவாரணனார் மறுக்கும் திறம் காணத்தக்கது.

1. குடமுழு நந்திசனை வாசகனாகக் கொண்டார் எனவரும் அப்பர் கூற்று மாணிக்கவாசகரைக் குறிப்பது என்பது

மறைமலையடிகள் வாதம் (எனவே மாணிக்கவாசகர் அப்பருக்கு முற்பட்டவர் என்பது பெறப்படுகிறது). வாசகர் என்ற சொல் பன்மை குறித்தது, அது இறைவனைப் புகழ்ந்து போற்றுவோரைக் குறிக்கும். மாணிக்கவாசகர் எனத் திருவாதவூரரை வழங்குவது கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் பின்னரே ஏற்பட்டது என்பது வெள்ளைவாரணனார் கூற்று.

2. நரியைக் குதிரைசெய்வானும் என்னும் தொடரும், வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமும் தோன்றும் என்பதும் மாணிக்கவாசகர் பற்றிய திருவிளையாடல்களை அப்பர் பாடியவை என்பது மறைமலையடிகள் கருத்து. நரியைக் குதிரைசெய்வானும் என்பது பொதுக் கூற்று என்றும், வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமும் என்பது அப்பருக்கு இறைவன் காட்சியருளியது என்றும் வெள்ளைவாரணனார் மறுப்பார்.

3. சுந்தரர் 'பொய்யடிமையில்லாத புலவர்' எனக் குறித்தது மணிவாசகரை என்பது மறைமலையடிகள் கருத்து. இதுவும் தொகையடியாரைக் குறிக்கும் கூற்று என்பது வெள்ளைவாரணனார் கருத்து.

4. மாணிக்கவாசகர் செங்கணானைக் குறிப்பிடாமையால் அவர் செங்கணான் காலத்திற்கு முற்பட்டவர் என்பர் மறைமலையடிகள். இது தவறன்று என்பதும் அன்றி, தேவாரமூவர் பாடல்களை மணிவாசகர் பண்சுமந்த பாடல் எனப் பாராட்டியிருத்தலால் அவர்களுக்கு மணிவாசகர் பிற்பட்டவரே எனவும் நிறுவுவார் வெள்ளைவாரணனார்.

5. மாணிக்கவாசகர் விநாயகப் பெருமானை வழிபடாமை, காலத்தால் அவர் முற்பட்டவர் என்பதைக் காட்டுகிறது என்பர் மறைமலையடிகள். சிவபெருமானாகிய தனிமுதற்பொருள் ஒன்றையே வழிபடும் பணியில் நின்ற வாதவூரர் விநாயகரைத் தனிப்பெரும் கடவுளாகக் கருதாமையால் பாடவில்லை எனக் காரணம் காட்டுவர் வெள்ளைவாரணனார்.

6. இலக்கியச் சான்றுகள் சிலவற்றால் மணிவாசகர் காலத்தே தில்லைநகர் அருகே கடல்நின்றதென்றும் அப்பர் சம்பந்தர் காலத்தே அது விலகிவிட்டதென்றும் அதனால் மணிவாசகர் காலம் முற்பட்டதென்றும் உரைப்பர் மறைமலையடிகள். கடல் சற்றுத் தொலைவிலிருப்பினும் அதனை

ஊரொடு சார்த்திப் பாடும் மரபிருப்பதனைச் சுட்டிக்காட்டி இக்கருத்தினை மறுப்பர் வெள்ளைவாரணனார்.

7. மணிவாசகரைக் குறிப்பிடும் கல்லாடம் தேவார ஆசிரியர்க்கு முற்பட்டது. எனவே மணிவாசகர் காலத்தால் முற்பட்டவர் என்பர் மறைமலையடிகள். கல்லாடம் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் பாற்பட்டது என்று நிறுவி இக்கூற்றை மறுப்பர் வெள்ளைவாரணனார்.

இவ்வாறு மறைமலையடிகள் கூறும் காரணங்களை யெல்லாம் மறுத்தபின் தாமே பல சான்றுகளைக் காட்டி மாணிக்கவாசகர் முதலாம் வரகுணபாண்டியனின் காலத்தில் (கி.பி. 792 - 835) வாழ்ந்தவர் என நிறுவுவார். இம்மாதிரி விவாதங்களில் காணப்படும் தர்க்கமுறை ஆராய்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உரிய ஒன்றாகும்.

வெள்ளைவாரணனாரின் நூல்கள் வெளிப்படையாக ஆய்வு நூல்களாகக் காட்சியளிப்பதில்லை. அவை எடுத்துக் கொண்ட நூல்களில் காணப்படும் செய்திகளைத் தெளிவாக்கும் வகையிலேயே அமைந்திருக்கின்றன. ஒருவகையில் நோக்கினால் இவை அனைத்தும் பொழிப்புரை நூல்களே. இன்னொருவகையில் நோக்கினால், 'ஆய்வு செய்வதற்கு அடிப்படையான தகவல்களையும் தரவுகளையும் தொகுத்து வழங்கும் நூல்கள்' என்றும் சொல்லலாம்.

பன்னிருதிருமுறை வரலாறு மிகவிரிவான அளவிற்பெரிய நூல். இது இருதொகுதிகளாக அமைந்துள்ளது. முதற்பகுதி ஏறத்தாழ 975 பக்க அளவிலும் இரண்டாம் பகுதி பின்னிணைப்புகள் இன்றி 1340 பக்க அளவிலும் அமைந்தவை. முதற்பகுதியில் முதல் ஏழு திருமுறைகளின் வரலாறு சொல்லப் படுகிறது. பிற்பகுதியில் அடுத்த ஐந்து திருமுறைகளின் வரலாறு சொல்லப்படுகிறது. திருவருட்பாச் சிந்தனை என்பது திருவருட்பா என்னும் நூல் பற்றிய அடிப்படைச் சிந்தனைகளை முன்வைப்பதாகக் காணப்படுகிறது. இது அளவில் சிறியது.

வெள்ளைவாரணனாரின் இலக்கியநோக்கு சிக்கலற்றது. பக்தி வழிப்பட்டது. இறைவனைப் பாடிய அருளாளர்களின் செயல்களையும் வரலாற்றையும் ஐயமின்றி அப்படியே ஏற்றுக்கொள்வது. அதனால் இன்றைய அறிவியல் நோக்கிலான ஆய்வுமுறைக்கும் வெள்ளைவாரணனாரின் ஆய்வுப் போக்கிற்கும்

அடிப்படையில் கருத்து வேறுபாடு தோன்றக்கூடும். சான்றாகப் பதினோராம் திருமுறையிலுள்ள திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரம் என்னும் பனுவலை ஆராயப்புகும்போது,

பதினோராந்திருமுறை ஆசிரியர்களுள் காலங்கடந்து என்றுமுள்ளவர் திருவாலவாயுடையாராகிய சிவபெருமானாவர் என உறுதியாக ஏற்றுக் கொள்ளும் தன்மையைக் காண்கிறோம். இப்படி ஏற்றுக் கொள்வதனால் தொடர்ந்து எழக்கூடிய பல கேள்விகளுக்கான விடைகள் கிடைக்காமல் போய்விடுகின்றன. அதாவது ஆய்வு குன்றிப்போகிறது. உதாரணமாக, பக்தி இலக்கியம் என்பது, 'அடியார்கள் இறைவனைப் புகழ்ந்து பாடுவது' என்னும் வரையறைக்கேற்ப அமைந்தஒன்று எனலாம். ஆனால் இப்பதினொராம் திருமுறையில் இறைவன் தன் அடியாரைப் புகழ்ந்து பாடி இன்னொரு அடியவனுக்குப் பரிசளிக்க வேண்டுகின்றார். பக்தி இலக்கியத்தின் அடிப்படைகளையே இருவிதங்களில் தகர்க்கும் (இறைவன் அடியவனைப் புகழ்ந்து பாடுதல், அடியவர் இறைவனை வேண்டுதற்குமாறாக இறைவன் அடியவனை வேண்டுதல்) இப்பனுவலைப் பக்தி இலக்கியம் எனத்தகுமா என்னும் கேள்விக்கு வெள்ளைவாரணனாரிடம் விடை கேட்க முடியாது.

இதுபோல எல்லா அற்புதச் செயல்களையும் கேள்வி கேட்காமல் ஏற்றுக்கொள்ளும் தன்மையை அவரிடம் காணலாம். இம்மாதிரி மனப்பான்மை இறுதியில் திருமுருகாற்றுப் படையையும் பதினொராம் திருமுறையில் ஒன்றாக ஏற்றுக்கொள்ள வைக்கிறது. காலவேறுபாடு, மொழிநடை வேறுபாடு, கருத்து வேறுபாடு என்பனவற்றைக் கருதாது சைவப் பனுவல்களோடு ஒன்றாக அதை வைத்து விடுகிறது. இம்மாதிரி முரண்பாடுகள் இறுதியில் உண்மையான ஆய்வுக்கும் ஆய்வு மனப்பான்மைக்கும் குந்தகமாக அமைந்து விடுகின்றன.

வெள்ளைவாரணனார் தமது கொள்கை எல்லைக்குள் நின்று படைத்த பன்னிருதிருமுறை வரலாறு மிகப்பெரிய பணி. தமிழில் ஆதாரமான ஆய்வுகள் எனச் சில நூல்களைக் குறிப்பிட்டால் அதில் பன்னிருதிருமுறை வரலாறும் அடங்கும். ஆதாரமான ஆய்வுகள் என்பவை, பின்னர் அத்துறையில் ஆய்வு செய்ய வரும் எவரும் அந்த ஆய்வுகளை நோக்காமல் செய்ய முடியாது என்னும் திறன் படைத்த நூல்களாகும். சான்றாக, அக

இலக்கியங்கள் பற்றிய ஆய்வில் 'தமிழ்க்காதல்' (வ.சுப. மாணிக்கம்) அத்தகைய ஒரு நூல். அதுபோலத்தான் பன்னிருதிருமுறை வரலாறும். எதிர்காலத்தில் பன்னிருதிருமுறைகள் பற்றி ஆராய முற்படும் எவரும் இதனை நோக்காமல் மேற்செல்ல முடியாது என்னும் தகைமை பெற்றது இந்நூல். பெருமளவு நாயன்மார்களின் வரலாறும் அருட்செயல்களும் பற்றிய நூலாக இது அமைந்திருப்பினும், இதன் பயன்பாடு அவற்றை மீறியது. பன்னிருதிருமுறை ஆசிரியர்களின் கால ஆய்வு, திருப்பதிகங்களின் பொருட்பாகுபாடு, தேவாரப் பாடல்பெற்ற தலங்கள் பற்றிய செய்திகள், வைப்புத்தலங்கள் பற்றிய குறிப்புகள், சைவக்குரவர்கள் வாயிலாக வெளிப்பட்ட சிவநெறிக் கொள்கை அல்லது சைவசித்தாந்தக் கொள்கை, திருத்தொண்டர்புராணத்திற்கு முன்னூற் சான்றுகள், நாயன்மார்கள், திருத்தொண்டர்கள் ஆகியோரின் பாக்களில் திருக்குறளின் தாக்கம் போன்ற எத்தனை எத்தனையோ செய்திகள் இந்நூலில் அடங்கியுள்ளன. சாதாரணமாகக் கதைபோலப் படிக்கத்தக்க எளிய நடையும், கல்லூரி மாணவர்களும் ஆய்வாளர்களும் பயன்படுத்தத்தக்க மேற்கோள்களும், அதேசமயம் அவற்றிற்கு அப்பாற்பட்டு ஏராளமான புள்ளி விவரங்களும் குறிப்புகளும் அடங்கிய ஒரு தொகுப்பு நூல் (காம்பெண்டியம்) என இதனைக் கூறலாம்.

இந்நூற்செய்திகளின்பின் அமைந்துள்ள நுண்மாண் நுழைபுலம் வியக்கத்தக்கது மட்டுமன்றி, இக்கால ஆய்வாளர்கள் அனைவரும் மேற்கொண்டு கடைப்பிடிக்கத்தக்கதுமாகும். சான்றாக 'எட்டிருங்கலை' என்றால் என்ன தெரியுமா? ஞானசம்பந்தரின் திருக்கழுமலப் பதிகத்தில் இத்தொடர் இடம் பெறுகின்றது. "எட்டிருங்கலை என்பன யாழ்க்கருவியிலே இசை எழுப்புதற்குச் செய்யும் பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்னும் எட்டினையும், இசைநிலையின் தீதின்மை ஆராய்தற்குச் செய்யும் வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என்னும் எட்டினையும் ஒருங்கே குறிக்கும் என்பர் யாழ்நூலாசிரியர்''. இம்மாதிரி போகிறபோக்கில் அமையும் வரையறைகளும் விளக்கங்களும் இந்நூலில் எண்ணில் அடங்கா.

> சங்ககாலத்தில் மதுரை நகரத்திலே சிவபெருமானுக்கு ஏழுநாட்கள் திருவிழா நடந்து, ஏழாம்நாள் முடிவில் தீர்த்தம் ஆடும் சிறப்பு நடைபெற்றது என்பது, 'கழுநீர்கொண்ட

எழுநாள் அந்தி ஆடு துவன்று விழாவின்' என வரும் மதுரைக்காஞ்சியடிகளாலும், 'கழுநீர் கொண்ட அந்தி–தீவினை கழுவுவதற்குக் காரணமான தீர்த்த நீரைத் தன்னிடத்தே கொண்ட அந்திக்காலம்' 'கால்கொள்ளத் தொடங்கிய ஏழாம் நாள் அந்தியிலே தீர்த்தம் ஆடுதல் மரபு' எனவரும் நச்சினார்க்கினியர் உரையாலும் அறியப்படும். இவ்வாறு கடைச்சங்க காலத்தில் ஏழாம்நாள் அந்தியில் கொண்டாடப் பட்ட தீர்த்த விழாவானது, தேவார ஆசிரியர் காலத்தில் எட்டாம் நாளாகிய அட்டமியில் கொண்டாடப்பெற்றது எனத் தெரிகிறது. இச்செய்தி, 'தீர்த்தமாம் அட்டமி முன் சீருடை ஏழுநாளும் கூத்தராய் வீதிபோந்தார் குறுக்கை வீரட்டனாரே' எனவரும் திருநேரிசையால் புலனாகிறது.

இப்படி எவ்வளவோ அரிய மானிடவியல் செய்திகளும் இசைச் செய்திகளும் சமயதத்துவச் செய்திகளும் கல்வெட்டுச் செய்திகளும் நிரம்பிய பேழையாகக் காட்சியளிக்கிறது பன்னிருதிருமுறை வரலாறு. பன்னிருதிருமுறை வரலாறு மட்டுமல்ல, வெள்ளைவாரணனார் எழுதிய பிற கட்டுரைகளும் இப்படிப் பட்டவையே.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப்பாதி, தமிழ்ப் புலமையும் ஆய்வும் வளர்ந்த பொற்காலமாகக் கருதுவதற்குரியது. சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கருதும் புலவர்கள் பலர் வாழ்ந்த காலம் அது. சைவத்தையும் தமிழையும் கண்களாகக் கருதும் மரபு சான்ற ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள் சுந்தரம்பிள்ளை காலந்தொட்டே பெருகி வந்தனர். அக்காலத்து வாழ்ந்த சைவவேளாளர் குலத்தினர் பலர் தமிழ் ஆய்வில் ஈடுபாடு காட்டிய காரணத்தினால் கனகசபைப் பிள்ளை, ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை, பூரணலிங்கம் பிள்ளை போன்ற பலர்தம் ஆய்வுப்பணி தமிழுக்கு வளம் சேர்க்கலாயிற்று.

அக்காலச் சூழலும் இதற்குத் தோதாக அமைந்திருந்தது. ஒருபுறம் தேசியவாத இயக்கத்தினர் இந்திய நாகரிகம் வேதகாலந்தொட்டே கொண்டிருந்த பெருமையையும் அது ஐரோப்பிய நாகரிகங்கள் அனைத்திற்கும் முற்பட்டது என்பதையும் நிறுவும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இதன் தவிர்க்க முடியா விளைவாகத் தேசியத் தலைவர்கள் பெரும்பாலோரும் - திலகர்,

காந்தி முதல் வினோபா வரை - பகவத்கிதைக்கு உரைவிளக்கம் எழுதினர். இதன் காரணமாக மாக்ஸ்முல்லர் முதலியோர் இந்திய நாகரிகம் ஒற்றைத் தன்மை - சமஸ்கிருதத் தன்மை கொண்டது என மதிப்பிடலாயினர். இதற்கு எதிரான இயக்கம் ஒன்று தமிழகத்தில் தோன்ற வேண்டிய அவசியம் நேரிட்டது. இதற்கு அனுசரணையாகக் கால்டுவெல்லின் ஆய்வு தமிழின் தனித்தன்மையை விளக்க, சிந்துவெளி நாகரிக ஆய்வு சைவசமயம் ஆரியர்க்கு முற்பட்டது என்னும் கருத்தினை அளிக்க, பழந்தமிழர் நாகரிகத்தின் ஊற்றுக்கண்களாகத் தமிழ் மொழியும் சைவமும் கருதப்படலாயின. இவற்றின் பெருமையை விளக்கும் பணியைத்தான் சைவ வேளாளர்கள் செய்தனர். இம்மாதிரி ஆய்வாளர் பரம்பரையின் இறுதிக்கொழுந்துகளில் ஒருவர்தான் வெள்ளைவாரணனார். தமிழிசையின் மேன்மையைப் பரப்பியவர்களும் இவர்களே. அரசியலில் இவர்கள் பெரும்பாலும் நீதிக்கட்சிச் சார்பினைக் கொண்டிருந்தனர். இருபதாம் நூற்றாண்டில் ஐம்பதுகளின் காட்சியை ஒருவாறு காங்கிரஸ் = பார்ப்பனர்கள் = தேசியம் சார்ந்த இலக்கியம் (கம்பராமாயணம், பாரதியார் கவிதைகள் போன்று) = இந்தி ஆதரவு = வேதாந்தச் சார்பு எனவும், நீதிக்கட்சி = பார்ப்பனர் அல்லாத மேற்சாதியினர் = தமிழின் தனித்தன்மை பேசும் இலக்கியங்கள் (பாரதிதாசன் போன்று) = இந்தி எதிர்ப்பு = சைவசித்தாந்தச் சார்பு எனவும் சமன்படுத்தலாம். எனவே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற வெள்ளைவாரணனாரிடம் தமிழின் முனைப்பும் இந்தி எதிர்ப்பும் சைவ சித்தாந்தச் சார்பும் ஒருங்கே விளங்கியதில் ஆச்சரியமில்லை.

இதற்கிடையில் வள்ளலார் பற்றிய ஒரு நிலைப்பாடு எடுக்கும் தேவை சைவர்களுக்கு ஏற்பட்டது. இலங்கைச் சைவர்களும் (ஆறுமுகநாவலர் போன்றோர்) தமிழ்நாட்டுச் சைவமடங்களும் ஒரு வைதிகச் சார்புடைய நிலைப்பாடு கொண்டு வள்ளலாரின் பாக்களை மருட்பாக்கள் எனப் புறக்கணிக்க, அவ்வளவாக வைதிகச் சார்பற்ற சைவர்கள் வள்ளலாரின் பாக்கள் அருட்பாக்களே என நிற்க, இவர்களுக்கிடையே ஒரு போராட்டம் தொடங்கியது. இப்போராட்டத்தின் இறுதிக்கட்டத்தைத்தான் வெள்ளைவாரணனார் வாழ்க்கையும் எதிரொலிக்கிறது. இந்தப் பின்னணியிலேயே அவரது திருவருட்பாச் சிந்தனை என்னும் நூலையும் நோக்க வேண்டும்.

திருவருட்பாச் சிந்தனை நூலின் நோக்கம் அருட்பாவின் சிறப்பை வெளிப்படுத்துவதோ வள்ளலாரின் சிந்தனையை ஓர் இயக்கமாகக் காண்பதோ அன்று. வெள்ளைவாரணனாரின் சொற்களிலேயே கூறுவதானால்,

> சைவத்திருமுறைகளில் எனக்கு இயல்பாகவுள்ள ஆர்வத்தாலும் அத்திருமுறைகளுக்கு விளக்கவுரைபோன்று வள்ளலார் பாடியருளிய திருவருட்பா பனுவலின் சிறப்பினைச் சைவவுலகம் உள்ளவாறு உணர்ந்து போற்ற வேண்டும் என்னும் ஆசையினாலும் இச்சிறுநூலை எழுதத் தொடங்கினேன்........
>
> திருவருட்பாவினைச் சைவத்திருமுறைகட்கு மாறுபட்ட கருத்துக்களை வற்புறுத்தும் நூலாகப் பிறழவுணர்ந்து அயன்மை செய்து வருகின்றனர். திருவருட்பாவின் சமரச நன்னெறியினை வற்புறுத்தும் குறிக்கோளுடைய சன்மார்க்க அன்பர்களில் ஒருசாரார் வள்ளலார் பாடிய முதல் ஐந்து சைவத்திருமுறை யாசிரியர்களையும் அவர்கள் அருளிய திருமுறைப் பனுவல் களையும் போற்றுதலால் அவற்றை ஏற்றுக் கொள்ளும் விருப்பின்றிச் சிறப்பாகச் சாதிசமயப் பிணக்கொழித்துச் சமரச சன்மார்க்க நெறியினை வற்புறுத்தும் ஆறாந் திருமுறையினையே தமக்குரிய ஆதார நூலாகக் கொள்கின்றனர்........ மேற்குறித்த இருதிறத்தோரும் ......... ஒப்பு நோக்கி ஆராய்வார்களானால் சைவத்திருமுறைகள் மூலநூலாகவும், திருவருட்பா அவற்றின் பெருவிளக்கவுரை யாகவும் அமைந்துள்ள ஒற்றுமைத் திறத்தினை உற்றவாறுணர்வர் (முன்னுரை).

என்பதாகும். ஆக, திருவருட்பாச் சிந்தனை ஒன்றும் புதியதன்று, திருவருட்பாவும் புதியதன்று, சைவக் குரவர்களின் சிந்தனை வழி அமைந்தவையே இவை என்று நிலைநாட்ட எழுந்ததே இந்நூல். திருவருட்பாவை ஒருசார் சைவர், மருட்பா என்று பழித்தும், இன்னொருசார் சைவர், அருட்பா என ஏற்றும் நின்ற நிலையில் (வெள்ளைவாரணனார் இந்நூலை இயற்றுங்காலையும் நீறுபூத்த நெருப்பாக இவ்வுணர்வு இருந்தே வந்தது) இவ்விருசாரார்க்கும் இடையில் சமரசம் ஏற்படுத்தும் முயற்சியே இந்நூல் ஆகும்.

இச்சமரசப் பணியை ஆற்றும்போதிலேயே இந்நூல் திருவருட்பாவின் தனித்தன்மையையும் தனிக்கொள்கைகளையும்

ஒன்றுமில்லாமல் செய்துவிடுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. சான்றாக, 'வள்ளலார் செந்தமிழ்' என்னும் இயலில், பத்தொன்பதாம் நூற்றாண்டினை ஒரு பொற்காலமெனக் கூறலாம் என்று கூறி, அதற்குக் காரணம், திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் ஆறுமுகநாவலரும் வள்ளலாரும் தமிழ் வளர்ச்சிக்குக் காரணமான புலமைப்பணிகளைச் செய்துள்ளனர் என்று தேவையின்றிப் பிற இருவரையும் ஒப்பிடுகின்றார். வள்ளலாரைக் கடைசிவரை ஏற்றுக்கொள்ளாத ஆறுமுக நாவலரைப் பற்றித் தேவையற்ற மூன்று பக்க விளக்கம் அமைந்துள்ளது. இதற்குக் காரணம் சைவசமயம் என்னும் பொதுக்காரணியை வெள்ளைவாரணனார் ஏற்றுக்கொள்வதே ஆகும். சிறப்புக் காரணிகளாக அமையத்தக்க

1. பிற இருவரும் புலமை என்னும் நிலையில் அகந்தோயாது நின்று இறைவனை ஏத்தியவர்கள், வள்ளலார் அகந்தோய்ந்து நின்று அனுபவரீதியாகப் பாடியவர் என்னும் உண்மையையும்,

2. பிற இருவரும் சாதிச் செருக்கில் ஊறியவர்கள் என்பதும், வள்ளலார் சாதியை முற்றிலும் எதிர்த்தவர் என்னும் உண்மையையும்

வெள்ளைவாரணனார் சுட்டியிருந்தால் வள்ளலாரின் தனிப்பெருமை வெளிப்பட்டிருக்கும்.

சுருங்கச் சொன்னால் வள்ளலாரையும் சிற்றிலக்கியங்கள் புராணங்கள் பாடியோர் நிலைக்குக் கொண்டுவந்து நிறுத்தி, அவர் வீச்சினை உணராது, அவர் சைவக்குரவர்களைப் பின்பற்றியவர் என்ற நிலையிலேயே வெள்ளைவாரணனார் நோக்கியுள்ளார் என்றாலும் சைவமடங்களும் சித்தாந்தச் சைவர்களும் இன்றுவரை செய்வதுபோலத் திருவருட்பாவினை மறுக்காமல், அதை ஒரு சிறந்த 'பக்தி இலக்கியப் பனுவலாக' ஏற்றுக்கொண்டமை வெள்ளைவாரணனாரின் 'பரந்த மனப்பான்மை'யினைக் காட்டுகிறது எனலாம். ஆயினும் இந்நூல் எழுதப்பட்டமைக்கு முக்கியக்காரணம், திரு.வி.க.வின் தூண்டுதலும், பழ.சண்முகனாரின் தூண்டுதலும் ஆகும் என்பதை அவரே ஒப்புக்கொண்டுள்ளார்.

இன்று படைப்பிலும் ஆய்விலும் கருத்தியல்சார்பின் பங்குபற்றி நிறைய விவாதிக்கப்படுகிறது. ஆனால் சென்ற

நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த வெள்ளைவாரணனார் போன்ற புலவர்கள், பெரும்பான்மைச் சமூகக் கருத்துகளோடு ஒத்து வாழ்ந்தவர்கள். அதிலும் தங்கள் கருத்துகளும் வாழ்க்கை முறையும் முரண்படாமல், வாழ்க்கை முறையும் இலக்கியச் சிந்தனையும் முரண்படாமல் எண்ணியதைச் சொல்லி, சொல்லியதை நடைமுறையில் கடைப்பிடித்து வாழ்ந்தவர்கள். இதனை இவர்தம் இந்நூல்கள் தெளிவுபடுத்துகின்றன.

# இலக்கணப்பணி

**வ. குருநாதன்**

திருமுறைச் செல்வர், ஆராய்ச்சி அறிஞர், பேராசிரியர் க. வெள்ளைவாரணனாரின் இலக்கணப் பணிகளாய் அமைந்து விளங்குபவை 1. தமிழிலக்கிய வரலாறு தொல்காப்பியம், 2. தொல்காப்பியம் - நன்னூல்: எழுத்ததிகாரம், 3. தொல்காப்பியம், நன்னூல்: சொல்லதிகாரம், 4. தொல்காப்பியம் உரைவளம்: புறத்திணையியல், 5. தொல்காப்பியம் உரைவளம்: களவியல், 6. தொல்காப்பியம் உரைவளம்: கற்பியல், 7. தொல்காப்பியம் உரைவளம்: பொருளியல், 8. தொல்காப்பியம் உரைவளம்: மெய்ப்பாட்டியல், 9. தொல்காப்பியம் உரைவளம்: உவமவியல், 10. தொல்காப்பியம் உரைவளம்: செய்யுளியல், 11. தொல்காப்பியம் உரைவளம்: மரபியல் என்பனவாகும். இவை தமிழிலக்கணத் தொன்னூலாகிய தொல்காப்பியத்தையும் பின்னூலாகிய நன்னூலையும் ஆழ்ந்தும் அகன்றும் நோக்கி, ஒப்பிட்டும் உறழ்ந்தும் உணர்த்துவனவாய் உள்ளன. இவற்றினால் அறியப் பெறும் செய்திகளை இக்கட்டுரையில் ஆய்ந்து காணலாம்.

## நூல் விளக்கம்

வெள்ளைவாரணனாரின் முதன்மை இலக்கணப் பணியாகிய, 'தமிழிலக்கிய வரலாறு: தொல்காப்பியம்' என்பது அவர் பணியாற்றிய அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தொடங்கி நிகழ்வுற்ற தமிழிலக்கிய வரலாற்றாய்வுத் தொகுதிகளின் வரிசையிலும் முதல் தொகுதியாய் அமைந்து, 1957இல் வெளியிடப் பட்டது. இதனை ஆசிரியர் இரு பகுதியாய் இயற்றியுள்ளார். முதற்பகுதி தொல்காப்பியம் தொடர்பான வரலாற்றுச் செய்திகள் அனைத்தையும் ஆய்ந்து, வழுக்களையெல்லாம் மறுத்து ஒதுக்கி விட்டு உண்மைகளை உணர்த்துவது. இதனுள் மூன்று தமிழ்ச்சங்க வரலாறு, இறையனார் அகப்பொருள் தோற்றத்திற்குக் காரணமாக அக்காலத்து வழக்காறு இழந்திருந்த தொல்காப்பியப் பயிற்சியின்மை, பின்னர்த் தொல்காப்பியத்திற்கு உரைகண்ட பெருமக்கள் முயற்சி. தொல்காப்பியர் என்னும் இயற்பெயர் ஆய்வு, தொல்காப்பியரும் அகத்தியரும் தொடர்பான புனைகதைகள், உண்மை வரலாறுகள்,

தொல்காப்பியத்தை இயற்றுவித்த நிலந்தருதிருவிற் பாண்டியன், அரங்கேற்றம் கேட்ட அதங்கோட்டாசான், ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்றதன் கருத்து, தொல்காப்பியரின் காலம், சமயம் போன்ற பல்வேறு வரலாற்றுச் செய்திகளையும் நுணுகி ஆராய்ந்துரைக்கின்றார் ஆசிரியர் வெள்ளைவாரணனார். இரண்டாம் பகுதி, 'தொல்காப்பியம்: நுதலிய பொருள்' என்னும் தலைப்புடன் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் எனவரும் மூன்று அதிகாரங்களின் அடைவிலேயே இயல்வாரியான இலக்கணங்களையெல்லாம் உரைநடையிலேயே உணர்த்தி முடிகின்றது.

தொல்காப்பியம் - நன்னூல்: எழுத்ததிகாரம், தொல்காப்பியம் - நன்னூல்: சொல்லதிகாரம் என்ற இரண்டும் சிறந்த ஒப்பிலக்கண நூல்களாய் உருவெடுத்து அமைந்துள்ளன. முதனூலாகிய தொல்காப்பியத்தையே முதன்மையாகக் கொண்டு, அதன் ஒவ்வொரு நூற்பாவின் உண்மைப் பொருள்களையும் உரையாசிரியர்களின் கருத்துகளோடு உறழ்ந்து காட்டி, அவ்விலக்கணங்களை வழிநூலாகிய நன்னூல் எவ்வாறு தழுவி ஒற்றுமைப்பட்டும், தழுவாமல் காலத்திற்கேற்ப வேறுபட்டும் இயன்றுள்ளது என்ற முறையில் அவற்றையெல்லாம் எடுத்துக் காட்டி, இவ்விரு நூல்களையும் இயற்றியுள்ளார் ஆசிரியர்.

மதுரை - காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஆய்வுத் திட்டத்தில், தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியலுக்கு வித்துவான் மு. அருணாசலம் பிள்ளை தொகுத்துரைத்த உரைவளம் முன்னமே அமைந்துள்ளமையால், அவருடைய மாணவராகிய பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் அவ்வகத்திணையியல் நீங்கலான புறத்திணையியல் முதலிய எட்டியல்களுக்கும் தனித்தனியே தொகுத்தியற்றிய உரைவள நூல்களும் அப்பல்கலைக்கழக வெளியீடுகளாகவே வந்துள்ளன. அகத்திணையியலின் உரைவளம் போன்றே இவையும் அவ்வவற்றிற்கு அமைந்த இளம்பூரணருரை, நச்சினார்க்கினியருரை, பேராசிரியருரை, நாவலருரை ஆகிய பழையவுரைகளின் தொகுப்புடன், வெள்ளைவாரணனாருடைய ஆய்வுரை முடிபும் கொண்டு அமைந்துள்ளன. அன்றியும் பக்கத்திற்குப் பக்கம் பல அடிக்குறிப்புகளும் விரிவான முறையில் அமையப் பெற்ற இவை, சிறந்த இலக்கண விளக்க நூல்களாய் இலங்குகின்றன.

இனி, பேராசிரியர் க. வெள்ளைவாரணனாருடைய இவ்விலக்கண நூல்களைக் கருத்தியல் நோக்கில் கண்டு, அவற்றின் நுவல் பொருள் நுட்பங்களை எடுத்துக் காணலாம்.

## முச்சங்க வரலாறு

பண்டைத் தமிழகத்துப் பாண்டிய மன்னர்கள், கல்வி வளர்ச்சி கருதிப் புலவர் பலரையும் ஒருங்கழைத்து, மூன்று தமிழ்ச் சங்கங்களை நிறுவித் தமிழ் வளர்த்தார்கள் என்பது தொன்மை வரலாறு. தென் மதுரையில் நிகழ்ந்த முதற்சங்கத்தின் தமிழிலக்கண நூல் அகத்தியம்; தென்மதுரை கடல்கோட்பட்டபின் கபாடபுரத்தில் நிகழ்ந்த இடைச்சங்கத்தின் இலக்கணங்களாக விளங்கியவை அகத்தியமும் தொல்காப்பியமும் வேறு சிலவுமாம்; பல்லாண்டுகளுக்குப் பின் கபாடபுரமும் கடல் கோட்பட்டதாக, இப்போதுள்ள கூடல்மாநகரான உத்தர மதுரையில் நிகழ்ந்த கடைச்சங்கத்திற்கும் அகத்தியமும் தொல்காப்பியமுமே இலக்கண நூல்களாய் இருந்தன என்பதாம்.

முச்சங்கங்களின் வரலாற்றுக் குறிப்பினை முதன் முதலிற் கூறியது இறையனார் களவியல் உரையாகும். பின்னர்த் தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியரும், சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லாரும் இவ்வரலாறுகளை உடன்பட்டுத் தனித்தனியே வழிமொழிவர். இவற்றிடையே வருகின்ற சில மிகைக் கூற்றுகளால் இவ்வரலாற்றையே புனைந்துரை என்பர் சிலர். ஆயினும், இம்முச்சங்க வரலாறு மெய்ம்மையுடையதே எனக் கொள்ள வேண்டியுள்ளது. இவ்வரலாற்றில் காணப்படும் பெயர்கள், ஆண்டுக் கணக்குகள் போன்றவற்றில், காலப்பழமை காரணமாகச் சில புனைந்துரைகள் இடம் பெற்றிருத்தல் கூடும். அவை கொண்டு பண்டை நாளில் தமிழ்ச் சங்கங்களே நடைபெறவில்லையெனக் கூறுதல் பொருந்தாது என்கிறார் பேராசிரியர் வெள்ளைவாரணனார்.

இவ்வாறு, இடைச்சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் நூலாகிய தொல்காப்பியம் கடைச்சங்க காலத்து இறுதியிலேயே சில பல ஆண்டுகள் பயிலப்படாமல் அருகி ஒளிந்தது. இறையனார் களவியல் தோன்றியதற்கு அதன் உரையில் கூறப்படும் வரலாற்றினால் இச்செய்தி உய்த்துணரப்படுகின்றது என்னும் பேராசிரியர் (தொல். ப. 5) தொடர்ந்து அவ்வரலாற்றை விளக்குகிறார்.

## தொல்காப்பிய இடையறவும் இறையனார் களவியல் தோற்றமும்

அக்காலத்துப் பாண்டிய நாட்டில் பன்னிரண்டாண்டு வற்கடம் (பஞ்சம்) தோன்றியது. அதனால் வேற்று நாடுகளுக்குச் சென்ற புலவர்கள், வற்கடம் தீர்ந்து நாடு செழித்தபின் மீண்டு வந்த போது, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் மட்டுமே வல்லவர்கள் வந்து, பொருளதிகாரம் வல்லார் வந்திலர் ஆதலால், அரசன்

கவலையுற்றானாக அவனது கவலையைத் தீர்ப்பதற்கு இறைவனால் அருளப்பட்டது இறையனார் களவியல் என்று அது தோன்றியதற்கான வரலாறு அதன் உரையிலேயே காணப்படுகின்றது.

இவ்வரலாற்றினை எடுத்துக்காட்டும் போது, "இதனுள், பொருளதிகாரம் வல்லார்' எனக் குறிக்கப்பட்டவர் தொல்காப்பியப் பொருளதிகாரச் சூத்திரங்களை மனப்பாடமாக ஓதிப் பொருள் விரித்துரைக்க வல்ல ஆற்றலுடையோரேயாவர்; பொருளதிகாரம் வல்லாரைத் தலைப்பட்டிலேம் எனவே, பொருளதிகாரப் பகுதியும் கிடைக்கவில்லை என்பது நன்கு தெளியப்படும்; தொல்காப்பியப் பொருளதிகாரச் சூத்திரப்பகுதி கிடைத்திருக்குமானால் அறுபது சூத்திரத்தால் சுருங்கிய நூலாக இயற்றப்பெற்ற இறையனார் களவியலுக்கு உரைகாண வேண்டிய இன்றியமையாமை நேர்ந்திராது. எனவே, கடைச்சங்கத்து இறுதிக்காலத்தில் பாண்டிநாட்டில் தொல்காப்பியப் பொருளதிகாரப் பகுதி வழங்கவில்லை என்பது மேற்குறித்த இறையனாரகப் பொருள் வரலாற்றால் உய்த்துணரப்படும்" என்பர் வெள்ளைவாரணனார் (தொல். ப. 8).

இந்த உய்த்துணர்வுக்கு ஏற்ப அவர் ஒட்டக்கூத்தரின் குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ்ப் பாடலொன்றைப் பொருத்தமுற எடுத்துக் காட்டுகிறார்.

வடுவில் காப்பிய மதுர வாய்ப்பொருள்
  மரபு வீட்டியதால்
வழுதி யாட்சியை வளவன் மாற்றிட
  மதுரை கூப்பிடுநாள்
அடைவு கோத்தன அமுத சூத்திரம்
  அறுபதாய்ச் சமைநூல்
அமரர் கீழ்ப்பட அறிஞர் மேற்பட
  அருள மூர்த்திகளே (குலோத்து. பிள்ளைத். காப்பு)

எனவரும் இப்பாடலில், இறையனார் களவியல் இயற்றப் பெற்றதற்கு ஒட்டக்கூத்தர் கூறுகின்ற காரணம் வெள்ளைவாரணனார் கருத்திற்கு ஏற்புடையதாய் இசைகின்றது. இப்பாடலில் 'வடுவில் காப்பியம்' என்றது, குற்றமற்ற தொல்காப்பியத்தையும், 'மதுரவாய்ப் பொருள்மரபு' என்றது இனிமையமைந்த பொருளிலக்கணப் பகுதியையும் குறித்தன என்று ஆசிரியர் விளக்குகிறார். தொல்காப்பியப் பொருளதிகார மரபு பாண்டி நாட்டில் அரசியல் மாறுபாடு காரணமாகச் சிதைந்ததென்பதை இப்பாடலின் மூலம் எடுத்து விளக்கி, அச்சிதைவின் காரணமாகவே இறையனார் களவியல் எழுந்ததென்பதையும் நிறுவுகிறார் ஆசிரியர்.

## இறையனார் இறைவனல்லர்

திருமுறைச் செல்வர் க. வெள்ளைவாரணனார் இறைப்பற்று மிக்க பெரியோராயிருந்தும் களவியலாசிரியராகிய இறையனாரை இறைவனாகக் கருதாமல் புலவராகவே புரிந்து காட்டுகின்ற ஆய்வுச் சிந்தனை அறிதற்குரியது. இது பற்றி அவர் கூறுவதாவது,

''களவியல் நூல் இறைவனாலியற்றப் பெற்றதென்னும் கொள்கை இடைக்காலத்தில் வாழ்ந்த பெரியோர் எல்லாராலும் உடன்பட்டு வழங்கப்பட்டுள்ளது. எனினும் இக்கொள்கையை உலகியலில் நின்று ஆராய்வார்க்கு, இறையனார் களவியல் தொல்காப்பியப் பொருளதிகாரத்தைக் கற்றுவல்ல புலவர் ஒருவரால், அகப்பொருளிலக்கணத்தைச் சுருக்கமாகக் கூறுங் கருத்துடன் இயற்றப் பெற்றதே என்னும் மெய்ம்மை விளங்காமற் போகாது'' (தொல். பக். 10-11).

''களவியல் நூலாசிரியர் தாம் கூறும் கருத்துக்களை முன்னோர் மொழிபொருளாகக் கொண்டெடுத்து மொழிகின்றார்'' (ப. 12).

"இந்நூற் சூத்திரங்களிற் பெரும்பாலான, தொல்காப்பியத்தின் வழியே இயற்றப்பட்டனவாதலின், தொல்காப்பியச் சூத்திரங்களுக்குப் பொருள் விரிப்பன போன்று அமைந்துள்ளன. இந்நூலாசிரியராகிய இறையனார் தொல்காப்பியனார் கூறிய பொருளையேயன்றித் தொல்காப்பியச் சூத்திரங்களையும், சூத்திரப் பகுதிகளையும் தம்நூலில் ஆங்காங்கே இணைத்துக் கூறியுள்ளார்........

இவையெல்லாவற்றையும் உற்று நோக்கி ஆராயும் வழி, களவியல் என்னும் இந்நூல் இறையனார் என்னும் பெயரினராகிய புலவர் ஒருவரால் தொல்காப்பியத்தின் வழி நூலாக இயற்றப் பெற்றிருத்தல் வேண்டுமென்பது துணியப்படும்'' (ப. 12). "குறுந்தொகையில் தொகுக்கப் பட்ட, 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் பாடலைப் பாடிய இறையனார் எனப் பெயரிய கடைச்சங்கப் புலவரே இந்நூலாசிரியராய் இருத்தலும் கூடும். இந்நூலின் உரைமுகப்பில் இதற்குத் தெய்வதத்தன்மை கற்பித்துக் கூறிய உரைப்பகுதி, பின்வந்தோர் ஒருவரால் இந்நூலைச் சிறப்பித்தல் வேண்டிப் புனைந்து எழுதப்பெற்றதே என ஆராய்ச்சியாளர் துணிந்து கூறுவர்" (ப. 13).

வெள்ளை வாரணனாரின் இந்த எழுத்துகள் அவரது நடுவுநிலை திறம்பாத ஆராய்ச்சிக் கொள்கையை நமக்கு

அறிவிப்பதாய் அமைந்துள்ளன. திருநாவுக்கரசர், கல்லாடனார், ஒட்டக்கூத்தர், பேராசிரியர் முதலிய பெரியோர்களும் சான்றோர்களும் உரையாசிரியர்களும் எல்லாம் இறைவனாகவே நம்பி ஏற்றுக் கொண்ட இறையனாரை, உலகியல் உணர்வோடு எண்ணி ஆராய்ந்து, அவர் ஒரு புலவரேயென்று உண்மையுணர்த்திய உறுதி மிகவும் பாராட்டத்தக்கது.

## தொல்காப்பியன்: இயற்பெயரே

பண்டைத் தமிழ் மக்களிடையே காப்பியன் என்னும் இயற்பெயர் பெருக வழங்கியது. காப்பியாற்றுக் காப்பியன், பல்காப்பியன், வெள்ளூர்க் காப்பியன் எனவரும் பெயர்களைப்போல், தொல்காப்பியன் என்ற பெயரும் இயற்பெயரே என நிறுவுகிறார் ஆசிரியர். “முதலாம் இராசராசன் கல்வெட்டிலே, ‘காப்பியன் ஆதித்தன் கண்டத்தடிகள்” (தென்னிந்தியக் கல்வெட்டு, 5:660) எனவரும் பெயரிலுள்ள காப்பியன் எனும் சொல் இயற்பெயராகவே வழங்கப் பெறுதல் காணலாம்” என்று இதற்குச் சான்று காட்டுகிறார்.

தொல்காப்பியன் என்னும் இயற்பெயருக்குப் ‘பழமையான காப்பியக்குடியில் பிறந்தோன்’ எனப் பிற்காலத்தவர்களான உரையாசிரியர்கள் பொருள் கூறியது பொருத்தமற்றது. அதுகொண்டு பார்ப்பாரது பழைய குடிவகைகளுள் (கோத்திரங்களுள்) ஒன்றாகிய காவிய கோத்திரத்தார் தொல்காப்பியர் என்று புனைந்துரைக்கும் போக்கும் பொருந்தாதது. சிலப்பதிகாரத்து வரந்தரு காதையில், ‘காப்பியத் தொல்குடி கவின்பெற வளர்ந்து’ என்று வருவது, காப்பியன் என்ற இயற்பெயரடியாகப் பிறந்த ஊர்ப்பெயராகவோ, காப்பியன் என்பவரை முதல்வராகக் கொண்ட பழங்குடிப் பெயராகவோ கருத வேண்டியுள்ளது. காரணம், பழந்தமிழ்ச் சான்றோர்களில் காப்பியன் என்னும் இயற்பெயருடையோர் சிலர் நினைவாகக் காப்பியாறு, காப்பியக்குடி, காப்பியாமூர் என்னும் ஊர்ப் பெயர்கள் தோன்றி வழங்கி வருகின்றன.

நச்சினார்க்கினியர் உரையில் ஆசிரியர் தொல்காப்பியரைச் சமதக்கினி முனிவரின் புதல்வரென்றும், திரணதூமாக்கினி என்னும் இயற்பெயருடையவரென்றும், அகத்தியரால் வடநாட்டிலிருந்து அழைத்து வரப்பட்டவரென்றும் ஒரு புனைந்துரை வருகின்றது. வரலாற்று ஆதாரமில்லாத இப்புனைகதையின்படி பார்த்தாலும் பார்க்கவ கோத்திரத்தவரான சமதக்கினியின் புதல்வரைக் காவிய கோத்திரத்தவர் எனக்கூறுதல் பொருந்தாது.

### சிறப்புப் பாயிரச் செய்திகள்

தொல்காப்பியருடன் பயின்ற ஒருசாலை மாணாக்கராகிய பனம்பாரனார் பாடிய சிறப்புப் பாயிரமே தொல்காப்பியருடைய வரலாற்றை உள்ளவாறு உணரப் பெருந்துணைபுரிகின்றது என்று எடுத்துக் கொண்டு ஆசிரியர் பல செய்திகளையும் ஆய்ந்து அறுதியிடுகிறார்.

'தொல்காப்பியர் காலத்தில் வடக்கே வேங்கட மலைத் தொடரும் தெற்கே குமரியாறும் தமிழகத்தின் எல்லைகளாய் அமைந்திருந்தன' (ப. 24); இந்தக் குமரியாறு கடல்கோட்பட்ட பிறகே குமரிக்கடல் தெற்கெல்லையானது.

'தலைச்சங்கத்து இறுதிக் கடல்கோளால் தமிழ் இலக்கண நூல்கள் அழிவுண்ட காரணத்தால் தொல்காப்பியர், இடைச்சங்கத்தில் இருந்து இலக்கணம் இயற்றினார்' (ப. 36-42).

'அகத்தியனார்க்குத் தொல்காப்பியனார் மாணவரென்றோ, அகத்தியத்திற்குத் தொல்காப்பியம் வழிநூலென்றோ தெளிவாகச் சொல்லுதற்கு இடமில்லை. அகத்தியச் சூத்திரங்கள் எனப் பின்னுள்ளோரால் காட்டப் பெற்ற சூத்திரங்களை நோக்குங்கால், அவை தொல்காப்பியனார் காலத்திற்கு மிகமிகப் பிற்காலத்தே இயற்றப் பெற்றனவாதல் வேண்டுமென்பது பெறப்படும்' (ப. 44).

'அகத்தியரோடு தொல்காப்பியரை இணைத்துக் கூறிய யாவும் புனைகதைகளே என்பது புலனாகின்றது' (பக். 46-51).

தொல்காப்பியனாரது வடமொழி வியாகரணப் பயிற்சியைச் சிறப்பிக்கக் கருதிய பனம்பாரனார், 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என அவ்வாசிரியரைப் போற்றுதலால், வடமொழியின் சிறந்த இலக்கண நூலாக அவர் காலத்து வழங்கியது ஐந்திர வியாகரணமே என்பது நன்கு துணியப்படும்; ஐந்திர வியாகரணத்தினும் திறம்பட அமைந்த இலக்கண நூல், பாணினி முனிவரால் இயற்றப் பெற்ற அஷ்டாத்தியாயி என்பதே வடமொழி வல்லார் கருத்தாகும். பாணினி முனிவரால் இயற்றப்பெற்ற அஷ்டாத்தியாயி என்னும் இந்நூல், தொல்காப்பியர் காலத்தில் வழங்கியிருக்குமாயின், அவர் காலத்தில் பாணினியப் பயிற்சியையே சிறப்புடையதாகப் பாராட்டியிருப்பர். அப்படிப் பாராட்டாமையால், பாணினிக்கு முற்பட்டவர் தொல்காப்பியர் (ப. 80).

'பல்புகழ் நிறுத்த படிமையோன்' என்னும் தொடரில் வரும் படிமையோன் - தவ ஒழுக்கத்தையுடையோன் என்பது கொண்டு,

தொல்காப்பியரைச் சமண முனிவராகக் கருத இயலாது; படிமையோன் - தன்மையுடையோன் என்று யாவராலும் பொதுவாக வழங்கப் பெறுமாறே கருதுதற்கு வாய்ப்புண்டு (பக். 84-86).

தொல்காப்பியம் சங்கச் செய்யுட்களுக்கும் திருக்குறளுக்கும் நெடுங்காலத்துக்கு முன்னரே இயற்றப் பெற்ற தொன்மையுடையது (பக். 95-96).

## தொல்காப்பியம் – நன்னூல்: ஒப்பீடு

பேராசிரியர் க. வெள்ளைவாரணனாரின், 'தொல்காப்பியம் -நன்னூல்: எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் இரு நூல்களையும் காணுங்கால், மூன்று நோக்கங்களில் அவருடைய இலக்கணப் பணிகளை மதிப்பீடு செய்யலாம்.

1. தொல்காப்பிய நூற்பாக்கள் ஒவ்வொன்றையும் நேரிய பொருளுரைத்து விளக்குதல்;

2. இளம்பூரணர் முதலிய உரையாசிரியர் கருத்துகளைச் சிறப்புற எடுத்துக் காட்டுதல்;

3. தொல்காப்பிய நூற்பாக்களுக்கு இணையான இலக்கணம் தாங்கிய நன்னூல் நூற்பாக்களை எடுத்துக்காட்டி விளக்குதல்.

இம்மூன்று வகையான உரைநெறிகளோடு ஆசிரியர் அந்நூல்களை உருவாக்கியுள்ளார். தொடர்ந்து அவற்றைக் காணலாம்.

### எழுத்ததிகாரம்

முதலாவதாக, தொல்காப்பிய நூற்பாக்களை நேர்பொருள் உரைத்து விளக்குகின்ற வெள்ளைவாரணனாரின் முறை சிறப்புற அமைந்துள்ளது. எழுத்ததிகாரத் தொடக்க இயலான நூன்மரபின் முதல் நூற்பா,

> எழுத்தெனப் படுப
> அகரமுதல
> னகர விறுவாய் முப்பஃதென்ப
> சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே

என்று எழுத்துகளின் பெயரும் முறையும் தொகையும் ஆகியவற்றைக் கூறுகின்றது. இந்நூற்பாவில், 'சார்ந்து வரல் மரபின் மூன்று' எனக்குறித்த சார்பெழுத்துகளை அடுத்து வரும் நூற்பாவில் அடுக்கிக் காட்டுகின்றார் தொல்காப்பியர்.

அவைதாம்,

குற்றியலிகரம் குற்றிய லுகரம்
ஆய்த மென்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன

என்பது நூற்பா. இதற்கு வெள்ளைவாரணனார் பின்வருமாறு பொருள்கூறி விளக்குகின்றார்.

"இது மேற்சார்ந்து வருமென்ற மூன்றிற்கும் பெயரும் முறையும் கூறுகின்றது.

இதன் பொருள்: மேற்சார்ந்து வருமெனப் பட்டவை தாம் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தமென்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளி வடிவும் ஆம். அவையும் முற்கூறிய முப்பதெழுத்தினோடு ஒரு தன்மையவாய் வழங்கும் என்றவாறு.

முற்கூறிய இரண்டும் உம்மை தொக்கு நின்றன. ஒரு மொழியைச் சார்ந்து வருமியல்பன்றித் தனித்தியங்குமியல்பு தமக்கில வென்றலின், அவை தம்மை எடுத்தோதிக் காட்டலாகாமையின், அவற்றிற்குக் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என வேறு வேறு பெயரிட்டு ஈண்டு எடுத்தோதினார். அவை தனித்தொலிக்கப் பெறாவாயினும் மொழியோடு சார்த்தியிசைக்கப்படுதலின் எழுத்தென்றற்கு ஒருவகையான் உரியவென்பார், 'எழுத்தோரன்ன' என்றார். முற்றியலுகர இகரங்களோடு இவற்றினிடை வேற்றுமை தெரிதற்பொருட்டு இகரம் உகரம் என்றொழியாது குற்றியலிகரம் குற்றியலுகரம் என்றார்."

இவ்வாறு தொல்காப்பிய நூற்பாவிற்கு நேரிய முறையில் பொருளுரைத்து விளக்கிய வெள்ளைவாரணனார் தொடர்ந்து உரையாசிரியர்களின் சிறப்பு விளக்கங்களை எடுத்துக் காட்டுகின்றார்.

"புணர்ச்சி வேறுபடுதலின் இகர உகரம் குறுகி நின்றன வென்றும், சந்தனக் கோல் குறுகினால் பிரப்பங்கோல் ஆகாதவாறு போல் உயிரது குறுக்கமும் உயிரேயாம் என்றும், இவற்றைப் புணர்ச்சி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும் பற்றி வேறோரெழுத்தாக ஆசிரியர் வேண்டினாரென்றும் கூறுவர் நச்சினார்க்கினியர்" என்பர் வெள்ளைவாரணனார்.

இன்னும் ஆய்தவெழுத்துப் பற்றி நச்சினார்க்கினியர் கூறுகின்ற கருத்தினை எடுத்துக்காட்டி, அதன் விளக்கமாக, "ஆய்தம் மூன்று புள்ளி வடிவிற்றென்பதும், நச்சினார்க்கினியர்

காலத்திலுள்ளார் சிலர் அதனை நடுவே வளைந்த கோடிட்டு வழங்கினார்களென்பதும் ஆய்தம் ஏனை ஒற்றுக்கள் போல உயிரேறாது நிற்பதொன்றென்பதும் புலப்படுதல் காணலாம்" என்பர்.

ஆய்தவெழுத்துப் பற்றிய இவ்விளக்கத்திற்கு மேலும் விளக்கமாகப் பின்வரும் விளக்கத்தை வரைகிறார்.

"நடுவு வாங்கியிட்டெழுதுப என்றதற்கேற்ப, 8ஆம் நூற்றாண்டில் பல்லவ மன்னன் காலத்ததாக அமைந்த காசாக்குடிப் பட்டயத்துள், 'வெஃகா' என்ற சொல்லின் ஆய்தம் ....... மேலும் கீழும் புள்ளியும் இடையில் வளைந்த கோடும் உடையதாக வரையப் பட்டிருப்பது ஆராயத் தக்கது."

இதன்பின் தமிழ் ஆய்தவெழுத்தினை வடமொழி 'ஆஸ்ரதம்' என்பதன் திரிபெனக் கொண்டு கூறிய மு. இராகவையங்கார் கருத்தினை எடுத்து விரிவான தடைவிளக்கங்களோடு மறுத்துப் பின்வருமாறு முடிபு கூறுகிறார்.

"இதுகாறும் கூறியவற்றால் ஆய்தம் என்னும் பெயர், 'ஆஸ்ரதம்' அல்லது, 'ஆயதம்' என்றவற்றின் திரிபன்று என்பதும், வடமொழி விசர்க்கத்திற்கும் இதற்கும் வடிவானும் இயல்பானும் ஒலியானும் நிலையானும் வேறுபாடு மிகுதியும் உளவென்பதும் விளக்கப்பட்டன. இதனால் ஆய்தமென்ற எழுத்தொலி தமிழிற்கேயுரிய சிறப்பொலி என்பதும் விளக்கப்பட்டது". (தொல்.நன். எழுத்து. ப. 31).

இவ்வாறான விளக்கங்களுக்கு இடையில் இளம்பூரணர், சிவஞானமுனிவர் ஆகியோர் கருத்துகளையும் வேண்டுமிடங்களில் எடுத்துக்காட்டி இயம்புகின்றார்.

இவ்விளக்கங்களுக்குப் பின் தொல்காப்பியத்தின் இந்நூற்பாக் கருத்தினை நன்னூலார் எவ்வாறு ஏற்று மொழிகின்றார் என்னும் ஒப்பீடு வருகின்றது.

"இங்ஙனம் தொல்காப்பியனார் சார்ந்து வரும் எழுத்து மூன்றென்றாராக, பவணந்தியார் தம் நூலுள் தொல்லாசிரியர் உரைத்த சார்பெழுத்து என்றதன் கண் உயிர்மெய் அளபெடை முதலியனவும் சேர்த்து

**உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு**
**அஃகிய இஉ ஐஔ மஃகான்**
**தனிநிலை பத்தும் சார்பெழுத் தாகும்**

என்பதனாற் சார்பெழுத்து பத்தெனக் கூறி,

உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டு;உயர் ஆய்தம்
எட்டு;உயிர் அளபெழு மூன்று;ஒற் றளபெடை
ஆறேழ் அஃகும் இம்முப் பானேழ்;
உகரம் ஆறாறு; ஐகான் மூன்றே;
ஔகான் ஒன்றே; மஃகான் மூன்றே;
ஆய்தம் இரண்டொடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப

என்பதனால்

| | |
|---|---|
| உயிர் மெய் | 216 |
| முற்றாய்தம் | 8 |
| உயிரளபெடை | 21 |
| ஒற்றளபெடை | 42 |
| குற்றியலிகரம் | 37 |
| குற்றியலுகரம் | 36 |
| ஐகாரக்குறுக்கம் | 3 |
| ஔகாரக்குறுக்கம் | 1 |
| மகரக்குறுக்கம் | 3 |
| ஆய்தக்குறுக்கம் | 2 |
| ஆகச்சார்பு | 369 |

என விரித்துக் கூறியுள்ளார்" என்பது வெள்ளைவாரணனார் விளக்கம்.

## சொல்லதிகாரம்

எழுத்ததிகாரத்தில் காணப்பட்டது போல் சொல்லதிகாரத்திலும் வெள்ளைவாரணனாரின் விளக்கத்திற்குச் சான்று காணலாம்.

அஆவ என வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே

என்பது சொல்லதிகாரத்துக் கிளவியாக்கத்தில் இடம்பெறும் நூற்பா. இதற்கு வருகின்ற விளக்கம்:

"இஃது அஃறிணைக்கட் பலவறிசொல் ஆமாறு உணர்த்துகின்றது.

இதன்பொருள்: பலவறி சொல்லாவன அஆவ என்னும் இறுதியுடைய அக்கூற்று மூன்று சொல்லாம் என்றவாறு.

பலவறி சொல் - அஃறிணைப் பலவின் பாற்சொல்.

உதாரணம்: உண்டன, உண்ணாநின்றன, உண்பன, கரியன எனவும், உண்ணா, தின்னா எனவும்; உண்குவ, தின்குவ எனவும் வரும்.

உண்டன, உண்ட என இறந்த காலத்தும், உண்ணா நின்றன, உண்ணாநின்ற என நிகழ்காலத்தும் அகர ஈறு முதனிலைக்கேற்ற வாற்றால் அக்காலத்திற்குரிய இடைநிலையைப் பெற்ற அன்சாரியை பெற்றும் பெறாதும் முடிந்தாற்போன்றே, எதிர்காலத்தும் முதனிலைக் கேற்றவாற்றால் அக்காலத்திற்குரிய இடைநிலையைப் பெற்று அன்சாரியை பெற்றும் பெறாதும் முடியும்.

எதிர்காலத்திற்குரிய இடைநிலைகளாவன பகரவொற்றும் வகரவொற்றுமாம். அவற்றுள் பகர இடைநிலை பெற்று அன்பெற்றும் பெறாதும் முடிவுழி உண்பன, உண்ப எனவரும். வகர இடைநிலை பெற்று அவ்வாறு முடிவுழி வருவன, வருவ; செல்வன, செல்வ என வரும்.

இங்ஙனம் முதனிலைக் கேற்றவாற்றால் இடைநிலை வேறுபடாது அன்சாரியை யின்றி உண்குவ, தின்குவ எனக் குகரச் சாரியை பெற்று வருவன வகர ஈறாகக் கொள்ளப்படும்.

அஃறிணைப் பலவின் பாற்குரியதாக இங்குக் காட்டப் பெற்ற, 'உண்ப' என்பது எதிர்காலம் குறிக்கும் பகர இடைநிலையை ஊர்ந்து வந்த அகர வீறு எனவும், மேல் உயர்திணையில் பல்லோரறியும் சொல்லாகக் காட்டப்பெற்ற உண்ப என்பது பகர வீறு எனவும் பகுத்துணர்தல் வேண்டும். இத்தொடக்கத்தன பலபொருள் ஒரு சொல் எனப்படும்."

இவ்வளவும் இந்நூற்பாவிற்குரிய வெள்ளைவாரணனாரின் நேரிய விளக்கம். இதன்பின் இளம்பூரணரின் சிறப்புரையொன்றை எடுத்துக் காட்டி, அதனையும் உட்கொண்டு அமைந்த நன்னூல் நூற்பாவினைத் தருகின்றார்.

"ஆகார வீறு உண்ணா, தின்னா என்றாங்கு மூன்று காலத்தையும் எதிர்மறுக்கும் எதிர்மறைக்கண் அல்லது பால் விளங்கி நில்லா என்பர் இளம்பூரணர். அவரது உரையினை(யும்) அடியொற்றி அமைந்தது

அஆ வீற்ற பலவின் படர்க்கை
ஆவே எதிர்மறைக் கண்ண தாகும் (328)

எனவரும் நன்னூற் சூத்திரமாகும்.

"ஆவே எதிர்மறைக் கண்ணதாகும்" என்றமையான் ஏனை விகுதிகள் உடன்பாட்டினும் எதிர்மறையினும் வருமென்பது பெற்றாம்.

"தொல்காப்பியர் கூறிய வகர விகுதியினைப் பவணந்தியார் அகரவிகுதியுள் அடக்கிக் கூறியுள்ளார் என்பது, 'வவ்வீறு அகரவீறாய் அடங்குதலானும் கள்ளீறு தானேநின்று ஒருவினைக்கீறாய் வாராமையானும் ஈண்டுக் கொண்டிலர்' என்னும் மயிலைநாதர் உரைவிளக்கத்தால் புலனாம்".

வெள்ளைவாரணனாரின் இந்த விளக்கத்தினுள் நன்னூலுக் கமைந்த மயிலைநாதரின் உரைவிளக்கமும் இயைந்து வந்துள்ள சிறப்பு அறிந்துணரத்தகுவதாம்.

தொல்காப்பியம், நன்னூல் என்னும் இரண்டு இலக்கண நூல்களின் ஒப்பீடாயினும் இவற்றின் இடையே சின்னூலென்னும் சிறப்புமிக்க நேமிநாதம் மற்றும் வீரசோழிய நூல்களின் கருத்துகளும் வேண்டுமிடங்களில் காட்டப்பட்டுள்ளன.

**செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் (கிளவி. 13)**

எனவரும் தொல்காப்பிய நூற்பா விளக்கத்தின் கீழ்,

"வினாவாவது, அறிதல் வேண்டும் என்பதனை வெளிப் படுப்பது. அறியான் வினாதல், அறிவொப்புக் காண்டல், ஐயம் அறுத்தல், அவனறிவு தான்காண்டல், மெய்யவற்குக் காட்டல் என வினா ஐந்து வகைப்படும் என்பர் இளம்பூரணர். இவ்வைந்தினையும்,

**அறியான் வினாதல் அறிவொப்புக் காண்டல்**
**ஐய மறுத்தல் அவனறிவு தான்காண்டல்**
**மெய்யவற்குக் காட்டலோடு ஐவகை வினாவே**

**(நேமி. சொல். 5)**

எனத் தொகுத்துரைத்தார் குணவீரபண்டிதர்'' என்பர் வெள்ளைவாரணனார்.

## பொருளதிகார உரைவளம்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் புறத்திணையியல் முதலிய இயல்களுக்கு வெள்ளைவாரணனார் தொகுத்துரைத்த உரைவளங்களும் அவருடைய சீரிய இலக்கணப் பணியாய்ச் சிறந்து விளங்குகின்றன. அவை, முற்கூறியாங்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் மற்றும் நாவலர் சோமசுந்தர

பாரதியார் ஆகிய முன்னை உரையாசிரியர்களின் உரைக் களஞ்சியமாகவும், வெள்ளைவாரணனாரின் ஆய்வுரைத் தொகுதியாகவும் அமைந்துள்ளன. ஒவ்வொரு பக்கத்திலும் வேண்டுமளவு அடிக்குறிப்பு விளக்கங்களையும் அமைத்துள்ளார் ஆசிரியர். இங்கே ஓரிரு ஆய்வுரைகளையும் அடிக்குறிப்புகளையும் சான்றுகளாகக் காணலாம்.

''பாங்கர் நிமித்தம் பன்னிரண் டென்ப'' என்பது தொல்காப்பியக் களவியல் நூற்பா. இதற்கு உரையாசிரியர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையில் உரைவரைவர். முதலில் இளம்பூரணர் உரை வருமாறு:

"பலவகை மணத்தில் பாங்கராயினார் துணையாகுமிடம் இத்துணையென வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று.

பாங்கராயினார் துணையாகக் கூடும் கூட்டம் பன்னிரண்டு வகை என்றவாறு.

நிமித்தம் என்பது நிமித்தமாகக் கூடும் கூட்டம் ........... அவையாவன: பிரமம் முதலிய நான்கும், கந்திருவப் பகுதியாகிய களவும் உடன்போக்கும், அதன்கண் கற்பின் பகுதியாகிய இற்கிழத்தியும், காமக்கிழத்தியும், காதற்பரத்தையும், அசுரம் முதலாகிய மூன்றும் என இவை".

அடுத்து நச்சினார்க்கினியர் உரைவிளக்கம்:

"இது மேற்பாங்கி நிமித்தம் கூறிய அதிகாரத்தானே பாங்கன் நிமித்தம் கூறுகின்றார்.

இதன்பொருள்: அகனைந்திணையும் அல்லாதவழிப் பாங்கன் கண்ணவாகிய நிமித்தம் பன்னிரு பகுதியாம் என்றவாறு

...... அவை எண் வகை மணனுமாதலின் அவற்றைக் கைக்கிளை முதலிய ஏழுதிணைக்கும் இன்னவாறு உரியவென, வருகின்ற சூத்திரங்களாற் பன்னிரு பகுதியும் அடங்கக் கூறுப. அவ்வாற்றானே பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் எனவும், முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் எனவும், அசுரம், இராக்கதம், பேய் எனவும் பன்னிரண்டாம்''.

உரையாசிரியர் இருவர் கருத்துகளும் முழுநிறைவளிக்காத நிலையில் பேராசிரியர் வெள்ளைவாரணனாரின் ஆய்வுரை பின்வருமாறு அமைந்துள்ளது.

"பாங்கா நிமித்தம் பன்னிரண் டென்ப."

இது களவொழுக்கத்தில் தலைவன் தலைவி இருவரும் கூடுதற்கு நிமித்தமாவன இவையெனக் கூறுகின்றது.

இதன்பொருள், அன்புற்றார் இருவர் துணையாய்க் கூடுதற்கு நிமித்தமாவன பன்னிரண்டு என்பர் ஆசிரியர்.

அவையாவன: காட்சி, ஐயம், துணிவு என இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னர்க்கூறிய மூன்றும் குறிப்பறிதலின் பயனாய்த் தோன்றும் வேட்கை முதல் சாக்காடு ஈறாகச் சொல்லப்பட்ட ஒன்பதுமாகும். இவை பன்னிரண்டுமே அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காமக்கூட்டத்திற்குக் காரணமாவன; ஆதலால் பாங்கா நிமித்தம் எனப்பட்டன. பாங்கா நிமித்தம் என்பது, பாங்கு ஆம் நிமித்தம் எனப்பிரியும். பாங்கு-துணை; நிமித்தம் - காரணம். 'பாங்கா நிமித்தம்' என்பதே, ஏடெழுதுவோரால், 'பாங்கர் நிமித்தம்' எனப் படிக்கப் பெற்றிருத்தல் வேண்டும்".

வெள்ளைவாரணனாரின் இவ்விளக்கம் அகத்திணை ஆய்வாளர்களுக்கு ஏற்புடையதாகவே இசைகின்றது.

இனி, அடிக்குறிப்பு விளக்கங்களுள் ஒரு சான்று காணலாம்.

தொல்காப்பிய மெய்ப்பாட்டியலின் தொடக்கத்தில் எண்வகை மெய்ப்பாடுகளோடு நடுவுநிலை மெய்ப்பாட்டினைக் கூறாமைக்குரிய காரணத்தை இளம்பூரணர் பின்வருமாறு கூறுகின்றார்.

"அவையிற்றாக மத்திமம் (நடுவுநிலைமை) என்பதனை ஈண்டொழித்தது என்னையெனின்,

மத்திமம் என்பது மாசறத் தெரியின்
சொல்லப் பட்ட எல்லாச் சுவையொடு
புல்லா தாகிய பொலிவிற் றென்ப

என்பது செயிற்றியச் சூத்திரம். இதனானே இது வழக்கிலக்கணம் அன்று என உணர்க"

இளம்பூரணரின் இவ்வுரைப்பகுதி நிறைவளிக்காத நிலையில் வெள்ளைவாரணனார் பின்வருமாறு அடிக்குறிப்பு விளக்கம் அளிக்கின்றார்.

"வடநூலார் நகை முதலிய சுவைகளோடு சமநிலை என்னும் நடுவுநிலையையும் கூட்டிச் சுவை ஒன்பதென்பர். அவற்றுள்

சமநிலையென்பது விருப்பு வெறுப்பின்றி உலகியலிற் பற்றற்றவராய் வாழும் சான்றோர்க்கேயுரியதொன்று ஆகலானும், எள்ளல் முதலிய பொருள் வகைகளால் விகாரமுற்றுத் தோன்றுவனவாகிய நகை முதலியனபோல் நால்வகைப் படுதலின்றித் தன்னியல்பில் ஒன்றாகத் தோன்றுவது ஆகலானும் அதனை, 'ஆங்கவை ஒருபாலாக' எனப் பின்வரும் சூத்திரத்தில், 'நடுவுநிலை' என்ற பெயரால் தனிநிலை மெய்ப்பாடுகளுள் ஒன்றாகத் தொல்காப்பியனார் குறித்துள்ளார்". (தொல். மெய். உரைவளம். ப. 3).

முடிவுரை

இவ்வாறெல்லாம், திருமுறைச் செல்வர் பேராசிரியர் க. வெள்ளைவாரணனாரின் இலக்கணப் பணிகள், தமிழின் பழம்பெரும் இலக்கணமான தொல்காப்பியத்தையும் பின்னூல்களில் சிறந்த நன்னூலையும் களங்களாகக் கொண்டு, அகலமும் ஆழமும் அமையச் சிறந்து விளங்குகின்றன. இன்றைய இலக்கணிகளும் ஆய்வறிஞர்களும் அவற்றை எடுத்து நோக்கும் போது அவற்றிலிருந்து தொடர் சிந்தனைகள் பலப் பல தோன்றுதல் கூறத்தக்கது.

# சமயப்பணி

க. இளமதி சானகிராமன்

திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர், கலைமாமணி, சித்தாந்தச் செல்வர் என்றெல்லாம் புகழப்பெற்ற வெள்ளைவாரணனார் சைவத்தையும் தமிழையும் தம் இரு கண்களெனப் போற்றியவர். 14-1-1917-இல் சைவக்குடியில் பிறந்த அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும், மொழிப்புல முதன்மையராகவும் விளங்கியவர். மதுரைக் காமராசர் பல்கலையிலும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலையிலும் மொழிப்புல முதன்மையராகவும் பணிபுரிந்தவர். தாம் பணி புரிந்த இடங்களிலெல்லாம் சமயப்பணியினையும் விடாது செய்தவர். 13-6-1988-இல் சிவனடி சேர்ந்த அன்னாரின் சமயப்பணி போற்றுதற்குரியதாகும்.

## சமயப்பணி

சமயப்பணி என்பது ஒவ்வொருவரும் தாம்தாம் சார்ந்துள்ள சமயங்களுக்குத் தம்மாலியன்ற அளவு சேவை செய்வதாகும். படிக்காத பாமர மக்கள் கோயில்களில் வழிபாடு நடத்துதல், பஜனைகளிலும் பூசைகளிலும் கலந்து கொள்ளுதல், திருவலகிடுதல், மெழுகுதல், கோலமிடுதல், பூக்கள் கட்டிக் கொடுத்தல், நீர் இறைத்தல், சமய நெறிமுறைகளைப் பின்பற்றுதல், மந்திரங்களைச் செபித்தல், திருவிளக்கேற்றுதல் போன்ற பல பணிகளில் ஈடுபடுவர்.

வள்ளல் குணமுடைய சான்றோர்கள் அன்ன தானங்கள் செய்தல், அறக்கட்டளைகள் நிறுவுதல், மடங்கள் கட்டுதல், கோயில்கள் கட்டுதல், திருப்பணிகள் செய்தல், வழிபாடுகள் நடைபெற நிவந்தங்கள் அளித்தல், சான்றோர்களைக் கொண்டு சமயச் சொற்பொழிவுகள் ஆற்றச் செய்தல், திருவிழாக்காலங்களில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்தல் எனப் பல்வேறு பணிகளைச் செய்து சமயத் தொண்டாற்றுவர்.

சமய நூல்களில் நன்கு புலமையுடையோர் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றுதல், சமய நூல்கள் இயற்றுதல், இறைபக்திப்

பாடல்களைப் பாடுதல், நூல்களுக்கு உரைகள் எழுதுதல் என்னும் வகையில் தம்மாலியன்ற சமய இலக்கியப்பணிகளைச் செய்வர்.

வெள்ளைவாரணனார் நற்புலமையும் ஆராய்ச்சித்திறனும் வாய்ந்தவராகையால் சமய நூல்களுக்கு உரைகள் எழுதுதல், சமய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுதல், சமயச் சொற்பொழிவுகள் ஆற்றுதல் என்ற வகையில் சமயப்பணிகளைப் புரிந்துள்ளார். அன்னார் சமயப்பணியினை இருகூறாகப் பகுத்துக் கொள்ளலாம். அவை,

1. சமய வாழ்வுப் பணி
2. சமய இலக்கியப் பணி

என்பவையாம்.

சமய வாழ்வுப்பணி என்பது, தமது இல்லத்திலும் திருக்கோயில்களிலும் இறைவழிபாடு ஆற்றுதல், தம்மைச் சார்ந்தவர்களையும் சைவ சமயப்பணிகளில் ஈடுபடுத்துதல், வழிபாட்டு நெறிமுறைகளைக் கற்றுத் தருதல், தாம்பணிபுரிந்த ஊர்களிலெல்லாம் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்துதல் என சைவ வாழ்வே தம் வாழ்வு என வாழ்ந்த நிலையினைக் குறிப்பதாகும்.

அன்னாரின் சமய இலக்கியப் பணியினையும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை,

1. தாமே சமய நூல்களை இயற்றுதல்
2. சமய நூல்களுக்கு உரைகளும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதுதல்

என்பவையாம். கோயிற்கலைகள், சைவசித்தாந்த சாத்திர வரலாறு - என்னும் இவ்விரு நூல்களும் வெள்ளைவாரணனாரே எழுதியவை. திருவருட்பாச் சிந்தனை, பன்னிரு திருமுறை வரலாறு எனும் நூல்கள் அவரது ஆராய்ச்சித்திறனை வெளிப்படுத்துபவை.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த போது கம்பராமாயண யுத்த காண்டத்தின் பல படலங்களுக்கும் சிறந்த உரைகளும் எழுதியுள்ளார்.

தம்முடைய ஆராய்ச்சித்திறனால் பல புதிய செய்திகளைத் தமிழ் உலகுக்கு அளித்துச் சென்றுள்ளமை இவண் நோக்கத் தக்கதாகும். அவரது பல நூல்களும் புலப்படுத்தும் அரிய செய்திகள் பின்வருமாறு:

தேவாரத் திருமுறைகளைப் பற்றி அறிய விரும்பும் ஆர்வமுடைய அன்பர்கள் அனைவருக்கும் நன்கு பயன்படும் வகையில் பன்னிரு திருமுறை வரலாறு எழுதப் பெற்றிருக்கின்றது. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பவும் சைவப் பயிரினைச் செழிக்கச் செய்யவும் பிறந்த நாயன்மார்களின் வரலாற்றைத் தெளிவாக ஆராய்ந்து, பல்வேறு நிலைகளிலும் திறம்பட வெளிப்படுத்திச் சைவ சமயப் பணி சிறக்கச் செய்தவர் கலைமாமணி வெள்ளைவாரணனார் ஆவார்.

பன்னிருதிருமுறை வரலாறு என்னும் இத்தலைப்பு இரண்டு பகுதிகளாக எழுதப்பெற்றுள்ளது. முதல் ஏழு திருமுறைகளாகிய தேவாரத் திருமுறைகளின் வரலாறு முதற் பகுதியாக வெளியிடப் பெற்றுள்ளது. இந்நூலின்கண்,

"சைவத்திருமுறைகள் பன்னிரண்டாக அமைந்த வரலாறும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய தேவார ஆசிரியர் மூவர் வரலாறுகளும், அவர்கள் வாழ்ந்த காலப்பகுதியும், தேவார திருப்பதிகங்களின் தொகுப்புரை, யாப்பமைதி, இசையமைதி, சொற்பொருள் நடையமைதி, பொருட்பாகுபாடு, சங்க நூற்குறிப்புகள். திருக்குறளை எடுத்தாண்ட பகுதிகள், தேவார ஆசிரியர்கள் அறிவுறுத்திய திருநெறிக் கொள்கைகள், பாடல் பெற்ற தலங்கள், வைப்புத் தலங்கள்" (ப.viii) முதலான பல பகுதிகள் விரிவாக ஆராய்ந்து விளக்கப் பெற்றுள்ளன.

இந்நூலில் நாயன்மார்களில் முதல்வர்களாகக் கொள்ளப்பெற்றுப் போற்றப்பெறும் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி நாயனார் இவர்கட்கு இறைவன் அருள் செய்தமையும் அவையும் தெய்வத் தமிழில் நிகழ்ந்தமையையும் சிறப்புடன் வெளிப்படுத்துவர் வெள்ளைவாரணனார். இதனை,

"உயராவணமிருந்து உற்று நோக்கி உள்ளக் கிழியின் உருவெழுதி, உயிர் ஆவணஞ் செய்திட்டு உன்கைத்தந்தார் உணரப்படுவாரோடு ஒட்டி வாழ்தி" என்ற வண்ணம் இறைவனை இடைவிடாது நினைந்து அப்பெருமானது பேரறிவே தம்பால் விளங்கப் பெற்றுத் தம் உணர்வு என்பது சிறிதுமின்றி இறைவனது பேரறிவினுள் அடங்கி நின்ற சிவஞானிகளாக விளங்கியவர்களே திருஞானசம்பந்தப் பிள்ளையார், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலிய அருளாசிரியராவர். அவர்கள் வாயிலாகச் சிவபெருமானே வெளிப்படுத்தியருளிய சிறப்புடையன சைவத் திருமுறைகளாகும். இச்செய்தி "எனதுரை தனதுரையாக" எனத் திருஞான சம்பந்தப்

பிள்ளையாரும், "பன்னிய செந்தமிழ் மாலைபாடு வித்தென், சிந்தை மயக்கறுத்த திருவருளினானை" எனத்திருநாவுக்கரசடிகளாரும் கூறும் வாய்மொழிகளாலும், சிவபெருமானே நம்பியாரூரர்க்குப் 'பித்தா' எனவும் "தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" எனவும் அடியெடுத்துக் கொடுத்தும் சேக்கிழார் நாயனாருக்கு 'உலகெலாம்' என அடியெடுத்துக் கொடுத்தும் வெளிப்படுத்தியருளிய சிறப்புடைய நிகழ்ச்சிகளாலும் நன்குணரப்படும். பதினொராந் திருமுறையிலுள்ள திருமுகப் பாசுரம், மதுரைத் திருவாலவாய்த் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானடிகளாகிய சிவபெருமானாலேயே திருவாய் மலர்ந்தருளப் பெற்ற சிறப்புடையது.

தெய்வத் தமிழ் நூல்களாகிய இத்திருமுறைகளை இறைவனால் அருளிச் செய்தனவாகப் பாராட்டப்படும் வேதங்களை 'எழுதாக் கிளவி' எனவும் இறைவனது திருவருள் பெற்ற திருஞானசம்பந்தப் பிள்ளையார் முதலிய பெருமக்கள் இனிய தமிழாற் பாடியருளிய இத்திருமுறைகளை 'எழுதுமறை' எனவும் வழங்குதல் மரபு. "வண்டமிழால் எழுதுமறை மொழிந்த கருமல முனிவன்'' எனத் தில்லைக் கலம்பகமும் திருஞானசம்பந்தப் பிள்ளையாரைப் போற்று முகமாக அவர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களை 'எழுதுமறை' எனச் சிறப்பித்தல் காண்க. வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனாகிய முழுமுதற் கடவுளைப் ''பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே" எனத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் தம்முடைய தந்தையார்க்குக் கையாற் சுட்டிக்காட்டிய எளிமையும் இனிமையும் உடைமையானும், அடியார்கள் இறைவன்பால் வேண்டிய வேண்டியாங்குப் பெறுதற்குத் துணைபுரிந்தும் உலக மக்களது தீராத நோய் தீர்க்கும் மந்திரங்களாகியும் காணுதற்கரிய கடவுளை உலக மக்கள் கண்காணக் காட்டியும் இறைவனது திருவருளை உலகத்தார்க்குத் தெளிவாக விளக்குவன ஆதலானும் வேதநூல்களினும் மேம்பட்டு விளங்குவன இத்தெய்வத் தமிழ்த் திருமுறைகள் என்பர் பெரியோர். திருவருட் செல்வமாகிய இத்திருமுறைகளைத் தன்பாற்கொண்ட சிறப்புடைமை கருதி "ஞான மளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்" எனச் சேக்கிழார் பெருமானாற் போற்றப் பெறும் பெருஞ் சிறப்பினை நமது தமிழ்மொழி பெற்றுத் திகழ்கின்றது" (பக். 5-6) என்பதாலும்,

''நாம் வாழும் இவ்வண்டப் பகுதியினையும் இதற்கு அப்பாற்பட்ட பேரண்டங்களையும் இவையெல்லாவற்றிற்கும் ஆதாரமாய் எங்கும் நீக்கமற நிறைந்து உயிர்க்குயிராய் இயக்கி நிற்கும் முழுமுதற் பொருளாகிய இறைவனையும் மக்கள் தமது

அறிவொன்றையே துணையாகக் கொண்டு அறிதல் என்பது இயலாத செயலாம். இவ்வுலகத்தியல்பினையும் எவ்வுயிர்க்கும் உயிராக எங்கும் நீக்கமற விளங்கும் இறைநிலையையும் உள்ளவாறு உணர்த்தும் பேரறிவு, பொருள்தோறும் கலந்து விளங்கும் இறைவன் ஒருவனுக்கே உரியதாகும். முற்றறிவுடைய இறைவன், அருளே திருமேனியாகக் கொண்டு தோன்றி அன்பர்க்கு அருளிச் செய்தனவும் தனது திருவருட்டுணையால் ஐம்புலன்களை வென்று முனைப்பின்றித் தன்னை வழிபாடு செய்யும் செம்புலச் செல்வர்களாகிய பெரியோர்களின் உள்ளத்து எழுந்தருளியிருந்து அவர்கள் வாயிலாக வெளிப்படுத்தியருளினவும் ஆகிய மெய்ந்நூல்களைக் காட்டிலும் உயிர்க்குறுதிதரும் இம்மெய்ந் நூல்கள் மிகவும் சிறந்தனவாகும். சைவ சமயத்தவரால் போற்றிப் பயிலப்பெறும் பன்னிருதிருமுறைகளும் மேற்குறித்தவாறு இறைவன் திருவருளால் வெளிப்படுத்தப்பெற்ற சிறப்புடைய மெய்ந்நூல்களாதலின், இவற்றை அறிவுநூல் எனக் கொண்டு போற்றுதல் பொருத்தமுடையதாகும்'' (பக். 4-5) என்பதாலும் அறியலாம்.

மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்ததாக விளங்குவதே இறைநம்பிக்கை. அதனோடு தொடர்புடையன பழக்க வழக்கங்கள். இவற்றைச் சமயங்களே வெளிப்படுத்த முடியும். அவ்வகையில் சமய நூல்கள் முதன்மை பெறுகின்றன என்பதை விளக்கும் வாரணனார்,

“மக்கள் தம் உயிரினும் சிறந்த நெறியினை மேற்கொண்டு வாழ்வதற்கு இன்றியமையாத உலகியல் ஒழுகலாறுகளை விரித்துரைப்பன நால் வேதங்கள்.

எல்லாம் வல்ல இறைவனையடைந்து சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நன்னெறிகளையும் சிறப்பு முறையில் எடுத்துரைப்பன சிவாகமங்கள், பொதுவும், சிறப்புமாகிய இவ்விருவகை மெய்ந்நூல்களையும் ‘இறைவனூல்’ எனப் போற்றுவர் பெரியோர்.

வேதநூல்களிற் கூறப்படும் கருத்துக்களிற் பெரும்பாலானவை உலகியல் நடை முறைகளுக்கு அரண் செய்யும் முறையில் அமைந்துள்ளன என்பதும், வேத நெறியின் மேலாக அதன் முடிந்த பயனாய்த் திகழும் சிறப்புடைய திருநெறி சைவம் என்பதும் நன்கு தெளியப்படும்.

வடமொழி வடிவில் வழங்கும் நால்வேதங்களும் எழுத்துருவில் வரையப்பெறாது வழிமுறை வழிமுறையாக ஓதப்பெற்று வருதலால் இவ்வேதப்பொருள்களைக் குறித்த சில

குடும்பத்தார்களேயன்றி மக்கள் அனைவரும் கற்றுணர்தல் என்பது இயலாத செயலாம். இங்ஙனமன்றி எல்லோரும் நற்பொருள்களைக் கற்றுணர்ந்து இறைவனது திருவருளைப் பெற்றுய்ய வேண்டும் எனத் திருவுளங் கொண்ட திருஞான சம்பந்தப் பிள்ளையார், தமிழில் எழுதும் மறை மொழிகளாகத் 'தோடுடைய செவியன்' முதலிய திருப்பதிகங்களை அருளிச் செய்தார் என்பது,

"மறை வளருந் தமிழ் மாலை" (2-67-11)

"மறையிலங்கு தமிழ்" (1-61-11)

எனவரும் திருக்கடைக் காப்பாலும்.

"வண்ட மிழால் எழுதுமறை மொழிந்த பிரான்"

எனச் சேக்கிழாரடிகள் ஆளுடைய பிள்ளையாரைப் போற்றுதலாலும் நன்கு விளங்கும்" என்கிறார் (பக். 520-21).

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றை முறையே கண்டு இறைவனை வழிபட்டு உய்திபெறுந் திறத்தினைத் தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தும் கடமையினை மேற்கொண்டு திருத்தலங்கள் தோறும் அடியார் குழாத்துடன் யாத்திரை செய்தருளிய திருஞானசம்பந்தர், ஊர்தோறும் கோயில் கொண்டு எழுந்தருளிய இறைவனது திருவுருவச் சிறப்பினையும் திருத்தலங்களின் வளத்தினையும், பெருமையினையும் விவரித்துரைப்பதுடன், அப்பெருமான் அடியார்களது பிறவி வெப்பந்தணிய இனிய திருவருள் நீர்மை வாய்ந்த தீர்த்தமாகத் திகழும் திறத்தையும் பரவிப் போற்றியுள்ளார். இதனை,

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ள நினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே

(4-48-2)

என்பதால் அறியலாம் (ப. 518) என்பர்.

"பன்னிரு திருமுறைகளின் தொகுப்பிற்கு முதற்காரணம் பண் அமைப்பே" - என்ற இவரது கருத்து இவண் குறிப்பிடத்தகுந்தது.

## தொகுப்புமுறை

மூவர் தேவாரப் பதிகங்களை ஏழு திருமறைகளாகப் பகுத்து வழங்கும் திருமுறைப் பகுப்புக்கு அடிப்படையாய் அமைந்தது

இப்பண்முறை அமைப்பே எனக் கருதுதல் பொருந்தும். பண்முறையமைப்பாகிய இதனை ஆதாரமாகக் கொண்டு நோக்கினால்தான் மூவர் திருப்பதிகங்களையும் முதல் ஏழு திருமுறைகளாகப் பகுத்து வழங்கிய நம் முன்னோரது பகுப்பு முறை இனிது விளங்கும். தேவாரத் திருப்பதிகங்களைத் தலமுறையில் அமைத்துப் பயிலும் வழக்கம் பிற்காலத்தில் தோன்றியது எனவே கருதவேண்டியுளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவற்றை முறையே கண்டு வழிபடும் விருப்புடைய சிவநேசச் செல்வர்கள் தாம் வழிபட விரும்பிய ஒவ்வொரு தலத்திற்கும் அமைந்த தேவாரத் திருப்பதிகங்கள் முழுவதையும் நாள்தோறும் முறையே பாராயணஞ் செய்தற்கு ஏற்ற வண்ணம் முறைப்படுத்தப் பெற்றதே இத்தலமுறைப் பகுப்பாகும். இப்பகுப்பு தில்லைப் பெருங்கோயிலை முதன்மைத் திருத்தலமாகக் கொண்டு அமைந்திருப்பது தேவார ஆசிரியர் மூவர் திருவுள்ளத்திற்கும் ஏற்புடையதேயாகும். இது சிவத் தலங்களெல்லாவற்றிற்கும் முதலில் வைத்துப் போற்றத் தகும் சிறப்புடைய திருத்தலம் என்ற நோக்கத்துடன் தில்லைப் பெருங்கோயிலைப் பற்றி அம்மூவரும் உளமுவந்து பாடிய திருப்பாடற் குறிப்புக்களால் நன்கு புலனாம். இக்குறிப்பினை விளக்கும் முறையில் 'கோயில் திருவேட்களம் நெல்வாயில் கழிப்பாலை' எனத் தொடங்கும் திருப்பதிக்கோவை அமைந்திருத்தல் அறியத் தக்கதாகும். மேற்குறித்த பண்முறை, தலமுறை என்னும் இருவகை முறைகளுள் தேவார ஆசிரியர் காலந்தொட்டு இடையீடின்றி வழங்கி வருவதும் சைவத்திருமுறைகள் பன்னிரண்டு என்ற பகுப்பிற்கு நிலைக்களமாக அமைந்ததும் பண்முறையே யாதலின் அம்முறையினைப் பின்பற்றித் தேவாரத் திருப்பதிகங்களின் அமைப்பினை நோக்குதல் ஏற்புடையதாகும். (பக். 310 - 11) என்பது இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

தேவாரத் திருமுறைகளின் வைப்பு முறையையும் அவற்றின் வாயிலாக இறைவனின் பெருமைகளையும் எடுத்துரைப்பது வெள்ளைவாரணனாரின் தனிச்சிறப்பாகும். எடுத்துக்காட்டாக, "ஆளுடைய பிள்ளையாரின் பாடல்களைக் கூறும் பொழுது, தென்னிலங்கை வேந்தனாய இராவணன் முன்அறியாமையினாற் கயிலாய மலையினை எடுக்க முயன்று அம்மலையின் கீழ் அகப்பட்டுத் தலைகளும் தோள்களும் நசுங்கி அங்கிருந்து மீள முடியாது அல்லலுழப்பவன், தன் தவறுணர்ந்து அதனைப் பொறுத்தருளும்படி இறைவனை வேண்டி இசைப்பாடல்களால் பாடித் துதிக்கச் சிவபெருமான் அவனுக்கு அருள்புரிந்த ஆக்கப்பாட்டினை அறிவுறுத்துவது எட்டாந்திருப்பாடலாகும். படைத்தற் கடவுளாகிய

நான்முகனும் காத்தற் கடவுளாகிய திருமாலும் தாம் தாம் பெரியர் எனத் தம்முள் மாறுகொண்டு அன்னமாகியும் ஏனமாகியும் இறைவனது முடியும் அடியும் தேட முயன்று பெரிதும் அல்லற்பட்டுக் காணமுடியாது பின் இறைவனது திருவருளால் திருவைந்தெழுத்தோதி யுய்ந்த செய்தியை உணர்த்துவது ஒன்பதாந் திருப்பாட்டு. வேதநெறி சைவநெறிகளைப் பழித்துரைக்கும் புறச்சமயத்தார்களாகிய சமணர் புத்தர் ஆகியோர் தெய்வம் உண்டு என்னும் தெளிவான ஞானமில்லாதவராதலின், அன்னோர் கொண்ட நெறிகள் அவர்க்கும் பிறர்க்கும் பயன்படாது பழி விளைவிக்குங் குற்றமுடையனவே என்பதனை எடுத்துரைப்பது பத்தாந் திருப்பாடலாகும்.

இங்ஙனம் ஒவ்வொரு திருப்பதிகத்தினையும் பத்துப் பத்துப் பாடல்களால் நிறைவித்த ஆளுடைய பிள்ளையார், அத்திருப்பதிகங்களைப் பத்தியுடன் பயின்றுபாடும் உலக மக்கள் அடையும் நற்பயன்களை விளக்கும் முறையில் பதிகத்தின் கடைசித் திருப்பாடலாகப் பதினோராம் பாடலை அமைத்துள்ளார். இவ்வாறு பதிகந்தோறும் அவ்வப்பதிகப் பயன் கூறும் முறையிற் பாடியருளிய திருப்பாடலைத் 'திருக்கடைக்காப்பு' என்ற பெயராற் சேக்கிழாரடிகள் குறித்துள்ளார். பதிகங்களின் இறுதியிலுள்ள திருக்கடைக் காப்புச் செய்யுட்கள் அவ்வப்பதிகங்களைப் பாடுவோராய அன்பர்களுக்குச் சிறிதும் இடர்நேராமற் காக்கும் அருள் நோக்கத்துடன் திருஞானசம்பந்தரால் அருளிச் செய்யப் பெற்ற திருவுடைய செழும் பாடல்களாதலின் திருக்கடைக்காப்பு என வழங்கப் பெறுவனவாயின.

இலங்கையர் மன்னனாகிய இராவணன், அளகை வேந்தனாகிய குபேரனை வென்று அவனிடமிருந்து பெற்ற புட்பக விமானத்தில் அமர்ந்து வான்வழியே செல்பவன். தனது போக்குக்குத் தடைவிளைவிக்கும் முறையில் திருக்கயிலாய மலை குறுக்கிட்டு நின்றதனைக் கண்டு வெகுண்டு அதனைப் பெயர்த்தெடுக்கத் தலைப்பட்டான். ஆற்றல் மிக்க அரக்கனாகிய அவன் சிவபெருமானை வழிபடும் திறமுடையவனாக இருந்தும் ஆன்மாவுக்கு இயல்பாக அமைந்த ஆணவ மலத்தின் விளைவாக அவன் மனத்தே செருக்கு மேலிட்டதனால் இறைவன் வீற்றிருக்கும் சிறப்புடைய திருமலை திருக்கயிலாயம் என்பதனைக் கருத்திற் கொள்ளாது ஏனைய மலைகளைப் போல் அதனையும் எளிதாக எண்ணி இகழ்ந்து அதனைத் தூக்க முயன்றான். அவனது முயற்சி தவறாது, தீமை விளைப்பது என்பதனையுணர்ந்த தேர்ப்பாகன் கடவுள் வீற்றிருக்குந் திருமலையாகிய கயிலையைப் பெயர்த்தெடுத்தல் அடாத செயல் என இராவணனுக்கு எடுத்துக் காட்டியும் அவன் அச்சொல்லை மதியாமல்

இகழ்ந்து கூறி வெகுண்டு தருக்கினால் கயிலாயத்தைப் பெயர்த்தெடுத்தான். அந்நிலையில் அருளாளனாகிய இறைவன், அரக்கனது தருக்கினை யொழிக்கத் திருவுளங்கொண்டு தனது திருவடிப் பெருவிரல் ஒன்றினால் அம்மலையின் மீது ஊன்றி யழுத்தினான்; மலையும் அழுந்தியது. அப்பொழுது இருபது கைகளாலும் கயிலாயத்தைப் பெயர்த்தெடுக்க முயன்ற இராவணன், தன்னுடைய பத்துத்தலைகளும் மலையிடையிற் சிக்கியழுந்த வருத்தமுற்று ஆற்றாது அழுதான். பின் சிறிது தெளிவுபெற்றுத் தன் தலைகளுள் ஒன்றை வெட்டி யெடுத்துப் பத்தராக அமைத்து முன்கை நரம்பினை நரம்பாகக் கட்டி வீணை யென்னும் இசைக்கருவியினை அமைத்துக் கொண்டு சாமவேதமாகிய இசைப்பாடல்களைப் பாடி இறைவனைப் போற்றினான். அரக்கனது இசைத்திருத்தொண்டுக்குத் திருவுளமிரங்கிய அருளாளனாகிய சிவபெருமான் அரக்கனாகிய அவனுக்குத் 'தனது பிழை நினைந்து அழுதரற்றினான்' என்ற பொருள்பட 'இராவணன்' என்ற பெயரையும் போரில் வெற்றியளிக்கும் கொற்றவாள் ஒன்றையும் முக்கோடி வாழ்நாளையும் யாண்டும் விரைந்து செல்லும் சிறந்த தேரொன்றையும் கொடுத்தருளினார் என்பது புராணவரலாறு. இச்செய்திகள் ஆளுடைய பிள்ளையார் அருளிய திருப்பதிகங்களில் எட்டாந் திருப்பாடல்களில் விரித்துரைக்கப் பெற்றுள்ளன.

இராவணனைப் பற்றிய இச்செய்தியினைப் பதிகந்தோறும் எடுத்துரைப்பதன் நோக்கமாவது: சில் வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராக இவ்வுலகில் வாழும் மக்கள், தமது அறியாமையால் கடவுள் ஒருவர் உண்டென்னும் நினைவின்றிப் பல குற்றங்களைச் செய்தல் இயல்பு. இவ்வாறு அறியாமை காரணமாகப் பல குற்றங்களைச் செய்தாலும், அப்பிழையினால் இடர்ப்பட்டு வருந்தும் துன்பக் காலத்தே தாம் முன் செய்த பிழையினை எண்ணி மனம் வருந்தித் தம் பிழைகளைப் பொறுத்தருள்க என இறைவனைப் பணிந்து குறையிரந்து வேண்டுவாராயின், கண்ணுதலானாகிய இறைவனது பெருங்கருணை அவர்களைத் துன்பக் கடலிலிருந் தெடுத்துக் காப்பாற்றுதல் உறுதி. சில் வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராய மக்கள் செய்த குற்றங்களைப் பொறுத்தருளும் இறைவனது திருவருட் பெருமையினை உலகத்தார்க்கு எடுத்துரைக்கும் நோக்கத்தினாலேயே ஞானசம்பந்தர் இராவணனைப் பற்றிப் பதிகந்தோறும் எட்டாந்திருப்பாடலில் தவறாது குறித்தருளினார். இந்நுட்பத்தினை,

மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும் எனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்கன் எடுத்துமுறித் திசைபாட
அண்ணலவற் கருள்புரிந்த ஆக்கப்பாடருள் செய்தார்

எனவரும் பாடலில் சேக்கிழாரடிகள் தெளிவாக விளக்கியுள்ளமை காணலாம்.

குறையுணர்வாகிய பசுஞானத்தாலும் பாச ஞானத்தாலும் ஞானமேயுருவாகிய இறைவனியல்பினை உயிர்கள் உணர்தல் இயலாது. முற்றறிவினனாகிய முதல்வனை உள்ளவாறு கண்டு வழிபட விரும்புவோர் அவனது திருவடி ஞானத்தால் தன்னறிவிலே ஆராய்ந்து தெளிதற்குரியர். யாண்டும் நீக்கமறக் கலந்து விளங்கும் இறைவனை அவனருளே கண்ணாகக் கொண்டு காணுமிடத்து ஆன்மா பாசப் பிணிப்பினின்றும் நீங்கித் தூய்மை பெறும். இங்ஙனம் உயிர் தூய்மை பெற்ற நிலையிற் பெறத்தக்க கடவுட்காட்சி உள்ளத்தே நீங்காது நிலைபெறுதற் பொருட்டுத் திருவைந்தெழுத்தை விதிப்படி எண்ணுதல் வேண்டும். இவ்வாறு வழிபடும் நெறியுணர்ந்து வழிபடுவோர்க்கே சிவபெருமான் எளிவந்து அருள்புரிவான் என நூல்கள் கூறும். இவ்வுண்மையினை யுணர்ந்து இறைவனைத் தொழுது நலம்பெற முயலாது திருமாலும் பிரமனும் தாமே தலைவர் என்னும் முனைப்புடன் தம்முள் இகலிப் பன்றியுருவும், அன்னத்தின் உருவும் கொண்டு முறையே மண்ணினை அகழ்ந்து உள்புக்கும் விண்ணின் மேற்பரந்து சென்றும் இறைவனுடைய அடியும் முடியும் தேடிக் காணப்புக்குக் காணமாட்டாது அல்லற்பட்டு அயர்ந்து விழுந்தனர். அங்ஙனம் விழுமவர்கள் ஈசனருள் கூடுதலால் உள்ளத்தே தெளிவுபெற்றுத் திருவைந்தெழுத்தினையோதி இறைவனருள் பெற்று உயர்ந்தனர். இச்செய்தியினைப் பிள்ளையார் ஒவ்வொரு பதிகத்திலும் ஒன்பதாந் திருப்பாடலில் விரித்துரைத்துள்ளார். ஒன்பதாம் பாடலிலமைந்த இப்பொருட் குறிப்பினை,

தொழுவார்க்கே யருளுவது சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகுங் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்துத் துதித்துய்ந்தபடி விரித்தார்

எனவரும் செய்யுளில் அருண்மொழித்தேவர் குறித்துள்ளார்.

ஐம்பொறி வழியாகச் செல்லும் ஐந்து அவாவையும் அடக்கியாளும் உள்ளத்திண்மை, பொறிவாயில் ஐந்தவித்தானாகிய இறைவன் அருளிய ஒழுக்க நெறியினைக் கடைப்பிடித்

தொழுகுவார்க்கே எளிதில் வாய்க்கும். இதனையுணர்ந்து இறைவன் திருவருளைச் சிந்தித்து அதன் வழி யடங்கி யொழுகுதலே அறிவுடைய நன்மக்கள் மேற்கொள்ளுதற்குரிய நல்லொழுக்க நெறியாகும். அந்நெறியினைப் பின்பற்றி நடவாது தமது சிற்றறிவு ஒன்றையே முதன்மையாகக் கொண்டு தாம் தாம் நன்றெனக் கண்ட தெளிவற்ற கொள்கைவழியே நலம் பெற முயலும் புத்தர் சமணர் என்னும் புறச் சமயத்தார் மேற்கொண்ட செயல்முறைகள் இம்மை மறுமையாகிய இருமையினும் துயர் விளைக்கும் பழிச்செயல்கள் என்பதனைத் தமிழ் மக்கள் தெளிவாக உணரும் வண்ணம் பதிகந்தோறும் பத்தாம் பாடலில் பிள்ளையார் வற்புறுத்தி யருள்கின்றார்.

> வேதகா ரணராய வெண்பிறைசேர் செய்யசடை
> நாதனெறி யறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும்
> போதமிலாச் சமண்கையர் புத்தர் வழிபழியாக்கும்
> ஏதமே யென மொழிந்தார் எங்கள் பிரான் சம்பந்தர்

எனவரும் பெரியபுராணச் செய்யுள் இந்நுட்பத்தை விளக்குதல் காணலாம்.

இவ்வாறு ஆளுடைய பிள்ளையார் அருளிய திருப்பதிகந்தோறும் 8, 9, 10ஆம் பாடல்களாகிய மூன்று திருப்பாடல்களிலும் முறையே உயிர்கள் தம்பிழை நினைந்து ஏசறுதல், பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் கண்டற்கரியன் பரன் என்றுணர்தல், இறைவனருளிய மெய்ம்மையான ஒழுக்க நெறியன்றிச் சிற்றறிவுடைய மக்கள் தம் ஆன்ம போதம் ஒன்றினாலேயே அமைத்துக் கொண்ட புறச் சமயச் செயல்கள் புன்னெறியிற் செலுத்துவனவே எனவுணர்ந்து அவற்றை விலகியொழுகுதல் ஆகிய இவை மூன்றும் கடவுள் வழிபாட்டிற்கு இன்றியமையாத சாதனங்களாக அறிவுறுத்தப்பட்டன.

திருப்பதிகந்தோறும் இறுதிப் பாடலாக அமைந்த திருக்கடைக்காப்புச் செய்யுட்கள் யாவும் சிவப்பரம்பொருளைத் திருப்பதிகப் பாமாலையாற் போற்றி வழிபாடு செய்யும் அன்பர்கள் எல்லா நலங்களும் பெற்று ஈறிலாப் பேரின்ப வாழ்வில் திளைக்க வேண்டும் என்னும் பெருங் கருணைத் திறத்தால் நிறைமொழி மாந்தராய ஆளுடைய பிள்ளையார் ஆணையிற்கிளந்த மறைமொழிகளாகத் திகழ்கின்றன" (பக். 492-96) என்கிறார்.

கடவுட் தெளிவு உடையவர்களுக்கே சமயத் தெளிவும் உண்டாகும். அத்தெளிவு இல்லாதவர்கள் சமயத்தின் மாட்டுப்

பெயரளவிற்கே புரிதலைக் கொண்டிருப்பார்கள். எனவே கடவுட் தெளிவு வேண்டும் என்பதையும் வெள்ளைவாரணனார் தம்முடைய ஆராய்ச்சி நூல்களில் விளக்கிச் செல்கின்றார். பல்வேறு நூல்களின் துணைக்கொண்டு இதனை விளக்குவதே அவரது தனிச்சிறப்பு எனலாம்.

## கடவுட் தெளிவு

கடவுளாகிய முழுமுதற்பொருள் உண்டோ இல்லையோ என்னும் ஐயுறவுக்கு இடனின்றிக் 'கடவுள் உண்டு' என்று உறுதியாகத் தெளிந்து வழிபடுதலே பண்டைத் தமிழ் மக்கள் மேற்கொண்டொழுகிய சமயக் கொள்கையாகும். இவ்வுண்மை,

> ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
> வானம் நணிய துடைத்து

எனவரும் தமிழ் மறையாலும், இத்தமிழ் மறைப்பொருளை வற்புறுத்தும் நோக்கத்துடன்,

'தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்' எனச் சேரமுனிவராகிய இளங்கோவடிகள் தாம் இயற்றிய செந்தமிழ்க் காப்பியத்தின் முடிபொருளாக அறிவுறுத்திய வாய்மொழியாலும் நன்கு துணியப்படும்.

சமணர்களை நோக்கித் 'தெய்வம் என்பதொரு பொருள் உண்டா இல்லையா' என வினவினால், அவ்வினாவுக்கு 'உண்டு' என்றோ 'இல்லை' என்றோ ஒருதலையாக விடை கூறுவதில்லை. 'அஸ்தி நாஸ்தி' என மேற்குறித்த கொள்கையினை அடியொற்றி, உடன்பாட்டு நிலையில் வைத்து, (1) 'கடவுள் உண்டு போலும்' எனவும், எதிர்மறை நிலையில் வைத்து, (2) 'கடவுள் இல்லை போலும்' எனவும், உடன்பாடு எதிர்மறை ஆகிய இவ்விருநிலையும் நிரலே அமைய (3) 'கடவுள் உண்டுமாம் இல்லையுமாம்' எனவும் இவ்விருநிலையிலும் ஒருங்கு வைத்துணர்தல் இயலாமையின் (4) 'கடவுள் சொல்லொணாதது போலும்' எனவும் சொல்லொணா நிலையுடன் முற்கூறிய உடன்பாட்டு நிலையையும் சேர்த்து (5) கடவுள் உண்டுமாம் சொல்லொணாததுமாம் எனவும் சொல்லொணாநிலையுடன் முற்கூறிய எதிர்மறை நிலையையும் சேர்த்து (6) 'கடவுள் இல்லதும் சொல்லொணாததுமாம்' எனவும் சொல்லொணா நிலையுடன் உடன்பாடு, எதிர்மறை ஆகிய நிரல்நிறை நிலையையும் சேர்த்து, (7) 'கடவுள் உள்ளதும் இல்லதும் சொல்லொணாததுமாம்' எனவும் இவ்வாறு ஏழு பகுதிகளாக விடை கூறுவர் சமணர். இங்ஙனம் ஒரு

பொருளின் இயல்பினையும் இருப்பினையும் விரித்துக் கூறும் கூற்றுக்கள் ஏழு பகுதிகளாக அமைதலின் இவ்வுரையாடல் முறையைச் 'சப்தபங்கி' என்பர். இங்ஙனம் கடவுட் கொள்கை பற்றி ஒன்றோடொன்று ஒவ்வாதவற்றைக் கூறி மக்களது மனத்தைத் தெளிவற்ற குழப்ப நிலைக்கு உள்ளாக்கிவரும் இப்பொருந்தாக் கொள்கையினை,

*அத்தகு பொருள் உண்டும் இல்லையும் என்று நின்றவர்க்கச்சமா*
*ஒத்தொவ்வாமை மொழிந்து (33-9-10)*

எனவும்,

*குண்டமணராகி யொரு கோலமிகு பீலியொடு குண்டிகை பிடித்து*
*எண்டிசையு மில்லதொரு தெய்வமுள தென்பர் அது என்ன பொருளாம்*
*(3-80-0)*

எனவும் வரும் தொடர்களால் ஞானசம்பந்தப் பிள்ளையார் எடுத்துக்காட்டி மறுத்துள்ளார்.

உலகில் வழங்கும் சமயநெறிகள் எல்லாவற்றிற்கும் புகலிடமாய் விளங்கும் தனி முதல்வன் இறைவன் ஒருவனே என்பதும், உயிர்க்குயிராய் விளங்கும் அம்முதல்வன், அறிவினால் மிக்க சமயநெறிகள் எல்லாவற்றுக்கும் ஆதாரமாக மெய்ம்மையான ஒழுக்க நெறியினை வகுத்தருளி உலகங்களை யெல்லாம் தத்தம் ஒழுங்கு முறையிற் பிறழாதவாறு நிலைபெறச் செய்கின்றான் என்பதும்

*ஆயாதன சமயம்பல அறியாதவன் நெறியின்*
*தாயானவன் உயிர்கட்குமுன் தலையானவன் (1-11-5)*

எனவரும் பிள்ளையார் வாய்மொழியால் நன்கு விளங்கும். இங்ஙனம் எல்லாச் சமயநெறிகளையும் தோற்றுவித்தற்குக் காரணனாகிய முதல்வன், 'அம்மையப்பனாக விளங்கும் தனது உண்மை நிலையினை மக்கள் உணர்ந்து அடைந்து உய்தி பெறுதற்கியலாத நிலையில், சமணம் புத்தம் ஆகிய புறச் சமயங்களைத் தோற்றுவித்ததன் நோக்கம் எதுவோ' என அன்பின்மிக்க அடியார்களை நோக்கி வினவும் முறையில்,

*துணை நன்மலர் தூய்த்தொழு தொண்டர்காள்சொல்லீர்*
*பணை நன்முலைப் பார்ப்பதி யோடுடனாகி*
*இணையில் இரும்பூளை யிடங்கொண்ட ஈசன்*
*அணைவில் சமய சாக்கியம் ஆக்கிய வாறே (2-36-[illegible])*

எனவரும் திருப்பாடலில் அருளிச் செய்துள்ளார். மக்களது உணர்வின் எல்லை நோக்கியும் படிகால் முறையாக மக்கள் பெற வேண்டிய மனவளர்ச்சி நோக்கியும் இச்சமயங்கள் இறைவனருளால் தக்க தலைவர்களைக் கொண்டு தோற்றுவிக்கப் பெற்றன என்னும் உண்மை இத்திருப்பாடலிற் குறிப்பாக அறிவுறுத்தப் பெற்றுள்ளமை அறியத்தக்கதாகும் (பக். 531-33) என்பதின் வழி மேற்கூறிய கருத்து நிலைபேறுடையதாகின்றது.

திருமுறைகண்டசோழன் இராஜராஜன் என்றே பொதுமக்கள் உட்படப் பலரும் அறிந்துள்ள நிலையில் அவனில்லை - என்பது வெள்ளைவாரணனாரின் முடிவு.

இதனைப் பல்வேறு வரலாற்று உண்மையின் அடிப்படையில் வெள்ளைவாரணனார் தாம் எழுதிய பன்னிருதிருமுறை வரலாற்றில் நிறுவுகின்றார்.

சோழ மன்னர் ஆட்சிக் காலங்களில் தில்லைச் சிற்றம்பலம் பன்முறை பொன்வேயப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது நன்கு புலனாம். ஆனால் அதனை முதலில் பொன் வேய்ந்த சோழ மன்னன் முதலாம் ஆதித்தனேயாவன் என்பது நம்பியாண்டார் நம்பியின் திருவாக்கினால் வெளியாகின்றது. இப்பெரியார் தம்காலத்தில் இவ்வேந்தன் அவ்வரும் பணியாற்றிய காரணம் பற்றி அச்செயலைத் தம் திருத்தொண்டர் திருவந்தாதியிற் பாராட்டியுள்ளனர் என்பது தெள்ளிது. இவர் சிதம்பரத்திற்கு அண்மையிலுள்ள திருநாரையூரி லிருந்தவராதலின் இவ்வரசன் தில்லையிற்புரிந்த அத்திருத்தொண்டில் தாம் நேரிற் கலந்துகொண்டு அதனை அறிந்திருத்தலும் இயல்பேயாம்.

ஆகவே, நம்பியாண்டார் நம்பி இவன் ஆட்சிக்காலமாகிய கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவராதல் வேண்டும். இக்கவிஞர் பெருமான் இவன் திருவடி நீழல் எய்திய செய்தியையும் குறிப்பிடுதலால் இவனுக்குப் பிறகு கி.பி. 907இல் பட்டம் பெற்ற இவன் புதல்வன் முதற்பராந்தக சோழன் ஆட்சியின் முதற் பகுதியிலும் சில ஆண்டுகள் வரையில் இருந்திருத்தல் கூடும்.

இனி, ஆதித்தன் சிங்கள நாடு வென்ற செய்தி ஒன்று நம்பியாண்டார் நம்பியால் திருத்தொண்டர் திருவந்தாதியிற் சொல்லப்பட்டுள்ளது.அதனை உறுதிப்படுத்தக்கூடிய வேறு சான்றுகள் இந்நாளிற் கிடைக்கவில்லை. எனினும், அதனை எளிதாகத் தள்ளி விட இயலவில்லை. சோழர் பேரரசை நிறுவும் பொருட்டு வடக்கும் மேற்கும் படையெடுத்துச் சென்று முறையே தொண்டை

மண்டலத்தையும் கொங்கு மண்டலத்தையும் கைப்பற்றித் தன் ஆளுகையின் கீழ்க் கொண்டு வந்த இம் மன்னர்பிரான், தென்கிழக்கே யுள்ள சிங்கள நாடாகிய ஈழமண்டலத்தின் மேலும் படையெடுத்துச் சென்றிருத்தல் கூடும். இவன் புதல்வன் முதற் பராந்தக சோழன் அந்நாட்டின் மேல் படையெடுத்துச் சென்று அதனைக் கைப்பற்றினான் என்பது, அவன் கல்வெட்டுகளால் அறியப் படுகின்றது. எனவே ஆதித்தசோழன் முதலில் தொடங்கிய அச்செயலை அவன் புதல்வன் தன் ஆட்சியில் நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகவே, ஆதித்தனது சிங்கள நாட்டுப் படையெழுச்சியைப் பற்றி நம்பியாண்டார் நம்பி கூறியிருப்பது சிறிதும் புனைந்துரையாகாது.

நம்பியாண்டார் நம்பி முதலாம் இராசராச சோழனைத் தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியிற் குறிப்பிடாமை ஒன்றே இவர் அவ்வேந்தன் காலத்தவரல்லர் என்பதை நன்கு புலப்படுத்துவதாகும். இந்நிலையில் திருமுறைகண்ட புராணத்தில் தெளிவின்றியமைந்துள்ள குறிப்பு இராசராச சோழனைக் குறிக்கும் என்று கருதுவது பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. அன்றியும், முதல் இராசராச சோழன் என்பான் நம்பியாண்டார் நம்பியின் துணைக்கொண்டு சமயகுரவர் மூவர் திருப்பதிகங்களையும் தேடிக்கண்டனன் என்னும் கொள்கைக்கு முரணாக அவ்வேந்தனுடைய முன்னோர்களான முதல் ஆதித்தன், முதற் பராந்தகன், உத்தமசோழன் கோயில்களில் மூவருடைய பதிகங்களையும் நாள்தோறும் பாடுவதற்கு நிவந்தங்கள் அளிக்கப் பெற்றுள்ளன. இவ்வுண்மையை அவர்களுடைய ஆட்சியிற் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டுகளால் நன்கறியலாம். முதல் ஆதித்த சோழன் ஆட்சியில் கி.பி. 873இல் திருஎறும்பியூரிலும் கி.பி. 876இல் பழுவூரிலும், முதற் பராந்தக சோழனாட்சியில் கி.பி. 910இல் திருவாவடுதுறையிலும் கி.பி. 911இல் அல்லூரிலும் கி.பி. 944இல் திருத்தவத்துறையிலும், உத்தம சோழன் ஆட்சியில் கி.பி. 977இல் கோனேரிராசபுரம் என்னும் திருநல்லத்திலும் கி.பி. 984இல் அந்துவநல்லூரிலும் திருப்பதிகங்கள் பாடுவதற்கு நிவந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் முதல் இராசராச சோழன் ஆட்சிக்கு முன்னர் நிகழ்ந்தவையாகும். எனவே அம்மன்னனது ஆட்சிக் காலத்திற்குப் பல ஆண்டுகட்கு முன்பே சமயகுரவர். மூவருடைய திருப்பதிகங்களும் கோயில்களிற் பாடப்பெற்று வழக்கிலிருந்து வந்தன என்பது வெளிப்படை. ஆகவே நம்பியாண்டார் நம்பியின் துணைக்கொண்டு திருமுறை கண்டவன் முதலாம் இராசராசசோழன் என்று கூறுவது ஏற்புடைத்தன்று.

இதுகாறும் ஆராய்ந்த வற்றால் நம்பியாண்டார் நம்பி முதல் இராசராசசோழன் காலத்தில் இருந்தவரல்லரென்பதும், முதல் ஆதித்த சோழன் ஆட்சிக் காலத்திலும் அவன் புதல்வன் முதற் பராந்தக சோழன் ஆட்சியின் முற்பகுதியிலும் இருந்தவராவர் என்பதும் நன்கு விளங்குதல் காண்க. எனவே இப்புலவர் பெருமான் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் நம் தமிழகத்தில் வாழ்ந்தவர் என்பது ஆராய்ச்சிப் பேரறிஞர் திருவாளர் தி.வை. சதாசிவ பண்டாரத்தாரவர்கள் ஆராய்ந்து கண்ட முடிபாகும்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டின் வரலாற்றையும் விளங்க விரித்தருளிய பெரியார் கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியாரே என்பது நன்கு பெறப்படும் (பக். 18-21).

திருவருட்பா சிந்தனை என்னும் தனது நூலின் முன்னுரையில் 'திருவிளங்கச் சிவயோக சித்தியெலாம் விளங்க' என்றே தொடங்குகின்றார். இந்நூலினைத் தாம் எழுதியதற்கான காரணத்தையும் தம் விருப்பத்தையும் புலப்படுத்தும் போதே அவரது சமயப்பணி சிறக்கின்றது எனலாம்.

"இராமலிங்க வள்ளலார் அருளிய திருவருட்பா செந்தமிழ்ச் சொல்வளத்தாலும், ஆழ்ந்த பொருள் நுட்பத்தாலும், ஒப்பற்ற பேரருளின்பக் கடலாகும். அதனை ஆராயப் புகுந்த யான் 'கடலுற்றுண் பெருநசை ஒரு சுணங்கனை யொக்குந் தகைமையேன்' என்பதனை நன்கறிவேன். ஆயினும் சைவத் திருமுறைகளில் எனக்கு இயல்பாகவுள்ள ஆர்வத்தாலும் அத்திருமுறைகளுக்கு விளக்கவுரை போன்று வள்ளலார் பாடியருளிய திருவருட்பாப் பனுவலின் சிறப்பினைச் சைவவுலகம் உள்ளவாறு போற்றுதல் வேண்டும் என்னும் ஆசையினாலும் இச்சிறு நூலை எழுதத் தொடங்கினேன்.

சைவத்திருமுறைகளில் உண்மையான மதிப்புடைய சித்தாந்தச் சைவர்கள் சிலர் சமயங் கடந்த பொது நெறியாகிய சுத்த சன்மார்க்கத்தை வற்புறுத்தும் திருவருட்பாவினைச் சைவத்திருமுறை கட்கு மாறுபட்ட கருத்துக்களை வற்புறுத்தும் நூலாகப் பிறழவுணர்ந்து அயன்மை செய்து வருகின்றனர். திருவருட்பாவின் சமரச நன்னெறியினை வற்புறுத்தும் குறிக்கோளுடைய சன்மார்க்க அன்பர்களில் ஒரு சாரார் வள்ளலார் பாடிய முதல் ஐந்து திருமுறைகள் சைவத் திருமுறையாசிரியர்களையும் அவர்கள் அருளிய திருமுறைப் பனுவல்களையும் போற்றுதலால் அவற்றை ஏற்றுக் கொள்ளும் விருப்பின்றிச் சிறப்பாகச் சாதிசமயப் பிணக்

கொழித்துச் சமரச சன்மார்க்க நெறியினை வற்புறுத்தும் ஆறாந் திருமுறையினையே தமக்குரிய ஆதார நூலாகக் கொள்கின்றனர்.

இராமலிங்க வள்ளலார் வற்புறுத்தும், சமரச சுத்த சன் மார்க்கத்தின் விளைபுலமாகவும் தமிழ்மக்களின் தெய்வத்திறம் பேசும் திருவருளிலக்கியமாகவும் திகழும் சைவத் திருமுறைகளை ஆதாரமாகக் கொள்ளுதற்கு அன்னோர் தயங்குகின்றார்கள். மேற்குறித்த இருதிறத்தாரும் சைவத் திருமுறைகளையும் அவற்றில் தோய்ந்து இறைவன் திருவருளில் திளைத்த இராமலிங்க வள்ளலார் அருளிய திருவருட்பாவினையும், காய்தலுவத்தலகற்றி ஒப்பு நோக்கி ஆராய்வார்களானால், சைவத்திருமுறைகள் மூலநூலாகவும், திருவருட்பா அவற்றின் பெருவிளக்கவுரையாகவும் அமைந்துள்ள ஒற்றுமைத் திறத்தினை உள்ளவாறுணர்வர். அதனால் திருமுறைகளும், திருவருட்பாவும் தம்முட் பொருளால் முரண்படுவன அல்ல என்னும் தெளிவுடையராவர் என்பது திண்ணம். இவ்வாறு சைவத் திருமுறைகட்கும், திருவருட்பாவுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினையும், அவ்விரண்டுக்கும் பொருள் மாறுபாடு சிறிதும் இல்லை என்பதையும் எடுத்துக் காட்டி விளக்குவதே இச்சிறுநூலின் நோக்கமாகும்.

வள்ளலார் பின்பற்றிய நெறி சைவசித்தாந்தமே என்பது, முப்பத்தாறு தத்துவங்கள், மும்மலங்களாகிய பாசங்கள், ஆன்ம வியல்பு, பதியியல்பு ஆகியன பற்றி அவர் கூறும் விளக்கங்களால் நன்கு புலனாகும் என்று தெரியப்படுத்துகின்றார்" (பக். 10-12).

திருவருட்பாச் சிந்தனையின் மூலம் வெள்ளைவாரணனாரின் தூயசிந்தனை உலக ஒருமைப்பாட்டை இடனாகக் கொண்டதை,

"நுண் போர்க் கருவிகளாலும் கொள்கை முனைப்புக்களாலும் இகல்வேக வுணர்ச்சிகளாலும் இப்பைஞ் நிலம் அழியுங்கொல் என்று கவலை மீதூரும் இக்காலத்துக்கு, உலக வொருமைப்பாடு காட்டும் அருட்பா உலகர் அனைவரும் கைக்கொள்ளத் தகும் பொருட்பா என்றால் மிகையன்று. இம்மறை தமிழ்மொழியில் இருப்பதால் உலகோர் அறியச் செய்தல் தமிழர்கடன், தமிழகப் பல்கலைக் கழகங்களின் பொறுப்பு. திருக்குறள் போலத் திருஅருட்பா மறையும் பன்மொழியில் நடமாடும் பெருமை எய்துக. அதனால் உலகில் ஒருமை நாட்டம் வளரும்" என்று தம்நூலாகிய திருவருட்பாச் சிந்தனையின் முன்னுரையில் எழுதுவதாலறியலாம்.

பன்னிருதிருமுறை வரலாறு எவ்வாறு வெள்ளைவாரணனாரின் சமயப்பணிக்குச் சான்றாக நிற்கின்றதோ அதனைப் போன்றே 'சைவ சித்தாந்த சாத்திர வரலாறு' என்னும் நூல் சமயப் பணியின் மைல்கல் ஆக விளங்குகின்றது. தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடாக விளங்கும் இந்நூலின் அணிந்துரையில் இ. சுந்தரமூர்த்தி, "சிவவழிபாட்டின் தொன்மையும் உலகளாவிய விரிவும் என்னும் முதற் பகுதியிலேயே பண்டைக் காலத்தில் சமய வேறுபாடில்லாத பொதுமை வாய்ந்த கடவுள் வழிபாடு நம்நாட்டில் இருந்தமையை இந்நூலாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

தொல்காப்பியனார் காலம் முதலாக உள்ள வழிபாட்டு நெறிகளையும் தத்துவக் கொள்கைகளையும் வரலாற்றுச் சான்றுகளோடு நிரல்படத்தொகுத்துரைக்கும் ஓர் அரிய நூலாக இது அமைந்திருப்பது தமிழுலகத்திற்கும் சமய உலகிற்கும் மேலும் பெருமை சேர்ப்பதாகும்.

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கும் பொதுவாக உலகப் பொதுமறையாகிய திருக்குறளின் கருத்துக்களைத் தழுவியுள்ளன என்பதும், சிறப்பாகச் சைவத் திருமுறைகளால் தெளிந்துணரப் பெற்ற தத்துவ உண்மைகளை விரித்துரைக்கும் செந்தமிழ் நூல்களே இப்பதினான்கு நூல்கள் என்பதும் இந்நூலாசிரியரின் முடிந்த முடிபாகும்" என்று பாராட்டியிருப்பதே இவரின் சமயப்பணிக்குக் கிடைத்த நற்சான்றாகும்.

'சைவ சித்தாந்த சாத்திர வரலாறு' - என்னும் இந்நூலானது சிவ வழிபாட்டின் தொன்மையும் உலகளாவிய விரிவும், தொல்காப்பியனார் கூறும் வழிபாட்டு நெறிகளும் தத்துவக் கொள்கைகளும், சங்கச் செய்யுட்களில் இடம் பெற்றுள்ள தெய்வ வழிபாடும் தத்துவக் கொள்கைகளும், சங்க இலக்கியத்திற் சிவன் வழிபாடும் சைவ சமயத் தத்துவ உண்மைகளும், திருவள்ளுவர் கூறும் வாழ்க்கை நெறிமுறைகளும் தத்துவ உண்மைகளும், சிலப்பதிகாரத்தில் காணப்பெறும் தெய்வ வழிபாடுகளும் சிவநெறிக் கோட்பாடுகளும், மணிமேகலையிற் காணப்படும் தெய்வ வழிபாடுகளும் சிவநெறிக் கொள்கையும், தமிழாகமம் எனப் போற்றப்பெறும் திருமூலர் திருமந்திரம் கூறும் சைவ சித்தாந்தச் செந்நெறியும் தத்துவ உண்மைகளும், திருமுறைகளில் இடம் பெற்றுள்ள சைவ சித்தாந்த உண்மைகள், திருவாதவூரடிகள் மேற்கொண்டொழுகிய சிவநெறிக் கொள்கை - எனும் பத்து தலைப்புகளைத் தன்னகத்தே கொண்டது. இவை சைவ சமய நெறிகள் குறித்து மிகவும் சிறப்பாக விளக்க வல்லன. வெள்ளைவாரணனாரின் மிகப் பெரிய உழைப்பினால் உருவாகிய

இந்நூல் பல்வேறு உண்மைகளைத் தமிழுலகுக்கும் சைவ உலகிற்கும் சாற்றி நிற்பது எனில் அது மிகையில்லை.

திருமூலர் தம் திருமந்திரமே சித்தாந்த சாத்திரம் பதினான்கிற்கும் முதல் நூலாகத் திகழ்வது என்பதைப் பல காட்டுகளின் மூலம் நிறுவுகின்றார் ஆசிரியர்.

*சத்தும் அசத்தும் எவ்வாறெனத் தானுன்னிச்*
*சித்தை யுருக்கிச் சிவனருள் கைகாட்டப்*
*பத்தியின் ஞானம் பெறப்பணிந் தானந்தச்*
*சத்தியால் இச்சை தருவோன் சற்சீடனே (1697)*

என்னும் இத்திருமந்திரப் பாடல்,

*உணருரு வசத்தெனின் உணரா தின்மையின்*
*இருதிறனல்லது சிவசத்தாம் என*
*இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே (சிவ.சூ.ம)*

என்னும் ஆறாம் சூத்திரப் பொருளும், "யாவையுஞ் சூனியம்" என்று தொடங்கும் ஏழாம் சூத்திரப் பொருளும் கொண்டதாய் விளங்குவதால், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலாக உள்ள சித்தாந்த சாத்திரம் பதினான்கிற்கும் முதல் நூலாகத் திகழ்வது திருமூலர் அருளிய திருமந்திரமாகிய திருமுறையே என்பது நன்கு புலனாகும் என்பதால் அறியலாம்" (பக். 624) என்பர்.

இவ்வாறு தம்முடைய ஆராய்ச்சித் திறனாலும் சைவசமயத் தொடர்பாலும் பலசிறந்த உண்மைகளை உலகுக்கு எடுத்துக் காட்டியவர் வெள்ளைவாரணனார் எனலாம்.

## துணைநின்ற நூல்கள்

1. பன்னிரு திருமுறை வரலாறு - முதல் தொகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.
2. திருவருட்பாச் சிந்தனை - மணிவாசகர் பதிப்பகம்.
3. சைவசித்தாந்த சாத்திர வரலாறு - தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு.
4. கம்பராமாயணம் - நான்கு பாகங்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.

# இசைத்தமிழ்ப் பணி

அரிமளம் சு. பத்மநாபன்

தமிழியல் ஆய்வு வரலாற்றை உற்று நோக்கினால் கடந்த இருபதாம் நூற்றாண்டில் பல்வேறு துறைகளிலும் எண்ணற்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அத்துறை ஓர் உச்ச நிலையை அடைந்திருப்பதை உணரலாம். குறிப்பாக, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் முதலானவை நிறுவப்பட்டதன் மூலமும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மூலமும் தமிழாய்வுக்களம் வளமடைந்து பல்துறை ஆய்வுகள் பல்கிப் பெருகின. இசைத்தமிழ் எனப்படும் தமிழிசையியல் தொடர்பான ஆய்வுகளைப் பொறுத்த வரை இருபதாம் நூற்றாண்டில் தான் அத்துறை முறையாகத் தோற்றம் பெற்றுத் தமிழ் வரலாற்றில் தடம் பதித்தது எனக் கூறலாம்.

இவ்வாய்வுப் பணியை முறையாகத் தோற்றுவித்து, கட்டமைத்து, பின்வரும் தமிழிசை ஆய்வாளர்கள் யாவரும் பயணிக்கத் தக்க நீண்ட வழித்தடத்தையும் அமைத்துக் கொடுத்தவர் ராவ்சாகிப் மு. ஆபிரகாம் பண்டிதர் என்று கூறின் அது மிகையாகாது. இவர் எழுதி 1917ஆம் ஆண்டு வெளியிட்ட 'கருணாமிர்தசாகரம்' எனும் பெரு நூலே இசைத்தமிழாய்வுகளுக்கான முதல் நூலாகவும், முன்னோடியாகவும், ஒப்பற்ற ஒரு களஞ்சியமாகவும், ஆய்வறிஞர்க்கெல்லாம் ஒரு கலங்கரை விளக்கமாகவும் இன்றளவும் திகழ்ந்து வருகிறது. இந்நூல் பெருந்தாளில் கால் அளவினவாய், 1346 பக்கங்கள் கொண்டது. நான்கு பகுப்புகளாகப் பகுக்கப் பெற்றது. சங்க நூல்கள், சிலப்பதிகாரம் முதலானவற்றில் காணப்படும் இசைக்குறிப்புகளை யெல்லாம் அடிப்படையாகக் கொண்டு தமது இசை நூலை எழுதினார்.

“யாழ் நூல்' யாத்த விபுலானந்த அடிகளார்க்கும், 'பாணர் கைவழி' எழுதிய வரகுண பாண்டியர்க்கும், 'சிலப்பதிகாரத்து இசை நுணுக்கம்' எழுதிய இசைப்பேரறிஞர் எசு. இராமநாதர்க்கும், 'பழந்தமிழிசை' நூலின் ஆசிரியர் கு. கோதண்ட பாணியார்க்கும், 'யாழும் இசையும்' எழுதிய மு. இராகவனார்க்கும், 'பழம் தமிழிலக்கியத்தில் இசையியல்' எனும் நூலாசிரியர்க்கும்

(வீ.ப.கா. சுந்தரம்) பெரிதும் வழிகாட்டிய முதல் இசை ஆய்வு நூல் மு. ஆபிரகாம் பண்டிதரின் நூலே"[1] என்று குறிப்பிடுகிறார் வீ.ப.கா. சுந்தரனார் (தமிழிசைக் கலைக்களஞ்சியம் - தொகுதி 1, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி, ப. 123). இதே இசை ஆய்வு மரபு வழி வந்தவராகப் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் விளங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெள்ளைவாரணனார் பற்றிய சிறப்புக் குறிப்பு

1917ஆம் ஆண்டு சனவரித் திங்கள் பதினான்காம் நாள் தோன்றிய வெள்ளைவாரணனார் தமது ஆழ்ந்த தமிழறிவு, அரிய கல்விப் பணி, தமிழியல் ஆய்வுப் பணி ஆகியவற்றின் மூலம் தமிழ் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுத் திகழ்கிறார். மதுரை, பசுமலை நாவலர் சோமசுந்தர பாரதியாரிடம் முறையாகத் தொல்காப்பியம் கற்றுத் துறைபோகியவர். இசைத் தமிழ்க் கருவூலமாம் யாழ்நூலை யாத்த விபுலானந்த அடிகளிடம் தமிழிசையியலைக் கற்றறிந்தவர். 'யாழ்நூலை' எழுதி வெளிக்கொணர விபுலானந்தருக்கு மிகவும் துணை புரிந்தவர். அளவற்ற சிவபக்தியும், தேவாரத் திருப்பதிகங்களின் பால் ஆழ்ந்த ஈடுபாடும், தேர்ந்த அறிவும் பெற்றுத் திகழ்ந்தவர். இதன் பயனாக, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில் 'பன்னிரு திருமுறை வரலாறு' எனும் விரிவான நூலை இரண்டு பகுதிகளாக எழுதினார். மொத்தம் ஈராயிரத்துக்கும் கூடுதலான பக்கங்களை உள்ளடக்கியது இப்பெருநூல். முதல் பகுதி முதல் ஏழு திருமுறைகளையும், இரண்டாம் பகுதி 8 முதல் 12 முடிய ஐந்து திருமுறைகளையும் ஆராய்கின்றன. திருமுறைகளின் வரலாறு, நாயன்மார்களின் வரலாறு, திருப்பதிகங்கள், அவற்றிற்கான பண்கள் பற்றிய ஆராய்ச்சி ஆகியனவற்றை உள்ளடக்கியது இந்நூல். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் இந்நூல் 1962, 1980, 1994 ஆம் ஆண்டுகளில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்நூலில் கூறப்பட்டுள்ள இசைச்செய்திகள் அனைத்தையும் சுருக்கமாகவும், தெளிவாகவும், எளிமையாகவும் எடுத்துக் கூறும் வகையில், 'இசைத்தமிழ்' என்னும் நூலை 1979ஆம் ஆண்டில் வெளியிட்டார். இவ்விரண்டு நூல்களே வெள்ளைவாரணனாரின் இசைத்தமிழ்ப் பணி குறித்த அடிப்படை நூல்களாக ஈண்டு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

சென்னை இராஜா அண்ணாமலை மன்றத்தில் தமிழ் இசைச் சங்கத்தின் பண்ணாராய்ச்சி மாநாடுகளில் பல்லாண்டுகள் பங்கு

பெற்று வல்லாங்கு சொல்லார்ந்த இசை ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை வெளியிட்டார். இவருடைய இச்சீரிய தொண்டிற்காக தமிழிசைச் சங்கத்தின் உயரிய விருதான 'இசைப் பேரறிஞர்' பட்டத்தினையும் பெற்றுச் சிறந்தார். பல்கலைக்கழக, கல்லூரி மாணவர்கள் பயனுறும் வகையில் தமிழியல் குறித்துப் பல நூல்களையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார் அயரா உழைப்பினரான இப்பேராசிரியர்.

## இசைத்தமிழ்ப் பணி

'யாழ் நூல்' உருவாவதில் தம் குருவிற்கு உறுதுணையாக இருந்த வெள்ளைவாரணர் 1974ஆம் ஆண்டு மீண்டும் 'யாழ் நூல்' இரண்டாம் பதிப்பு வெளிவரப் பெரும் பங்காற்றினார். 1947இல் முதன் முதல் வெளியிடப்பட்ட இந்நூல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரால் 1974இல் மீண்டும் பதிப்பிக்கப் பெற்றது. 'இப்பதிப்பிற்கான நீண்ட 'சிறப்புப் பாயிரத்தை' முழுவதும் செய்யுள் வடிவில் இயற்றியதுடன், பதிப்புச் செலவிற்காக முதன் முதலில் ஆயிரம் ரூபாய் நன்கொடையாகவும் வழங்கியுள்ளார். பாயிரத்தின் இறுதியில்,

வாழ் தமிழர் வளர்புகழால் ஞாலமெலாம்
ஏழிசைதேர் யாழ்நூ லிசைபரப்பி – வாழியரோ
வித்தகனார் எங்கள் விபுலாநந் தப்பெயர்கொள்
அத்தனார் தாளெம் அரண்

என்று கூறியிருப்பதிலிருந்து தம் ஆசிரியரிடம் இவர் கொண்டிருந்த பற்றுமையும், பத்திமையும் தெள்ளென விளங்கும்.

"யாழ் நூற் பொருளமைப்பினை உலகத்தார் பலரும் சுருக்கமாக உணர்ந்து கொள்ளும் முறையில் இந்நூலுக்கு க. வெள்ளைவாரணர் அவர்களால் தமிழில் எழுதப்பெற்ற முன்னுரையினைச் சங்கப் பேரன்பர் திரு. ந.மு. கோவிந்தராச நாட்டார் அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தந்தருளினார்கள்" என்று யாழ்நூல் இரண்டாம் பதிப்பின் பதிப்புரையில் குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து அதன் மதிப்பை உணர்ந்து கொள்ளலாம். ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள இம்முன்னுரை யாழ் நூலை முழுமையாகவும், சுருக்கமாகவும் படம் பிடித்துக் காட்டுவதோடு நில்லாது, யாழ் நூலாசிரியர் குறித்தும், தமிழிசை வரலாறு குறித்தும் பல அரிய செய்திகளை உள்ளடக்கியதாகவும் விளங்குகிறது.

யாழ் நூலின் ஏழு இயல்களையும் வரிசைப் படுத்தி ஒவ்வொன்றையும் சுருக்கமாக விளக்குகிறது. இதனைத் தொடர்ந்து இறுதியில் நூலாசிரியரின் ஆய்வு அணுகுமுறை, ஆய்வு முடிவுகள் பற்றிய தம் மதிப்புரையையும் தந்துள்ள பாங்கு போற்றுதற்குரியது.

காட்டு:

"The author has meticulously followed the excellent method of research advocated by Tholkappiar in his Sutra "Research methodology consists in proper conception and unambiguous mental comprehension resulting in the lucid exposition of an idea" "மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்து கொண்டு இனத்திற்சேர்த்தி உணர்தல் வேண்டும்.

நூற் பயனைக் கீழ்வருமாறு விளக்குகிறார்.

"May musicians, music fans and lovers of research go through **this unrivalled musical treatise understand the scientific facts in it** and may they endeavour their utmost to make the glory of Tamil music permeate every nook and corner of the globe".

இவ்வாறு 'யாழ் நூல்' வாயிலாக இசைத்தமிழுக்கு வெள்ளைவாரணர் பெருந்தொண்டினை ஆற்றியுள்ளார் எனக் கூறலாம்.

## பன்னிரு திருமுறை வரலாறு

தமிழ்த் திருமுறை வரலாற்றில், தேவாரத் திருமுறைகளைக் கண்டு அவற்றை ஏழு திருமுறைகளாக வகுத்துக் கொடுத்த நம்பியாண்டார் நம்பிக்குப் பின், பன்னிரு திருமுறைகளின் வரலாற்றையும் தொகுத்து, வகுத்து, விரித்துரைத்தவராக வெள்ளைவாரணர் திகழ்கிறார். பேராசிரியரின் தமிழ்ப் பணிகளிலெல்லாம் தலையாயதாகவும், ஈடு இணையற்றதாகவும் இது விளங்குகின்றது. இப்பெருநூல் இயற்றமிழ், குறிப்பாகப் பக்தி இலக்கியம், இசைத் தமிழ் ஆகிய இரண்டு துறைகளிலும் ஆய்வு செய்வோர்க்கு ஒரு கலங்கரை விளக்கமாக விளங்குகின்றது.

முதல் ஏழு திருமுறைகளை உள்ளடக்கிய முதற் பகுதியில் 'தேவாரத் திருப்பதிகங்கள்' என்னும் இயலில் 'தொகுப்பு முறை', 'இசையமைதி' ஆகிய தலைப்புகளின் கீழ் இசைத் தமிழ் குறித்தும், தேவாரப் பண்கள் குறித்தும் ஏராளமான தகவல்களைப் பரவலாகப் பதிவு செய்துள்ளார். இத்தகவல்கள் யாவும் இசையியலார்க்கும், தமிழிசை ஆய்வாளர்க்கும் பெரும் துணை புரியக் கூடியனவாகும்.

ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர் ஆகிய மூவராலும் அருளிச் செய்யப் பெற்ற திருப்பதிகங்கள் முழுவதும் 'தேவாரம்' என்ற பெயரால் ஒருங்கே தொகுக்கப் பெற்று, அவை 'பண்முறை' எனவும் 'தலமுறை' எனவும் இருவேறு முறையில் வரிசைப் படுத்தப்பட்டன. இத்தொகுப்பு முறை பற்றிய வெள்ளைவாரணனாரின் கருத்து வருமாறு:

"இவ்விரு வகையுள் முற்கூறிய பண்முறை யமைப்பே பழைய ஏட்டுச் சுவடிகளில் இடம் பெற்றுள்ளது. மூவர் தேவாரப் பதிகங்களை ஏழு திருமுறைகளாகப் பகுத்து வழங்கும் திருமுறைப் பகுப்புக்கு அடிப்படையாயமைந்தது இப்பண்முறையமைப்பே எனக் கருதுதல் பொருந்தும். இதனை ஆதாரமாகக் கொண்டு நோக்கினால் தான் மூவர் திருப்பதிகங்களையும் முதல் ஏழு திருமுறைகளாகப் பகுத்து வழங்கிய நம் முன்னோரது பகுப்பு முறை இனிது விளங்கும். பிற்காலத்தில், நாள்தோறும் முறையே பாராயணஞ் செய்தற்கு ஏற்ற வண்ணம் முறைப்படுத்தப் பெற்றதே இத்தலமுறைப் பகுப்பாகும். மேற்குறித்த பண்முறை, தலமுறை எனும் இருவகை முறைகளுள் தேவார ஆசிரியர் காலந்தொட்டு இடையீடின்றி வழங்கி வருவதும் சைவத்திருமுறைகள் பன்னிரண்டு என்ற பகுப்பிற்கு நிலைக்களமாக அமைந்ததும் பண்முறையே'' (பன்னிரு திருமுறை வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1994, பக். 397, 398).

தமிழ் மொழி, இலக்கிய வரலாற்றில் பண் என்பது வெறும் இசையொடு நில்லாது வாழ்வின் ஓரங்கமாகவும் விளங்குவதை இக்கருத்து உறுதிப்படுத்துகிறது. தமிழரின் இசை வாழ்க்கை குறித்து பழந்தமிழிலக்கியங்கள் தருகின்ற பல செய்திகளின் தொடர்ச்சியாக இப்பண்கள் பற்றிய செய்தியும் விளங்குவதை உணரலாம்.

பண்முறையில் பண்கள் வரிசைப்படுத்தப் பட்டிருப்பதற்கான முறைமையையும், காரணங்களையும் ஆசிரியர் ஆராய்கிறார். நட்டபாடை, தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, யாழ்முரி என முதற்றிருமுறையின் நூற்று முப்பத்தாறு திருப்பதிகங்களும் வரிசைப்படுத்தி அமைக்கப் பட்டுள்ள பாங்கினை ஆய்வுக்குட்படுத்தி விளக்குகிறார்.

ஆசிரியர் கூறும் சில காரணங்களை மட்டும் இங்குக் காண்போம்.

"மறை முதலெழுத்தாகிய 'ஓம்' என்பதிலுள்ள ஓகாரத்தினைத் 'தமிழ்' என்பதன் முதலெழுத்தாக அமைந்த தகர மெய்யுடன் இணைத்துத் தொடங்கிய சிறப்பு 'தோடுடைய செவியன்' எனும்

இத்திருப்பதிகத்துக்கு உண்மையால், "எல்லையிலா மறைமுதல் மெய்யுடன் எடுத்த எழுதுமறை, மல்லல் நெடுந்தமிழ்" எனப் போற்றப் பெற்று முதற்றிருமுறையில் முதற்றிருப்பதிகமாக முறைப்படுத்தப் பெற்றது. திருஞானசம்பந்தர் முதன்முதற் பாடியருளிய இப்பதிகத்தில் அமைந்த பண் நட்ட பாடையாதலின், இப்பண்ணிற் பாடியருளிய திருப்பதிகங்கள் யாவும் 'தோடுடைய செவியன்' எனும் இத்திருப்பதிகத்தை யொட்டி முதற்றிருமுறையின் முதற்கண் வைக்கப் பெற்றன" என்று கூறும் பேராசிரியர் இதற்கு மேலும் ஒரு சான்றையும் முன் வைக்கிறார்.

"ஆளுடையப் பிள்ளையார்க்குக் காலத்தால் முற்பட்ட காரைக்காலம்மையார் அருளிச் செய்த திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டனுள் 'கொங்கை திரங்கி' என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம், நட்டபாடைப் பண்ணில் அமைந்திருப்பது போலவே, பிள்ளையார் அருளிய முதல் திருப்பதிகமும் நட்டபாடைப் பண்ணில் அமைந்திருத்தல் இங்கு ஒப்பு நோக்கி யுணரத்தக்கதாகும்".

"பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் நானிலத்து ஐந்திணை யொழுக்கங்களுக்குச் சிறப்புரிமை யுடையவாகப் பகுத்துரைத்த பழைய தமிழ்ப் பண்களுள் குறிஞ்சிப் பண் முதன்மையுடைய தாதலின் குறிஞ்சிப் பண்ணிலமைந்த பதிகங்கள் தக்கேசிப் பதிகங்களைச் சார வைக்கப்பட்டன. குறிஞ்சியொடு பெயரொற்றுமை யுடைய வியாழக்குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி ஆகிய இரு பண்களிலும் அமைந்த பதிகங்கள் குறிஞ்சிப் பண்ணுக்குரிய பதிகங்களை அடுத்து முறைப்படுத்தப் பெற்றன".

"இயலிசைத் திறத்தில் வேறுபாடுடைமையால் யாழில் இசைத்தற்கு அடங்காத நிலையில் 'யாழ் முரி' எனப் பெயர் பெற்ற இத்திருப்பதிகம், முதற்றிருமுறையில் இறுதித் திருப்பதிகமாக வைக்கப்பெற்றது" (மேலது, பக். 398-401).

இவ்வாறு பண்முறை அமைப்பு ஒவ்வொன்றுக்கும் விளக்கம் தரும் ஆசிரியரின் ஆய்வு அணுகுமுறை கவனத்திற்குரியது. தேவாரத் திருப்பதிகங்களை இயல்வழி, இசைவழி நின்று ஆய்வு செய்வோர் மேற்கொள்ள வேண்டிய ஆய்வு நெறிமுறைகளை இதன்மூலம் வெளிப்படுத்துகிறார் வெள்ளைவாரணர்.

பண்முறைத் தொகுப்பு பற்றிக் கூறும் பொழுதே பழந்தமிழிசை மரபை யொட்டிப் பண்கள் குறித்து ஆராய்கிறார். "ஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பதிகங்கள் அடங்கிய முதல் மூன்று திருமுறைகளிலும் பழந்தமிழ்ப் பண்களாகிய நூற்று மூன்று

பண்களுள் இருபத்திரண்டு பண்கள்அமைந்துள்ளமை இனிது புலனாம்". "முற்காலத்தில் இசைத் தமிழ் நூலார் வகுத்துக் காட்டிய நூற்று மூன்று பண்களுள் (13) செவ்வழி, (17) தக்கராகம், (21) நேர்திறம் - புற நீர்மை, (25) பஞ்சமம், (37) நட்டபாடை, (38) அந்தாளிக் குறிஞ்சி, (41) காந்தாரம், (46) பழம் பஞ்சுரம், (47) மேகராகக் குறிஞ்சி, (49) கொல்லிக் கௌவாணம், (54) பழந்தக்க ராகம், (61) குறிஞ்சி, (62) நட்டராகம், (64) வியாழக்குறிஞ்சி, (69) தக்கேசி, (70) கொல்லி, (73) இந்தளம், (76) காந்தார பஞ்சமம், (80) கௌசிகம், (81) பியந்தைக் காந்தாரம், (82) சீகாமரம், (98) சதாரி என இருபத்திரண்டு பண்கள் முதன் மூன்று திருமுறைகளிலும் இடம் பெற்றுள்ளன" (மேலது, ப. 407, 408). அடைப்புக் குறிகளுக்குள் கொடுக்கப்பட்டிருக்கும் எண்கள் நூற்று மூன்று பழந்தமிழ்ப் பண்களின் வரிசை எண்களைக் குறிப்பனவாகும்.

'தொகுப்பு முறை' எனும் தலைப்பிலமைந்த இப்பகுதியின் இறுதியில் 'தேவாரப் பண்களின் கட்டளை அட்டவணை' என்னும் எட்டுப் பக்கங்களிலமைந்த நீண்ட அட்டவணை 'தொகுப்பு முறை'யின் ஒரு படப்பிடிப்பாக அமைகிறது. திருமுறை எண், பதிக எண், பண், திருமுறை கண்ட புராணம் கூறும் கட்டளைத் தொகை, இப்பொழுது விளங்கும் யாப்பு விகற்பங்கள், கட்டளை வகை என அட்டவணைப் படுத்தப்பட்டு முதல் ஏழு திருமுறைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன (பக். 545 - 552). இங்கு 'கட்டளை வகை' எனும் தலைப்பின் கீழ் அரிய குறிப்புகள் தரப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக "45ஆம் பதிகத்திற்குரிய பண் பழம் பஞ்சுரமே என்பது சேக்கிழார் அடிகள் துணிபாகும்" என்று குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். திருமுறை கண்ட புராணத்தில் 45ஆம் திருப்பதிகமாக அமைந்த 'துஞ்சவருவார்' எனும் பாடல் தக்கராகம் எனக் குறிக்கப்பட்டுள்ளது இங்கு எண்ணுதற்குரியது.

இவ்வாறு திருப்பதிகங்கள் தொகுப்புமுறை பற்றி விளக்கவரும் பொழுது இசையியல் குறித்த பல செய்திகளை ஆசிரியர் விவரித்தலால் அன்னாரின் இசைத்தமிழ்ப் புலமையும் உணரப்படுகிறது.

## இசையமைதி

ஏறத்தாழ ஈராயிரமாண்டுகளுக்கும் மேலாகத் தொன்மை வாய்ந்த, சிறப்பு மிக்க தமிழ் இசை மரபின் அடையாளமாகத் தேவாரப் பண்களே இன்றைக்கு நம்மிடையே எஞ்சியுள்ளன. காலச்சூழலின் வேகத்தில் சிக்கிச் சிதறுண்டு விடாமல் இன்றளவும்

இப்பண்களைப் பாடும் மரபும் தமிழகத்தில் போற்றப்பட்டு வருகின்றது. 'பண் சுமந்த பாடல்'களான இத்திருப்பதிகங்களின் வரலாறு கூறும் நூலில் அவற்றின் 'இசையமைதி' குறித்த செய்திகளை ஆசிரியர் விளக்கியிருக்கும் பண்பு அவரின் இசை வளர்க்கும் ஆர்வத்தைப் பறைசாற்றுவதாக அமைகிறது.

'இசையமைதி' எனும் இத்தலைப்பின் கீழ்த் தேவாரத் திருப்பதிகங்களின் இசையமைதி பற்றி மட்டும் விளக்குவதோடு நில்லாது, தொல்காப்பியம் தொடங்கி இன்று வரையிலான இசைத்தமிழ் வரலாற்றினையும், இசை இலக்கணத்தையும் சுருங்கச் சொல்லி விளக்குகிறார். தேவாரத் திருப்பதிகங்களில் பயின்று வந்துள்ள இசைச் செய்திகளைத் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் முதலான இலக்கியங்களில் காணப்படும் இசையியல், இசை இலக்கணக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு, அவற்றின் வழி நின்று விளக்குகிறார். குறிப்பாக, 'தமிழிசையியல்' பற்றியறிய விரும்புவோர் இப்பகுதியைப் படிப்பதன் மூலம் அது குறித்த அடிப்படை யறிவைப் பெற இயலும்.

இனி, இத்தலைப்பில் வெள்ளைவாரணர் விளக்கியுள்ள சில செய்திகளைக் காணலாம்.

"இசைப் பாடல்கள் இருவகைப்படும்; இயற்புலவன் பாடும் பொழுதே இசையுடன் பாடப்பெற்றன ஒரு வகை; புலவர்களால் முதற்கண் சுத்தாங்கமாகப் பாடப் பெற்ற பின்னர் இசை வல்லாரால் இசையமைக்கப் பெற்றன மற்றொரு வகை. தேவார ஆசிரியர் மூவரும் அருளிய திருப்பதிகங்கள், அப்பெருமக்கள் திருவாயிலிருந்து வெளிவரும் பொழுதே பண்ணார் இன் தமிழாய் வெளிப்பட்ட இன்னிசைப் பாடல்களாதலின் மேற்குறித்த இருவகையிசைப் பாடல்களுள் முதல்வகையில் அடங்கும்" (மேலது, ப. 553) என்று பதிகங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இக்கருத்திற்கு மேற்கோளாகப் "பண்சுமந்த பாடற்பரிசு படைத்தருளும்" எனும் திருவாசக வரியைக் காட்டுகிறார். மேலும், தேவாரம் முழுவதும் இசைப் பாடல்கள் எனும் கருத்தை நிறுவும் வகையில் தேவார மூவரின் பல்வேறு பாடலடிகளைச் சான்றாகக் காட்டுகிறார். எடுத்துக்காட்டாகச் சம்பந்தரின், 'ஏழின்னிசை மாலை', 'பண்பொலி செந்தமிழ் மாலை', 'சந்தமிவை தண்டமிழின் இன்னிசை யெனப் பரவுபாடல்', சுந்தரரின், ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்', திருநாவுக்கரசரின், 'தமிழோடிசை பாடல் மறந்தறியேன்' என்பன போன்ற எண்ணற்ற தொடர்களை ஆசிரியர் எடுத்தாளுவதைக் கூறலாம்.

'வாரம்' என்ற சொல்லுக்கு ஆசிரியர் தரும் விளக்கம் இங்கு உற்று நோக்கற் பாலது.

"தெய்வத்தைப் போற்றிய இசைப் பாடலை 'வாரம்' என வழங்குவர் இளங்கோவடிகள். வாரம் என்ற சொல், முதல்நடை, வாரம், கூடை, திரள் என்னும் இசையியக்கம் நான்கினுள் ஒன்றாய்ச் சொல்லொழுக்கமும் நிரம்பிய இசைப் பாடலைக் குறித்த பெயராகும். இழுமென வொழுகிய இன்னோசையும் செம்பாகமாகப் பொருளுணர்த்தும் தெளிவும் அமைந்தவை மூவர் முதலிகள் அருளிய திருப்பதிகங்களாதலின், அவை 'தேவாரம்' என வழங்கப் பெறுவனவாயின.

"முதல் வழியாயினும் யாப்பினுட் சிதையும்
வல்லோன் புணரா வாரம் போன்றே" (தொல். மரபு. 107)

எனத் தொல்காப்பிய மரபியலிற் காணப்படும் நூற்பாவில் 'இசைத்துறையில்' மிகத் தேர்ச்சி பெற்றவர்களாலன்றி ஏனையோராற் புணர்த்தற்கரிய நுட்பம் வாய்ந்தது வார இயக்கம் என்ற உண்மை உவமையாக எடுத்தாளப் பெற்றமை காணலாம்" என்று கூறி, "மூவர் முதலிகள் அருளிய திருப்பதிகங்கள் இங்ஙனம் இயலிசை நலம் வாய்ந்த வாரப்பாடல்களாக அமைந்தமை பற்றித் தேவாரம் என வழங்கப் பெற்றன என்பதும் நன்கு துணியப்படும்" (மேலது, பக். 591, 592) எனத் 'தேவாரம்' எனும் சொல்லிற்குப் பொருள் தருகிறார்.

தமிழும், இறைவனும் இசை வடிவாகவே விளங்கும் தன்மையைத் திருப்பதிகங்கள் விவரிக்கும் பாங்கிற்கு எண்ணற்ற அடிகளைத் தொகுத்துக் காட்டியுள்ளார். மேலும், திருமுறை இலக்கியக் (பக்தி இலக்கிய) காலத்தில் தமிழர் வாழ்க்கை பக்தியும், இசையும் நிறைந்து விளங்கியதற்கான பல சான்றுகளையும் காட்டுகிறார்.

'இசையமைதி' என்னும் இத்தலைப்பின் கீழ், இசையொலியின் தோற்றம், பண்களின் பிறப்பு, சுருதி, சுரங்களின் பெயர்க்குறிப்புகள், ஆளத்தி என இசையியலின் பல கூறுகளையும் பழம் பாடல்கள் வாயிலாகவும், சிலப்பதிகார உரையிற் காணப்படும் நூற்பாக்களையும் கொண்டு விளக்கம் தர முற்படுகிறார். மேலும், சிலம்பில் கூறப்படும் 'செம்முறைக் கேள்வி' (மூன்று மண்டிலங்கள் - மெலிவு, சமன், வலிவு). குறற்கிரமம், இளிக்கிரமம், தாரக்கிரமம் போன்றவை, சுருதி, அலகு, மாத்திரை, ஆரோசை, அமரோசை, பாலையியல், இணை, கிளை, நட்பு, இசைபுணர்குறிநிலை முதலான பல்வேறு இசைக்குறிப்புகள், கலைச்சொற்கள் பற்றிய விளக்கங்கள் தக்க சான்றுகளுடன்

தரப்பட்டுள்ளன. பல்வேறு இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

இங்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டு மட்டும் தரப்படுகிறது.

"மேலே குறித்த வண்ணம் ஒவ்வொரு பண்ணிற்கும் உரிய முழு அமைப்பினையும் விரித்து விளக்கும் முறையில் இருபத்தொரு இசைத்துறைகளையும் குழல், யாழ் முதலிய இசைக்கருவிகளில் இசைத்துக் காட்ட வல்ல இசையாளர் பலர் பண்டை நாளில் தமிழகத்தில் வாழ்ந்திருந்தனர். இச்செய்தி,

குழலினும் யாழினும் குரல் முதல் ஏழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறல் மரபிற் பெரும்பாண் இருக்கையும்

(இந்திர. 35-7)

எனவரும் சிலப்பதிகாரத் தொடராலும், இத்தொடர்க்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையாலும் நன்கு புலனாம்" (மேலது, ப. 587).

தேவாரத்தில் இடம் பெற்றுள்ள 23 பண்களுக்கும் இலக்கணம் தரப்பட்டுள்ளது. மேலும் இவைப் பகற்பண், இராப்பண், பொதுப்பண் என மூவகையாகப் பகுக்கப்பட்டுள்ளமையைப் பட்டியலிட்டுக் காட்டியிருப்பதுடன் அவற்றுக்கு நிகரான இன்றைய இராகங்களின் பெயர்களும், பாடக்கூடிய காலவரையறை நாழிகையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இன்றைய கருநாடக இசையில் வழங்கிவரும் இராகங்களுக்கு முன்னோடியாக விளங்குபவை தேவாரப் பண்களே என்பதற்கான சான்றுகளை ஆங்காங்கே ஆசிரியர் குறிப்பிட மறக்கவில்லை என்பதைக் கீழ்க்காணும் வரிகள் உறுதிப்படுத்தும்.

"தேவாரப் பண்முறை கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் சிறப்பாக நிலை பெற்று விளங்கியது. கி.பி. 1210-1241இல் வடநாட்டில் தௌலதாபாத் தேவகிரி ராச்சியத்தில் சிம்மணராச சபையில் அவைக்களப் புலவராக விளங்கியவர் சாரங்க தேவர். இவர் தமிழ் நாட்டில் யாத்திரை செய்து இங்கு வழங்கும் தேவாரப் பண்களை நன்குணர்ந்தவர். இவர் தாம் இயற்றிய சங்கீத ரத்னாகரம் என்னும் இசை நுலில் தேவாரப் பண்கள் சிலவற்றின் இலக்கணங்களைப் பொன்னே போல் போற்றி வைத்துள்ளார். தக்கராகத்தின் விபாஷையாகிய 'தேவார வர்த்தநீ' என்றும், மாளவ கைசிகமாகிய 'தேவார வர்த்தநீ' என்றும் தக்கராகம், கௌசிகம் ஆகிய

தேவாரப் பண்களை இவர் முறையே குறித்துள்ளமை காணலாம். எனவே, தேவார திருப்பதிகங்களை முன்னோர் வகுத்த பண் முறையில் இக்காலத்திலும் பாடிக்கேட்டு மகிழ்தற்குரிய வழிமுறைகளை ஆராய்ந்து மேற்கொள்ளுதற்குச் சாரங்கதேவர் இயற்றிய சங்கீத ரத்னாகரம் பெரிதும் துணைபுரியுமெனக் கொள்ளுதல் ஏற்புடையதாகும்" (மேலது, பக். 591, 592).

இதேபோன்று இந்நூலின் இரண்டாம் பகுதியில் காரைக்காலம்மையார் வரலாற்றைக் கூறும் பொழுது பண்கள் குறித்தும், இசைத்தமிழின் மாண்பு குறித்தும் ஏராளமான செய்திகளைப் பதிவு செய்துள்ளார் வெள்ளைவாரணனார்.

## 'இசைத்தமிழ்'

இந்நூலை எழுதியதற்கான தம் நோக்கத்தை நூலின் பதிப்புரையிலேயே கீழ் வருமாறு தெளிவுபடுத்துகிறார் ஆசிரியர்.

"பல்கலைக்கழகத்திற் பயிலும் தமிழ் மாணவர்கள் பண்டைத் தமிழர் வளர்த்த இசைத்தமிழ்த் திறங்களை நன்குணர்ந்து, தென்னாட்டு இசைக்கலை வளர்ச்சியில் பற்றுடையராய்ப் புலமை பெறுதல் வேண்டும் என்னும் நோக்கத்துடன் எழுதப் பெற்றது 'இசைத் தமிழ்' என்னும் நூலாகும். ஆசிரியர்க்கு இசைத்தமிழின் பால் இருந்த பற்றினை இவ்வரிகள் வெளிப்படுத்துவதாக அமைகின்றன.

இசைத்தமிழ் என்னும் இந்நூலில் ஒன்பது இயல்கள் கீழ்க்காணும் தலைப்புகளில் அமைந்துள்ளன.

1. முத்தமிழ்த்திறம்
2. இசை நூல் வரன் முறை
3. இசையமைதி
4. இசைத் தமிழ் இலக்கியம்
5. இசைக்கருவிகள்
6. இசைப்பாட்டின் இலக்கணம்
7. இசைத்தமிழ்ப்பயன்
8. தமிழிசை இயக்கம்
9. இசைத்தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கமாகும் பணிகள்.

தம் வாழ்நாள் முழுவதும் இறைப்பற்றுடன் சிறந்த சிவநெறிச் செல்வராக விளங்கிய வெள்ளைவாரணனார் இந்நூலைத் திருநாவுக்கரசரின் "முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்" எனும் தேவார வரியொடு தொடங்குகிறார். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கான விளக்கத்துடன், ஆசிரியர் "தொல்காப்பியனார் காலத்திற்கு முன்னரே முத்தமிழ்த்திறம் பற்றிய பல இலக்கண நூல்கள் இருந்தன" (இசைத்தமிழ், ஸ்ரீராமகிருட்டின வித்தியாசாலை, சிதம்பரம், 1979, ப. 2) என்ற உண்மையை

உறுதிப்படுத்தும் சான்றுகளுடன் நூலைத் தொடங்குகிறார். தொல்காப்பியத்திலிருந்தும், சிலப்பதிகாரத்திலிருந்தும் இதற்கான சான்றாதாரங்களைக் காட்டுகிறார். இதனைத் தொடர்ந்து வரும் இயல்களின் வாயிலாகத் தொல்காப்பியர் காலம் தொடங்கி இருபதாம் நூற்றாண்டு வரையிலான சுமார் ஈராயிரமாண்டுகட்கும் மேலான தமிழிசையியலை வரலாற்றுப் பின்னணியுடன் சுருக்கமாகவும், தெளிவாகவும் குறிப்பிடுகிறார்.

“இசை நூல் வரன்முறை' எனும் இரண்டாம் இயல் தமிழிசை வரலாற்றினை மிகச் சுருக்கமாகச் சான்றுகளுடன் அளிக்கிறது.

'இசையமைதி', 'இசைத்தமிழ் இலக்கியம்' ஆகிய இரண்டு இயல்களிலும் விளக்கப்பட்டுள்ள செய்திகள் முன்னரே 'பன்னிரு திருமுறை வரலாறு' நூலில் சொல்லப்பட்டவையே. சிலப்பதிகாரம் தரும் இசை இலக்கணம், தேவாரத் திருப்பதிகங்களில் அமைந்த பண்கள், அவற்றின் இலக்கணம் பற்றிய செய்திகளே விரித்துரைக்கப் பட்டுள்ளன. அந்நூலில் காணப்படும் அட்டவணைகள் இந்நூலிலும் இடம்பெற்றுள்ளன. தேவாரத்தில் காணலாகும் பண்கள் அனைத்திற்கும் விரிவான இலக்கணங்கள் தரப்பட்டுள்ளன.

'இசைத்தமிழ் இலக்கியம்' எனும் நான்காம் இயலில் இறுதியாக, திவ்வியப் பிரபந்தங்களில் காணப்படும் பண்களைத் தேவாரப் பண்களோடு ஒப்பு நோக்கி ஆய்வு செய்கிறார் ஆசிரியர். தம் இசையியல் ஆசிரியரான விபுலானந்தர் வழிநின்று இவற்றை ஒப்பு நோக்குவதுடன், இது தொடர்பாக யாழ்நூலில் காணும் பண் - இராகம் அட்டவணையையும் மேற்கோளாக வெளியிட்டுள்ளார்.

எடுத்துக்காட்டாக ஓர் ஒப்புமையை மட்டும் இங்குக் காண்போம்.

> “இடரினும் தளரின மெனதுறு நோய்
> தொடரினு முனதுகழல் தொழுதெழுவேன்
> கடல்தனி அமுதொடு கலந்த நஞ்சை
> மிடறினி லடக்கிய வேதியனே
> இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
> அதுவோ வுனதின்னருள் ஆவடு துறையரனே”

என நாலடிமேல் வைப்பாக ஆளுடைய பிள்ளையார் அருளிய காந்தாரப் பஞ்சமப் பதிகத்தின் இயலிசையமைப்பினை யொத்தமைந்தது,

"வண்டுணு நறுமல ரிண்டைகட்டி
பண்டைநம் வினைகெட வென்றடி மேல்
தொண்டரு மமரரும் பணிய நின்றங்
கண்டமோ டகலிட மளந்தவனே
ஆண்டாயுனைக் காண்பதொ ரருளெனக் கருளுதியேல்
வேண்டேன்மனை வாழ்க்கையை விண்ணகர் மேயவனே"

எனத் திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமொழித் திருப்பதிகமாகும். இதனை 'நாலடி மேல் வைப்பு' ஆகப் பதிப்பித்தலும் மேற்குறித்த காந்தார பஞ்சமப் பண்ணமைந்திடப் பாடுதலும் இயலிசையறிஞர் கடனாகும். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் திருவாய்மொழிப் பதிகங்களுக்கு மட்டும் பழைய மரபினையடி யொற்றிய பண்ணுந் தாளமும் குறிக்கப் பெற்றுள்ளன" (மேலது, ப. 116, 117).

இந்த ஒப்பாய்வின் முடிவாக அவர் கூறும் கருத்து இயல், இசையறிஞர்களின் கவனத்திற்குரியது.

"பதின்மூன்று பண்கள் தேவாரத்திற்கும் திருவாய் மொழிக்கும் பொதுவாக வுள்ளன என்பதும், தேவாரத்திற் காணப்படாத ஆறு பண்கள் திருவாய் மொழியில் உள்ளன என்பதும், திருவாய்மொழியிற் காணப்படாத எட்டுப் பண்கள் தேவாரத்திலுள்ளன என்பதும் பெறப்படும். பண்ணுக்கு நேராகக் குறிக்கப்பட்ட இராகங்களின் பெயர்கள் ஒரு பண்ணுக்கே பலவாகவும், பலபண்களுக்குப் பொதுவாகவும் வரையறையின்றி யுள்ளமையை நோக்குமிடத்து இவை பிற்காலத்தாரால் விரும்பிய வண்ணம் வகுக்கப்பட்டன வென்பது புலனாகும்" (மேலது, ப. 119). யாழ்நூலின் அடிப்படையிலேயே இம்முடிவுக்கு ஆசிரியர் வருகிறார் என்பது நோக்கற்பாலது.

'இசைக்கருவிகள்' என்னும் ஐந்தாம் இயல் இந்நூலின் ஒரு முக்கியமான, சிறப்புமிக்க பகுதியாகக் கருதத்தக்கது. குழல், யாழ், தோற்கருவி, கஞ்சக் கருவி ஆகிய தலைப்புகளின்கீழ்ப் பழந்தமிழ் இலக்கியங்கள், தேவாரம் முதலியனவற்றிலிருந்து ஏராளமான சான்றுகளுடன் தமிழ்நாட்டு இசைக்கருவிகள் பற்றி விவரிக்கப் பட்டுள்ளது. யாழும் வீணையும் வெவ்வேறு இசைக்கருவிகள் என்பதையும், வீணையும் பழங்காலத் தமிழிசைக் கருவியே என்பதையும் தக்க இலக்கியச் சான்றுகளுடன் நிறுவ முற்படும் ஆசிரியரின் பண்பு இந்நூலின் ஒரு முக்கிய அம்சமாகும். இது குறித்த ஆசிரியரின் கருத்து இங்கு உற்று நோக்கத்தக்கதாகும்.

"செங்கோட்டி யாழினை அடியொற்றியமைந்தது, வீணை யென்னும் இசைக்கருவியாகும். பழந்தமிழர் கையாண்ட

யாழ்க்கருவியும் இக்காலத்தில் நம் நாட்டில் வழங்கும் வீணைக் கருவியும் ஒன்றே என்பர் சிலர். சங்கத் தொகை நூல்களில் யாழைத் தவிர வீணையென்பதொரு கருவி கூறப்படவில்லை. இளங்கோவடிகள் காலத்தில் வீணையென்றதோர் இசைக்கருவி தமிழ் நாட்டில் வழங்கியதென்பது,

"நாரதன் வீணை நயந்தெரி பாடலும்"

எனவரும் சிலப்பதிகாரத் தொடராற் புலனாம்.

யாழும் வீணையும் இருவேறு கருவிகள் என்பது

"அறைகலந்த குழல்மொந்தை வீணையாழும்" (6-40-2)

"பண்ணொடி யாழ்வீணை பயின்றாய் போற்றி" (6-57-10)

"ஏழிசை யாழ்வீணை முரலக் கண்டேன்" (6-77-1)

எனத் திருநாவுக்கரசு அடிகளாரும்,

"குடமுழவங் கொக்கரை வீணைகுழல் யாழ்" (ஆதியுலா)

எனச் சேரமான் பெருமாள் நாயனாரும்,

"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்" (திருவாசகம்)

எனத் திருவாதவூரடிகளும்,

"- - - - - - - - - - - - - புகலுமிசை
நேர்வைத்த வீணைக்கும் யாழுக்கும் நிலைவகையிற்
சேர்வுற்ற தந்திரிகள்" (பெரிய. திருநாளைப். 14)

எனச் சேக்கிழாரடிகளும் இவ்விரண்டினையும் இருவேறு இசைக்கருவிகளாகப் பிரித்துரைத்தலால் இனிது புலனாம்" (மேலது, பக். 127-128).

இக்கருத்தினை நிறுவ மேலும் பல ஆதாரங்களையும் முன் வைக்கிறார். "சங்க காலத்திற்குப் பின் தோன்றிய நூல்களிற் குறிக்கப் பெற்றுள்ள வீணையாகிய நரம்புக் கருவி, ஒரே முறையில் தொடர்ந்து செல்லும் தொடரிசையினை வாசித்தற்கேற்றது. பழந்தமிழர் கையாண்ட யாழ்க்கருவி தொடரிசையுடன் பலரும் சேர்ந்து பாடும் நிலையில் அமைந்த ஒத்திசைப் பண்களை வாசித்தற்கேற்ற அமைப்புடையதாகும்" என்று தமக்கே யுரிய முறையில் விளக்குகிறார் வெள்ளைவாரணனார்.

'இசைப்பாட்டின் இலக்கணம்' எனும் அடுத்த இயலில் தொல்காப்பிய நூற்பாக்கள் சிலவற்றிலிருந்தும், சிலம்பு, பஞ்சமரபு, பெரியபுராணம் முதலான நூல்களிலிருந்தும் மேற்கோள்களை எடுத்தாண்டு இசை இலக்கணம் பற்றி விவரிக்கிறார். எடுத்துக் காட்டாக, "இக்காலத்தில் தென்னாட்டில் வழங்கும் இசை முறையில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் உறுப்புடைய கீர்த்தனம் என்னும் இசைப்பாடலமைப்பு, தொல்காப்பியச் செய்யுளியலில் கூறப்படும் ஒத்தாழிசைக் கலியின் அமைப்பினை அடியொற்றியது என்பது நன்கு புலனாம்" என்ற ஆசிரியரின் கருத்தும் (மேலது, ப. 150), தேவபாணி - தேவாரம் பற்றிய ஒப்புநோக்குதலும் இயல், இசையாய்வாளர்க்கு ஒளி கூட்டுவதாக அமையும்.

'தமிழிசை இயக்கம்' குறித்த வரலாற்றினைப் பதிவு செய்ததுடன், 'இசைத் தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கமாகும் பணிகள்' எனும் இறுதி இயலில் யாழ்நூலின் சிறப்பியல்புகளையும், பயன்பாடு களையும் வலியுறுத்தி இதனைத் தமிழர்கள் யாவரும் கற்றுணர வேண்டும் எனும் தமது அவாவையும் வெளிப்படுத்துகிறார்.

## ஆய்வு நெறி

தமிழியல் அறிஞரான வெள்ளைவாரணனார், யாழ்நூல் யாத்த விபுலானந்தரின் நட்பால் இசைத்தமிழிலும் நாட்டம் கொண்டார். யாழ்நூலை இயற்றுவதில் ஆசிரியர்க்குப் பெரும் துணை புரிந்ததன் வாயிலாகத் தமிழ் இசையியலின் நுட்பங்களை உணர்ந்து கொண்டார். இதன் காரணமாக, இவரது ஆய்வுநெறிமுறைகள் முழுவதுமாக யாழ்நூலையே அடிப்படையாகக் கொண்டன. சிறந்த சிவநெறிச் செல்வராகவும் தேவாரப் பாடல்கள், நாயன்மார்களிடம் ஆழ்ந்த பற்று கொண்டவராகவும் விளங்கியதால் தம் இசைத் தமிழாய்விற்கான களமாகத் தேவாரத் திருப்பதிகங்களையே அமைத்துக் கொண்டார். இசைத்தமிழ் சார்ந்த மேற்சுட்டிய இருநூல்களிலும், பிற கட்டுரைகளிலும் இவற்றினடிப்படையிலேயே தம் கருத்துகளைத் தெரிவிக்கிறார்.

இதன் காரணமாகவே தமிழிசையின் முதல் நரம்பாக 'இளி'யைக் குறிப்பிட்டு ச - எனும் முதல் சுரம் 'இளி'யே யாகும் எனத் தம் ஆசிரியர் வழி நின்று கூறினார். இதேபோன்று சில பண்களுக்கான தற்கால இராகங்களை யாழ்நூல் கூறியவாறே கூறினார். ஆபிரகாம் பண்டிதர், பண்ணாராய்ச்சி வித்தகர் சுந்தரேசனார், எஸ். இராமநாதன், வீ.ப.கா. சுந்தரம் முதலான இசைத்தமிழறிஞர்களும் அவர்கள் வழி வந்தவர்களும் முதல் நரம்பு 'குரல்'; அதுவே 'ச' எனும் முதல் சுரத்திற்கானது என்ற கருத்தை நிறுவினர்.

இவரின் ஆய்வுநெறி குறித்த தமிழிசைக் கலைக்களஞ்சிய ஆசிரியர் வீ.ப.கா. சுந்தரனாரின் கருத்து இங்கு உற்று நோக்கத்தக்கது; அறிஞர்களின் சிந்தனைக்குரியது.

"இவர் தாம் ஆழ்ந்து கற்ற தமிழ் இலக்கியத்தின் வழியாகத் தேவாரப் பண்களை ஆராய்ந்திருந்தால். . . . பண்ணாய்வு மலர்ச்சியுற்றிருக்கும். பண்ணாய்வில் ஓதுவார்கள் கூறியதைக் கூறல் என்னும் நெறியைப் பின்பற்றினார். நிகண்டுகளைப் பின்பற்றி முல்லையும் செவ்வழியும் ஒன்றென்றார். ஆனால் முல்லைப்பண் முல்லைக்குரியது; செவ்வழி நெய்தலுக்குரியது. இவ்வாறு சிலம்பு வேறுபாடு கூறுகிறது. இன்றைய சட்சமம் (ச) பண்டைய இளி என்ற தம் குருவின் கோட்பாட்டின் மூலம் இக்கோட்பாட்டினர் பண்களுக்குரிய நரம்பு அடைவுகளைக் காண இயலாமலே போயிற்று" (தமிழிசைக் களஞ்சியம், தொகுதி 3, பக். 266-267).

இசைத் தமிழறிஞர்கள் கருத்துகள் வேறுபட்டாலும், வெள்ளைவாரணனாரின் இசைத்தமிழ்ப் பணியை எவரும் குறைத்து மதிப்பிட இயலாது.

### நிறைவுரை

"உலகமெலாங் களிகூர ஒளிர்தமிழி னியல்வளர
இலகுதமி ழிசை வழக்கே எம்மருங்கும் வளர்ந்தோங்கப்
புலவருளங் களிகூர யாழ்நூல்செய் புலவர்பிரான்
மலரடியென் சென்னியினு மனத்தகத்தும் மலர்ந்துளவால்"

எனத் தம் ஆசிரியரைப் போற்றிய வெள்ளைவாரணனார் அவர்தம் இசைக்கொள்கை வழிநின்று இசைத் தமிழாய்வுகளை மேற்கொண்டது இயல்பான ஒன்றேயாகும். 'பன்னிரு திருமுறை வரலாறு' எனும் பெருநூலின் வாயிலாகவும், 'இசைத்தமிழ்' எனும் நூலின் வாயிலாகவும், பிற ஆய்வுக்கட்டுரைகள், கருத்தரங்க உரைகள் மூலமாகவும் மிக நீண்ட வரலாற்றினையுடைய இசைத்தமிழின் அருமை, பெருமைகளையும், இலக்கணச் சிறப்புகளையும், இலக்கிய வளத்தினையும் தமிழுலகிற்கு வழங்கியுள்ளார். அவரது பெருநூல் 'திருமுறைக் கருவூலம்' என்று போற்றப்படுகிறது. அறிவியல் பூர்வமாகவும், தருக்க ரீதியாகவும், இலக்கிய, வரலாற்று, கல்வெட்டுச் சான்றுகள் மூலமாகவும் தமது ஆய்வுக் கருத்துகளை முன்வைக்கும் இவரது ஆய்வுநெறி பிற ஆய்வாளர்கள் பின்பற்றத்தக்கதாகும். ஆய்வாளர் ஒருவருக்குத் தேவையான விருப்பு வெறுப்பற்ற பண்பு, குறுகிய நோக்கமின்மை, பரந்த மனத்துடன் அணுகுதல் ஆகிய நற்பண்புகள் ஒருங்கேயமையப் பெற்றவர் வெள்ளைவாரணனார் என்பதை இவர்தம் படைப்புகள் மெய்ப்பிக்கின்றன என்பதில்

ஐயமில்லை. இசைத்தமிழ் பற்றிய நூலில் சாரங்க தேவரையும், வேங்கடமகியையும், அவர் உருவாக்கிய 'சதுர்தண்டி வீணையையும்' போற்றிப் புகழும் பண்பு ஆய்வாளரான இவரின் குண நலத்திற்கு ஒரு சிறந்த சான்றாகும். இசைத்தமிழ் வளர்ச்சியில் இவருக்கிருந்த அளவற்ற ஆர்வத்தினை ஆங்காங்கே இவர் பதிவு செய்துள்ளமையைக் காண முடிகிறது. "பண்களைப் பற்றியும், பிற வடிவங்கள் பற்றியும் இசையறிஞர்களிடையே கருத்தொற்றுமை ஏற்படவில்லையாயினும் தமிழிசை வளர்ந்து செழித்தோங்கும் வகையில் புதிய பண்ணமைப்புகளை உருவாக்கித் தமிழ்ப் பாடல்களைப் பாடி உலக முழுதும் இசைக்கலைஞர்கள் பரப்ப வேண்டும்" எனும் இவரது கருத்து (இசைத் தமிழ், பதிப்புரை) சிந்தித்தற்குரியது.

தமிழ்ச்சூழலில், வெள்ளைவாரணனார் இசைத்தமிழ்ப் பணி குறித்த செய்திகள் அறியப்படாத நிலையில் ஒரு தமிழியலறிஞராகவே கருதப்படுகிறார். ஆயினும் இவரது நூல்கள் இவர்தம் ஈடு இணையற்ற இசைத்தமிழ்ப் பணியினைப் பறைசாற்றுகின்றன. இவரின் இத்தமிழ்ப்பணி தமிழுள்ளளவும் நினைவுகூரப்படும் என்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113
### அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| இலக்கிய இதழ்கள் | 110.00 |
| இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் - தொகுதி 3 | 60.00 |
| மகாவித்துவான் ரா. ராகவையங்கார் | 30.00 |
| தமிழில் பிற துறைக் கோட்பாட்டாய்வுகள் | 25.00 |
| வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை | 25.00 |
| இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி | 35.00 |
| தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின்தமிழ்த்தொண்டும்மொழியியல்பங்களிப்பும் | 25.00 |
| இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும் | 40.00 |
| பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும் | 80.00 |
| தமிழெனப்படுவது | 115.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கணம் & மொழியியல் | 105.00 |
| வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும் | 70.00 |
| தொல்லியல் நோக்கில் சங்ககாலம் | 45.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு (தொன்மை முதல் கி.பி.500 வரை) | 45.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு (கி.பி.501 - கி.பி.900) | 70.00 |
| பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் | 35.00 |
| திருமணம் செல்வக்கேசவராய முதலியார் | 30.00 |
| அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார் | 55.00 |
| சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார் | 40.00 |
| மூதறிஞர் மு. இராகவையங்கார் | 40.00 |
| ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு | 30.00 |
| தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் | 45.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1 | 80.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2 | 85.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3 | 95.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 180.00 |
| நாவல்கலையியல் | 50.00 |
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி | 60.00 |
| சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |


Pub.No. 535 சித்தாந்த செல்வர் க. வெள்ளைவாரணனார் 25.00